தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 243

# அதிரியர் அம்மானை

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

தஞ்சாவூர் சரசுவதி மகால் வெளியீட்டு எண் : 243

# அதிரியர் அம்மானை

சிறப்புக்கேண்மை பதிப்பாசிரியர் :

பேராசிரியர் **பொ. சாம் டானியல்,** M.A., Ph.D

முன்னாள் பேராசிரியர்,

கான்ஸ்தன்தயின் பல்கலைக்கழகம், அல்ஜீரியா

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூலகம்**

தஞ்சாவூர்.

2007] [விலை : ரூ. 50-00

# நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | அதிரியர் அம்மானை |
| பதிப்பாசிரியர் | : | பேராசிரியர் பொ. சாம் டானியல் |
| வெளியிடுபவர் | : | இயக்குநர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர். |
| வெளியீட்டு எண் | : | 243 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | இரண்டாம் பதிப்பு |
| வெளியீட்டு நாள் | : | மே, 2007 |
| தாள் | : | TNPL 18.6 kgs. |
| நூல் அளவு | : | 24 x 14 c.m. |
| பக்கங்கள் | : | 128 |
| படிகள் | : | 1000 |
| எழுத்து | : | 12 புள்ளி |
| அச்சிட்டோர் | : | சரசுவதி மகால் நூலக அச்சகம், தஞ்சாவூர். |
| புத்தகக்கட்டு | : | மெலிந்த அட்டை |
| பொருள் | : | அம்மானை |
| விலை | : | ரூ. 50-00 |

# வெளியீட்டாளர் முகவுரை

பன்மொழிச் சுவடிகளின் கருவூலமாகவும் பன்மொழி நூல்களின் களஞ்சியமாகவும் திகழ்ந்து வருவது நம் சரசுவதி மகால் நூலகமாகும்.

இலக்கியம், மருத்துவம், வரலாறு, சோதிடம் முதலிய பல்துறைகளைச் சார்ந்த பல்லாயிரக்கணக்கான சுவடிகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்த நூலகம், அவற்றுள் அருமைவாய்ந்தவற்றைத் தக்க நுண்மான் நுழைபுலச் சான்றோர்களைக்கொண்டு பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது.

**அதிரியர் அம்மானை** என்னும் இந்நூல் அர்ச்சியசீஷ்டர் என்பவரால் 1913இல் எழுதி முடிக்கப்பட்டது. இந்நூலகத்தில் தமிழ்ப்பிரிவிலுள்ள சுவடி எண். 546-ஏ என்ற சுவடியை ஆதாரமாகக்கொண்டு பதிப்பிக்கப்பட்டது. தமிழ்நாட்டில் பெண்கள் ஆடும் விளையாட்டுக்களுள் அம்மானை என்பதும் ஒன்று. அம்மானை பல்வகைக்கூத்து வகைகளில் ஒன்று. நாடோடிப் பாடல்களில் கதையைத் தழுவிவரும் நெடும் பாடல்கள் பல அம்மானை என்ற பெயரோடு வழங்கி வருகின்றது. புகழேந்திப் புலவர் சோழனாற் சிறைப்பட்டிருந்தபோது அல்லியரசாணி மாலை முதலிய அம்மானைப் பாட்டுக்களைப் பாடி, அந்த வழியே செல்லும் மகளிருக்குக் கற்பித்துப் பாடச்செய்தார் என்று ஒரு கர்ண பரம்பரைச்செய்தி வழங்குகிறது. அது வெறும் புனைந்துரையானாலும், பெண்கள் பாடுவதற்குரிய இந்த அம்மானைப் பாடல்கள் என்ற உண்மையைத் தெரிவிப்பதாகக் கொள்ளலாம். அல்லியரசாணி மாலை, பவளக்கொடி மாலை என்பன போன்ற எல்லாக் கதைப் பாட்டுக்களும்அம்மானைப் பாட்டைச் சார்ந்தனவே. அவற்றில் சில பாட்டுகளுக்கு அம்மானை என்ற பெயரே

அமைந்துள்ளது. கள்ளழகர் அம்மானை, வைகுந்த அம்மானை என்பன இதற்கு உதாரணங்கள். இத்தகைய பாடல்களில் நாடோடிப் பாடல்களின் இயல்புகள் யாவும் இருக்கும் கொச்சை மொழிகள் உலக வழக்குச் சொற்கள். யாவருக்கும் விளங்கும் உபமானங்கள். ஒரு செய்தியையே மட்டும் சொல்லுதல், சிலவகையான வாக்கியங்கள் எல்லாப் பாடல்களிலும் வருதல் முதலியவற்றை இந்த அம்மானைப் பாடல்களில் காணலாம்.

அதிரியர் அம்மானை எனும் இந்நூலை ஆர்வத்துடனும், கிருத்துவ மத கோட்பாடுகளுக்குக் குறைபடாமலும் பதிப்பித்த கான்ஸ்டென்டைன் பல்கலைக்கழகம், அல்ஜீரியா, முன்னாள் பேராசிரியர் பொ. சாம். டானியல் என்பார்.

இவர் தமது தெளிந்த தமிழாற்றலாலும், நிறைந்த அனுபவத்தாலும் சுவடியிலுள்ள குறைபாடுகளைக் களைந்து மிகச் சிறப்பாக இந்நூலைப் பதிப்பித்துள்ளார். அன்னாருக்கு எங்கள் உளமார்ந்த நன்றிகள் பல.

இந்நூல் வெளிவர நிதியுதவி வழங்கிய நடுவண் அரசுக்கும், இந்நூல் நன்முறையில் வெளிவர துணைநின்ற நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூல் கணினியில் வெளிவர கணினிப் பிரிவில் பணிபுரியும் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

*தஞ்சாவூர்*
*13-5-2007*

# பதிப்புரை

இந்திய தேசீய நூலகங்களில் (National Libraries) ஒன்றான தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம், அங்கு பாதுகாக்கப்படும் அச்சிடப்படாத பல ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து அறிவுலகுக்கு அளிக்கும் அரியபணியில் ஈடுபட்டுள்ளது. பல்லாண்டுகாலமாக சிதலரித்தும், சிதைந்தும் கிடந்த இலக்கியச் செல்வங்களைச் சேகரித்து அவற்றைச் சிறப்புடன் பாதுகாக்கும் இந்நூலகத்தின் பணி பாராட்டுதற்குரியது.

மாமறைதிரு. சாம் பொன்னையா, வேலூர் பேராயர்; மறைதிரு. ஜார்ஜ் ஞானமுத்து, தஞ்சை; மறைதிரு. எசேக்கியேல் துரைராஜ், தஞ்சை ஆகியோருடன் மார்ச்சு திங்கள் 5-ஆம் நாள் இந்நூலகம் சென்று கலைச்செல்வங்களைக் கண்டு களிக்கலானோம். அப்போது நூலக நிருவாக அதிகாரி திரு அ. பஞ்சநாதன் எம். ஏ., பி. லிப். சி., அவர்கள் கிறித்தவ இலக்கியங்கள் பல அச்சிடப்படாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். தேற்சி பெற்ற கிறித்தவ அறிஞர்கள் இச்சுவடிகளை ஆராய்ந்து அச்சிட முன்வரவில்லை என்பதையும் வேதனையுடன் குறிப்பிட்டார். இதனைக் கேட்ட பேராயரும், குருக்களும் இவ்வருட்பணியை மேற்கொள்ள என்னை ஊக்குவித்தனர். சிறிது தயக்கத்துடன் அவர்கள் அறிவுரையை ஏற்றுக் கொண்டேன். நிருவாக அதிகாரி ''அதிரியாரம்மானை'' என்றும் நூலின் ஏட்டுப் படியை என்னிடம் ஒப்படைத்தார்.

ஏட்டுப்படியைப் பெற்று அதைப் படிக்க ஆரம்பித்த உடனேயே சிக்கல்கள் பல தோன்றின. ஏட்டுப்படியில் பல சொற்களும், சொற்றொடர்களும் சிதைந்தும், அழிந்தும் காணப்பட்டன. ஓலைச்சுவடிகள் உதவலாம் என்ற எண்ணத்துடன் அவற்றைப்பிரித்தவுடன் ஒடிந்து,

சிதைந்த சுவடிகள், அவற்றைத்தொட வேண்டாம் என எச்சரித்தன. நாட்டுப்பாடல்களின் மூலப்படிவம் காண்பதும், அதன் காலம் கண்டு கொள்ளுவதும் இயலாத ஒன்று. நமது சமூக, சமுதாய சூழ்நிலையை ஒட்டிய நிகழ்ச்சிகளை ஓரளவுக்கேனும் கற்பனை செய்து செப்பமிடலாம். இரண்டாம் நூற்றாண்டில் ரோமாபுரியில் நடந்த ஒரு நிகழ்ச்சியைச் சித்தரிக்கும் ''அதிரியாரம் மானை'' என்னும் ஏட்டுப்படியை ஆராய்ந்து பதிப்புச் செய்ய போதிய குறிப்புக்களும், சமய, சமுதாய அறிவும் குறைபட்டகாரணத்தால்,பிறவல்லுனர்களின்(specialists) உதவி இன்றியமையாததாயிற்று.

புலவர். செல்வி. அ. ஜோஸ்பின், எம். ஏ., பி. எட்., முதுநிலைத் தமிழாசிரியை, தூய இதய மேல் நிலைப் பள்ளி, தஞ்சை; திருமதி. சந்திரா விக்டர், எம். ஏ., பி. எட்., முதுநிலைத் தமிழாசிரியை, பிளேக் மேல் நிலைப் பள்ளி, தஞ்சை; டாக்டர். திருமதி. அரோமா குளோரி சாம், எம்.ஏ., பி எச். டி., பதிப்பாசிரியர், களஞ்சியமையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை; புலவர் தாமஸ் உடையார், ஓய்வு பெற்ற தமிழாசிரியர், தூய இதய உயர் நிலைப்பள்ளி, தஞ்சை; தந்தை அமுதன் அடிகளார் பத்திரிகை ஆசிரியர்,வேளாங்கண்ணிகுரல்ஒலி (ஆங்கிலமும் தமிழும்), தஞ்சை; டாக்டர். ப. கிருட்ணன், எம். ஏ., பி எச். டி., உதவிப்பதிப்பாசிரியர், களஞ்சிய மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை ஆகியோரின் உதவியுடன் ஓரிருமாதங்களில் பதிவு செய்ய முடிந்தது. இவர்களின் ஒத்துழைப்பின்றி இவ்வளவு சிறப்புடன் இப்பணியை முடிப்பது இயலாததாகும்.

சிதைந்த இடங்களைப் பொருட் செறிவுடன் செப்பனிடுதலில் பல சிக்கல்கள் உண்டு. அவ்வாறு செப்பனிடுதல் பதிப்பறமும் ஆகாது. எனினும் இயன்ற

அளவு பொருட் சிதைவை அகற்றி அமைத்த சொற்களை அடைப்புக் குறியினுள் குறித்தும், சொற் சிதைவு பொருத்த இடங்களை (............) என்ற புள்ளிகள் இட்டும் அச்சிடப்பட்டுள்ளது. இதுவரைக் கற்று அறியாத நிகழ்ச்சிகள் இப்பாடலில் இடம் பெறுவதால் சிதைந்த அடிகளில் காணும் பொருள் சிதைவை கண்டு கொள்ள கடின உழைப்பு தேவைப்படும். பிற்கால ஆராய்ச்சிகளுக்கும் உதவி புரியும்.

**நன்றியுரை:**

'அதிரியான் அம்மானை' என்னும் நூலை பதிப்பித்து வெளியிட என்னை அழைத்து அனுமதி அளித்த மேதகு தஞ்சை மாவட்ட ஆட்சியரும், இந்நூலக இயக்குநரு மாகிய உயர்திரு. T. R. **இராமசாமி,** I. A. S அவர்கட்கு என் உளம் கனிந்த நன்றி. என்னை ஊக்கு வித்து இப்பணியில் ஈடுபடச்செய்த நூலகப் பொறுப்பு அதிகாரி திரு. **பஞ்சநாதன்** M. A., B. Lib., Sc., அவர்கட்கும் என் நன்றி உரித்தாகுக. இந்த நூலை, குறித்த நாட்களுக்குள் சிறந்த முறையில் அச்சிட்டு வெளியிட உதவிய **ராம் பிரிண்டர்ஸ்** அவர்களுக்கும் என் நன்றி. எனது அன்னை திருமதி. தேவனேசம் பொன்னையா அச்சு படிவம் திருத்தம் செய்து உதவி னார்கள். இப்பணியில் உதவிய அனைவருக்கும் நன்றி.

**பா. சாம்டானியல்**
முன்னாள் பேராசிரியர்
காச்ஸ்தன்தயின் பல்கலைக் கழகம்
அல்ஜீரியா.

9—6—1986.

# ஆய்வுரை

## அம்மானை(ப் பாடல்)

### நாட்டுப் பாடல்கள்

பேச்சுமொழி ஏட்டுமொழிக்கு முந்தியது. மனிதனின் மொழி ஏட்டில் இடம்பெறும் முன்னரே அவன் இதயத்தில் இசை இடம் பெற்றுவிட்டது. இலக்கியங்களுக்கு இசை அடிப்படையாக அமைந்தமையால் இலக்கிய வகைகளில் இசைக்கலை உயர்ந்தது, தூய்மையானது என்று மொழி அறிஞர் கருதுவர். மனிதன் தன்னை இன்புறப்படைத்த படைப்புகளில் இசையே முந்தியது. இவ்விசை இன்பதுன்பங்களை எதிரொலிக்கும் தூய தொனியாகத் தென்படும். மொழியோடு கலந்து வெளிப்படும் இசையால் பாமரரும், பண்டிதரும், ஆடவரும், பெண்டிரும் நெஞ்சுருகி நிற்கும் நிலை எய்துவர். தனியொருவர் பாடும் பாட்டிசையில் மயங்கிய மக்கள் பலராகச்சேர்ந்து பாடி மகிழலாயினர். சேர்ந்துபாடும் பாடல்கள் தாங்கள் புரியும் வேலைகளின் சிரமம் தணிந்து இன்ப ஆக்கத்திற்கு வாயிலாக அமைகின்றன. மாறுபட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப உழவு, நெசவு, நெல்லிடித்தல், தோணி ஓட்டுதல், மீன்வலை இழுத்தல், பழு இழுத்தல், விறகு வெட்டுதல், ஆடு மேய்த்தல், மண்பாண்டம் செய்தல், பாய் முடைதல் முதலிய தொழில்கள் புரியும் வேளைகளில் களைப்பை உணராவாறு சுவைமிக்க பாடல்கள் பாடி மகிழ்ந்தனர். (டாக்டர். அ. மா. பரிமளம், 1979). கிராம வாழ்க்கைக்கு ஆதாரமான உழைக்கும் மக்களே இப்பாடல்களைப் பாடுகிறார்கள், அல்லது கேட்கிறார்கள். அவர்களுடைய பண்பாட்டில் இப்பாடல்கள் ஒரு அம்சமாக விளங்குகின்றன. எனவே உழைக்கும் ஊரக மக்களின் பண்பாட்டை அறிந்துகொள்ள விரும்புவோர் இப்பாடல்

களைப் பற்றி அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும் நா. வானமாமலை, 1971).

கதையடக்கிய நாட்டுப்பாடல்கள் தமிழ்நாட்டில் ஏராளம் உண்டு. இவ்வகை நாட்டுப்பாடல்கள் கட்டுப் பாடற்ற கற்பனைக் களஞ்சியங்கள்; வடியா நாவில் எழுந்த உணர்ச்சிப் பிழம்புகள்; சமுதாயத்தின் உயிர் துடிப்புகள், இசையோடு கலந்த எழுதாமறைகள் ஆகும். நாட்டுப்பாடல்கள் பல்வேறு பெயர்களில் வழங்கப்படு கின்றன. அவை வாய்மொழி இலக்கியம், நாடோடி இலக்கியம், நாடோடிப் பாடல், நாட்டார் பாடல், நாட்டுப்புறப்பாடல், மக்கள் இலக்கியம், பாமரர் பாடல்கள், கிராமப் பாடல், சமுதாய இலக்கியம் என அழைக்கப்படுகின்றன.

இவைகளை நன்கு ஆராய்ந்தால் பல வரலாற்றுப் பகுதிகள் நிரம்பி நிற்பதைக் காணலாம். பாடல்களோ செம்பகமாக யாவரும் அறியக் கூடிய நிலையில் இருக்கும். இவைகள் தமிழ்நாட்டு வரலாற்றின் ஆதாரங்களைக் கொண்டிருக்கின்றன. இந்நாட்டுப் பாடல்கள் ஏடுகளில் மிகுதியாக ஏறவில்லை. மரபியலில் பாடப்பட்டு வந்தன. எனவே இரண்டு மூன்று நூற்றாண்டு வரலாற்றுகளிலேயே இவைகள் காணப் படுகின்றன. மனிதனை உருக்கித் தள்ளும் நிகழ்ச்சிகளே இப்பாடல்களுக்கு ஆதாரங்களாக நிற்கின்றன. அவைகள் பெரும்பாலும் இரு கட்சிக்காரர்களுக்குள் நடக்கும் போர்களாக இருக்கும், அல்லது ஒரு தனி ஆள் செய்த அற்புத வீரச் செயலாக இருக்கும். இவ் வகையான அடிப்படையைக் கொண்டதே நாட்டுப் பாடல் என்று வழங்கி வருகின்றன. சமீபகாலத்தில் தான் இவற்றில் சில பாடல்கள் ஏடுகளில் எழுதப் பட்டன, சில அச்சிடப்பட்டன, பல மரபியலாகவே

இருந்து வருகின்றன. (சி, எம். இராமச்சந்திரஞ் செட்டியார், 1978)

இவ்விலக்கியத்தை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பழங்குடி மக்களிடம் வழங்கும் கதைகள், பாடல்கள், பழமொழிகள் போன்றவை முதல்வகை. இரண்டாம் வகை நாகரிகம் வாய்ந்த மக்களிடம் வழங்கும் நாடோடி இலக்கியம். இவ்விலக்கியம் புராணக் கதைகளை அடிப் படையாகக் கொண்டவையாகவும், வீரச்செயல்களை விளக்குவனவாகவும் அமையும். நாடோடிப் பாடல்கள் அமைப்பிலும், கருத்துகளிலும் பலவகைப்படும். அவை களில் சில சிறு கவிதைகளாகவும், சில பெருங் காப்பியங்கள் போன்றும் அமைந்துள்ளன. இன மொன்றின் தொன்றுதொட்ட பழக்க வழக்கங்களை நாட்டுப்பாடல்கள் பின்வரும் தலைமுறைக்கு உணர்த்து கின்றன. சமூகம், சமயம் இவற்றை அறிய நாட்டுப் பாடல்கள் உறுதுணையாயுள்ளன. சங்க இலக்கியங்கள் எழுந்த காலத்தில் வாய்மொழிப் பாடல்களாகவே அமைந்தன எனச் சிலர் கருதுகின்றனர். சிலப்பதிகார வரிப்பாடல்கள் நாட்டுப் பாடல்களின் அடிப்படையில் எழுந்தவை என்பார் பேராசிரியர் தெ. போ. மீனாட்சி சுந்தரனார். பக்தி இலக்கியங்களிலும் நாட்டுப்பாடல் களின் சாயலைக் காணலாம். பிற்கால இலக்கிய வகைகளான சிந்து, கும்மி, தெம்மாங்கு என்பனவற்றின் அடிப்படையும் நாட்டுப்பாடல்களே எனில் மிகையாகாது.

**காலம்**

தமிழிலக்கிய வரலாற்றின் காலத்தை வரையறுப்பது கடினமானது. நாட்டுப்பாடல்களின் காலத்தைக் கணிப்பது இலக்கியப் படைப்புகளின் காலத்தை வரையறுப்பதை விடக்கடினமானது. அண்மைக்காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக்கூட திரித்துக் கதையாக்கும் பாங்கு

காணப்படுகிறது. எனினும் இக்கதைகளில் காணும் நிகழ்ச்சிகளின் சான்றுகள் ஓரளவிற்கு அவைகளின் காலத்தைக் குறிக்க உதவுகின்றன. பண்டைமக்கள் தங்கள் இயற்கைச் சூழ்நிலையில் உணர்பவற்றையும், கண்டவற்றையும் விளக்கமுயன்றனர். அதன்கண் எழுதப் படாத பலகதைகளும், பாடல்களும் எழுந்தன. செவி வழியே தலைமுறை தலைமுறையாகப் போற்றி வளர்ந் தனவே இவை. எனவே இவற்றில் பெரும்பாலான வற்றிற்கு நிலையான வடிவில்லை. இடத்திற்கும் காலத் திற்கும் ஏற்ப அவை மாறுபட்டு நிற்கின்றன. எனினும் அவற்றின் மூலக்கருத்து மாறுபடுவதில்லை. தனி மனிதனால் பாடப்பட்ட ஒரு நாட்டுப்பாடல் பின்னர் மக்கள் கூட்டத்தால் பாடிப்பாடி மாற்றியமைக்கப் படுகிறது.

நாட்டுப்பாடல்கள் மக்களின் வாழ்வோடு இணைந்தது, மாறுந்தன்மைவாய்ந்தது. இயற்கையாக எழுவது, இசைகலந்தது, வட்டார வழக்கு நிலையில் அமைவது, எளிமையானது, உணர்ச்சிகளை அள்ளித் தருவது, கேட்டு மகிழப்பயன்படுவதேயன்றி பயின்று தெளிவதன்று. பழந்தமிழ் காவியமான தொல்காப்பியம் 'பண்ணத்தி' என இதனை விளக்குகிறது. எளிமை, இனிமை, இசை நிறைந்த நாட்டுப்பாடல்களிலிருந்தே செம்மையிலக்கி யங்கள் தோன்றின என்பது அறிஞர் முடிவு. இடைக் காலத்திலும், இக்காலத்திலும் எத்தனையோ நாட்டுப் பாடல்கள் மலர்ந்தன. அம்மானை, குன்றக்குரவை, கானல் வரி, கந்துவ வரி, பாவைக்கூத்து, பூவல்லி, வில்லுப்பாட்டு, வழிநடைப்பதம், ஊசல், சிந்து, தெம் மாங்கு, ஏற்றப்பாட்டு என்பன சில. இவ்வகை நாட்டுப் பாடல்கள் தொடக்க நிலையில் கல்வியறிவற்ற பொது மக்களின் உள்ளத்தில் ஊற்றெடுத்து அவர்தம் செவி களையும், சிந்தைகளையும் களங்களாகக் கொண்டு

நிலைத்தன. இப்பாடல்களின் செல்வாக்கினை உணர்ந்து புலவர்கள் நாளடைவில் இவ்வகைப்பாடல்களையும் இயற்றி பெருமை பெற்றனர். சிலப்பதிகாரம், திருவாசகம் போன்ற பனுவல்களில் நாட்டுப்பாடல்களினடிப் படையில் இயற்றப்பெற்ற இசைப்பாக்கள் நிறைந்து கிடக்கின்றன. ஏடுகள் மலிந்த இக்காலத்திலும் செவி சார்ந்த நாட்டுப்பாடல்கள் தொடர்ந்து காணப்படு கின்றன. காலப்போக்கிற்கு ஏற்ப இப்பாடல்களில் சொல், தொடர், வடிவங்களில் மாற்றம் காண்பதேயன்றி அடிப்படை மாற்றம் ஏதுவும் ஏற்பதில்லை. இப்பாடல் களைப் புராணக்கதைப் பாடல்கள், வரலாற்றுக் கதைப் பாடல்கள், சமூகக்கதைப்பாடல்கள் என்று முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

## அம்மானை

ஆடிமகிழாத உயிரினங்களில்லை., அகிலா விளை யாட்டுடையார்' என்பதால் இறைவனும் விளையாட்டுக் களில் பிரியங்கொள்ளுவதைக் காட்டுகிறது. ஆட்டங்கள் மனதிற்கு உவகை தந்து உள்ளத்தையும், உடலையும் ஊக்குவிக்கும். இன்பம் நிறைந்த இளம் பருவம் 'விளையாட்டுப்பருவம்' எனக்கூறப்படுகிறது. சூழ் நிலைக்கு ஒப்ப விளையாட்டுகள் வேறுபடுகின்றன. சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், பிள்ளைத்தமிழ் மற்றும் கலம்பகங்களில் விளையாட்டுகள் இடம் பெற்றுள்ளன. அவை ஓரை, கெடவரல், பண்ணை, ஆட்டு எனப் பல்வேறு சொற்களால் அழைக்கப் படுகின்றன.

தமிழர் தம் சிறப்பு விளையாட்டுகள் பல. அவற்றில் சங்க இலக்கியங்களில் காணும் ஆட்டங்களில் பெரும் பாலானவை மகளிர் ஆட்டங்களே. இவற்றை இசையோடிணைந்த ஆட்டங்கள், இசையில்லா ஆட்டங்

கள் என இரண்டாகப்பிரிக்கலாம். ஆடலும், பாடலும் இணைந்து இன்பமளிக்கின்றன. குரவை, துணங்கு, ஊசல், பந்து, குழங்கு என்பன இசை கலந்த ஆட்டங்கள். இசையிலா ஆட்டங்களில் பாவை, புனலாடுதல், அலவனாட்டுதல், அம்பாஆடல், சிற்றிலிழைத்தல் என்பன குறிப்பிடத்தக்கவை. சங்க காலத்தில் கழங்கு என வழங்கப்பட்ட ஆடிப்பாடலே இன்றைய அம்மானை ஆட்டம். தமிழகத்தில் சமுதாய வேறுபாடுகளால் இவ் வாட்டம் ஏழங்காய் ஆட்டம், கல்லங்காய் ஆட்டம், அம்மானைப் பண்ணாங்கல், கழற்சி ஆட்டம், சுட்டி பிடித்தல் என பலவேறு பெயர்களுடன் இன்றும் நம் மிடையே வழங்கப்படுகிறது. அம்மானை கதை, அம்மானை விளையாட்டு இவை இரண்டும் தொடர்பு உடையவை. கதைகூற்றின் வளர்ச்சியின் கண் இது அம்மானைப் பாட்டாக வளர்ந்தது. (த. இராசாராம், 1970).

## அம்மானை - சொல் விளக்கம்

'அன்னை' அல்லது 'தாய்' எனப் பொருள்படும் அம்மனை, அம்மானை, அம்மனாய், அம்மானே, அம்மானர் முதலான சொற்களால் பெண்கள் தம் விளையாட்டில் பயன்படுத்திப் பாடியுள்ளதாக அறியலாம். 'அம்மானை' என்ற சொல் சங்க இலக்கியத்தில் வழங்கப்படவில்லை. முதல்முதலாக சிலப்பதிகாரத்தில் தான் ஆளப்பட்டது. அம்மானை என்னும் சொல்லிற்கு தாய் (சிலம்பு 10: 135 - 137), தலைவி (சிலம்பு 29 : 16) அம்மானை ஆடுங்கருவி (சிலம்பு 29 : 17), தீ (சிலம்பு 29 : 19) என்னும் நான்கு பொருள்கள் உள்ளன. அம்மானை கலம்பக உறுப்பு, வரிப்பாடல், பெண்பால் பிள்ளைத்தமிழ் உறுப்பு என்னும் நிலையிலும் அமைகின்றது. 'அம்மனை' என்ற சொல்லை ஒட்டி

அம்மானை, அம்மானை வரி, அம்மானைப்பாட்டு, அம்மானைக்காய், அம்மானை மடக்கு என்ற சொற்கள் அமைகின்றன. 'அம்மானை' மகளிர் ஆடும் ஆட்டங் களில் ஒன்று. 'அம்மானை வரி' அம்மானை ஆடும்போது பாடப்படும் பாடல், 'அம்மானைக்காய்' அம்மானை ஆடுகையில் பயன்படும் பொருள். 'அம்மானைப்பாட்டு' என்பது கதைப்பாடலைக் குறிக்கும். 'அம்மானைமடக்கு' கலித்தாழிசையால் வினாவிடையாக மகளிர் இருவர் இருபொருள்பட பாடும் பாட்டு, சிலப்பதிகாரம், கலம்ப கங்களில் இவை இந்நிலைகளில் அமைந்துள்ளன. 'அம்மனை' என்ற சொல் தோழியைக் குறிப்பதாகவும் கருதலாம். 'அம்மானை' கொற்றவையையும் குறிக்கும். 'அம்மன்' பெண்கள் வழிபடும் தெய்வம். இது சக்தியைக் குறிக்கிறது. அவள் கோயில் 'அம்மன் கோயில்' என்று இன்றும் வழங்கப்படுகிறது.

## அம்மானை - விளையாட்டு

தமிழ்நாட்டில் பெண்கள் ஆடும் விளையாட்டுகளுள் அம்மானை என்பது ஒன்று. பழங்காலம் முதற்கொண்டே இந்த விளையாட்டு இருந்து வருகிறது. அம்மானைக் காய் மூன்றை வைத்துக்கொண்டு இரண்டுகைகளாலும் பெண்கள் விளையாடுவார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு காய்களிருக்க மேலே ஒன்றை எறிவர். கையில் இருக்கும் அம்மானைக்காயை மேலே வீசி முதல் காயைப் பிடிக்க வேண்டும். இப்படி திறமையாக ஆடும்போது காய்தவறி கீழே விழுந்துவிட்டால் வேறு ஒரு பெண் ஆடுவாள். ஒருத்தி ஆடுவதும் பலர்சேர்ந்து பந்தயம் போட்டு ஆடுவதும் உண்டு. பெரும்பான்மையாக மூன்று பெண்கள் சேர்ந்து ஒருவர் பின் ஒருவராக ஆடுவது வழக்கம், இப்படி அம்மானை ஆடும்போது பாட்டுப் பாடிக்கொண்டே இருப்பார்கள். அந்தப்பாட்டுக்கும் அம்மானை என்றே பெயர் வழங்கும்.

## அம்மானைக்காய்

பெரும்பாலான அம்மானைக்காய்கள் மரக்கட்டை யால் ஆனவை, உருண்டையானவை, வெவ்வேறு நிறம் தீட்டப் பெற்றவை. கனமில்லாத மரக்கட்டைகளால் அம்மானைக்காய் செய்யப்படும். இலக்கியங்களில் வேறு வகையான அம்மானைக்காய்களைப் பற்றியும் குறிப்புகள் காணலாம். அவை விலை உயர்ந்த மணிகளால் ஆனவை. 'மாணிக்க அம்மானை ஏழ்வாங்கி' என்று திருவானைக் காவுலா கூறுகிறது. அம்மானைக்காய்கள் ஏழும் முத்து, நீலம், பவளம், பதுமராகம், பொன், பச்சை, மணி இவற்றால் அமைந்தது என்று திருக்காளத்திநாதருலா கூறுகிறது. நீலம் முதல் சிகப்பு ஈறாக ஏழு நிறங்கள் கலந்தால் வெண்மை நிறமாகும். அதுபோன்று பலநிறம் நிறைந்த அம்மானைக்காய்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஒரே வெண்வட்டமாக சுழன்று வரும்.

அம்மானை ஆடும்பொழுது மகளிர் பாடும் பாடல் 'அம்மானைவரி' என்று வழங்கப்பெறும். தொழில் செய்வோரும், விளையாடுவோரும் பாடும் நாடோடிப் பாடல்களை வரிப்பாடல்கள் என்று சொல்லுவார்கள். அந்தவகையில் அம்மானைப்பாட்டுக்கு அம்மானைவரி என்ற பெயர் வந்தது. பாடிக்கொண்டே விளையாடு வதையும் கூத்தின் வகையாகச் சேர்த்திருக்கிறார்கள் அவற்றை பல்வரிக்கூத்து என்று வகைப்படுத்தினர் புலவர். மகளிர் விளையாடும் விளையாடல்கள் பல இந்தப் பல்வரிக் கூத்தில் சேர்ந்தவை. அம்மானையும் பல்வரிக்கூத்து வகையினைச் சேர்ந்தது.

சிலப்பதிகாரத்தில் காணப்படும் அம்மானைப்பற்றிய குறிப்புகளுக்குப்பின்னர் அதனைத் தொடர்ந்து திருவாச கத்தில் திருவம்மானை எழுந்தது. பின்னர் அது கலம் பகத்திலும், பிள்ளைத்தமிழிலும் உறுப்பாகிற்று. காலம்

செல்லச்செல்ல தனித்தனிப்பாடல்களாக அமைந்த அம்மானைவரி அம்மானைப்பாட்டாயிற்று. அம்மானை வரியில் கூறப்பட்ட கதைகள் எளியமக்களுக்கு நன்கு அறிமுகமானவை. சிலம்பு தந்த அம்மானைவரி மூன்று பெண்கள் பாடி ஆடுகின்ற நிலையில் உள்ளது. வினா விடை, பொதுக்கூற்று என்னும் முறையில் பாடல் அமைகிறது.

ஒரு பெண் வினா எழுப்புகிறாள்:

"வீங்குநீர்வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணங்காத்த உரவோன் யார் அம்மானை"

இரண்டாம் பெண் விடையளிக்கிறாள்:

"ஓங்கரணங்காத்த உரவோன் உயர் விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன் காண்
அம்மானை"

மூன்றாம் பெண் முப்பாய்ப்பு வைத்ததுபோல் பாடுகிறாள்

"சோழன் புகார் நகரம் பாடேலோர் அம்மானை"
(சிலம்பு 29 - 16)

தமிழ் பிரபந்த வகைகளில் ஒன்றாகிய கலம்பகத்தில் அம்மானை என்ற உறுப்பு ஒன்று உண்டு. அதிலும் மூன்று பெண்கள் பாடுவதாக அமைந்திருக்கும். முதற் பெண் ஒரு செய்தியைச் சொல்ல, இரண்டாமவள் அதன் அடிப்படையில் ஒரு வினாவை எழுப்புவாள், மூன்றாமவள் அதற்கு சிலேடை நயத்துடன் பதிலளிப்பாள்.

சில தனிப்பாடல்களிலும் அம்மானை கையாளப் பட்டுள்ளது. பெரும்பாலானவை கலம்பக அமைப்பை அடிப்படையானவை. இங்கும் ஒரு பொதுக்கூற்றுடன் ஆரம்பித்து, தொடர்ந்து வினா எழுப்பி, இறுதியில் விடை சிலேடை நடையோடு அமைகிறது. தனிப்பாடல்

திரட்டில் ஒட்டக்கூத்தரும் அவருக்கு மறுப்புக் கூறும் நிலையில் புகழேந்தியும் பாடியதாக இருபாடல்கள் உள்ளன. இவை முற்றும் மாறுபட்ட நிலையில் அமை கின்றன. தனிப்பாடல்கள் பெரும்பாலும் கதைச் செய்தியை குறிக்கிறது.

தமிழ் நாடகங்களில் சிறந்த மனோன்மணிய நாடகத் திலும் அம்மானை ஆட்டத்தைக் காணலாம். அம்மானை 'கழல்' என்னும் பெயரால் இங்கு குறிக்கப்படுகிறது. ஒருத்தி வினா எழுப்ப அடுத்தவள் விடை கூறுகிறாள். இப் பாடல்களில் சிலேடை நயம் உள்ளன. ஒரு பாட்டிலேயே வினாவிடை அமைந்த நிலை சிலப்பதிகாரத்திலும், கலம்பகத்திலும் அறியப்படுகின்றன. மணிமேகலையில் அவற்றின் வளர்ச்சி நிலையைக் காண்கிறோம்.

திருவாசகத்துத் திருவம்மானைக்கும், சிலப்பதிகார அம்மானைக்கும் வேறுபாடுகள் உண்டு. திருவம்மா னையில் ஒரு பெண்ணே வினாவிடை கூறிப்பாடியாடு கிறாள். அவற்றில் 'பாடுதுங்காண் அம்மானாய்' என முடிகிறது (திருவம்மானை 11). சிலப்பதிகாரத்தில் வரும் அம்மானைவரியும், கலம்பகங்களிலும், மூவரம்மானை யிலும் வரும் பாடல்களும் கலித்தாழிசை என்னும் பாவினத்தால் அமைந்தவை. தரவு கொச்சமாகவும் கொள்ளலாம். ''அம்மானை'' என்று முடியும் சொற்கள் ஒவ்வொரு பாடலிலும் உள்ளன. பெண்களை பொதுவாக 'அம்மா' என்று அழைப்பதுபோல 'அம்மனை' என்றும் அழைப்பது இலக்கிய மரபு. பாட்டில் சொற்களின் முடிவில் பெண்ணை விளிக்கும் விளியாக அம்மானை என்பது அமைகிறது (கலைக்களஞ்சியம், தொகுதி 1) உலாக்களில் அம்மானை பாடிய செய்தியும், அம்மா னைக்காய்களின் நிலையும் விளக்கப்படுகின்றன. தஞ்சை பெருவுடையார் உலாவில் தலைவி அம்மானை ஆடிய

தாக மட்டும் குறிப்பிட்டுச் சொல்லுகிறார். இங்குவேறு விரிவான செய்திகள் கிடைக்கவில்லை. மூவருலா, திருவாரூர் உலா என்பவற்றிலும் இவ்வண்ணமே அமைகின்றன. ஆனால் வேறு சில உலாக்களில் அம்மானை ஆடிய வகை விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

## அம்மானைப் பருவம்

பிள்ளைத்தமிழ் அம்மானைப் பாடல்கள் பல இலக்கிய நிலையில் காணப்படுகின்றன. அம்மானைக் காய்களை எறிந்து ஆடிய முறை 'இங்கு கூறப்படுகிறது. பெண்பால் பிள்ளைத்தமிழில் எட்டாம் பருவமாக அமைவது அம்மானைப்பருவம். பாட்டுடைத்தலைவியைத்தாய்மாரும், செவிலியரும் அம்மானையாடும்படி சொல்லும் முறையில் இப்பருவப்பாடல்கள் அமைந்திருக்கும். பெரும்பாலும் ஆசிரிய விருத்தங்களாக அவற்றைப் பாடுவர் புலவர்.

## அம்மானை இலக்கியம்

வாய்மொழி இலக்கியங்கள் ஒரு மொழியின் உயிர்நாடியாக, வளர்ச்சிக்கு வித்தாக அமைகின்றன. நெஞ்சில் வஞ்சமில்லாப் பாமரர் உள்ளத்து உணர்ச்சிகளைச் சுருதியாகக் கொண்டு தாளத்தோடு இயைந்தவை. கவிதையுலகில் வளர்ந்து செழித்த வகையே கதைப் பாடல்கள். கதையின் இனிமையை பண்ணோடு சுவைப் பாடி மகிழ்ந்தனர். காதலையும், வீரத்தையும் அடிப்படையாகக் கொண்டு இப்பாடல்கள் உருவாயின. இப்பாடல்களை தனி ஒரு புலவன் பாடினானா, அல்லது சமுதாயத்தில் பலர் சேர்ந்து இயற்றினரா என்பது முடிவு செய்ய இயலவில்லை. அம்மானைப்பாடல்களுக்கு இதுகாறும் பொதுவான இலக்கணம் தோன்றவில்லை.

ஆனால் அம்மானைப்பாடல்களை மூன்று நிலைகளில் அமைக்கலாம்;

1. நூலின் பெயரிலும், அதனுள்ளும் அம்மானை என்னுஞ் சொல் பெற்றுவருபவை

(மாணிக்கவாசகர் அம்மானை, சிவகங்கை அம்மானை, புவனேந்திரன் அம்மானை)

2) நூலின் பெயரில் மட்டும் அம்மானை என்னும் சொல் பெற்று வருபவை,

(வைகுந்த அம்மானை, இராமப்பையன் அம்மானை)

3) அம்மானை என்னும் சொல்லே பெறாது வருவது

(அல்லி அரசாதி மாலை, பவளக்கொடி மாலை, புலந்திரன் களவு மாலை)

அம்மானைப் பாட்டு என்பது கதைப் பாடலையே குறிக்கும் (கலைக்களஞ்சியம், தொகுதி 1). இக்கதைப் பாடல் ஆங்கில இலக்கியத்திலுள்ள BALLAD என்பதனோடு ஒப்புமை உடையது. தமிழ்மொழியில் நாயக்கர் காலத்தில் இது பெரும் வளர்ச்சி பெற்றது. இலாவணி என்னும் நிலையில் உள்ள மராட்டிய கதைப் பாடல் அவர்கள் தஞ்சையை ஆண்டதைத் தெளிவுபடுத்துகிறது. இலக்கிய வரலாற்றில் தலபுராணங்களும், கதைப்பாடல்களும் சிறப்புப் பெற்ற காலம் இது. கதைப் பாடல்களில் பெரும்பாலானவை பாமர மக்களின் உள்ள உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கருவிகளாக உருப்பெற்றன. இப்பாடல்களில் அம்மானை என்னும் சொல் ஒரு கருத்து அல்லது கூற்று முடியுமிடத்தில் வருகிறது (த. இராசாராம், 1970).

நாட்டுமக்களின் வாய்மொழிச் செல்வமாக வளம் பெற்ற அம்மானைப்பாடல்கள் இன்று ஏட்டில் இடம்

பெற்றுள்ளன. நாட்டுப்பாடல் நிலையிலிருந்து ஏட்டுப் பாடலான நிலையில் அம்மானைப்பாடல்கள் பல மாறுத லெய்தி வளரலாயின. ஒட்டக்கூத்தரும், புகழேந்தியும் உறழ்ந்து பாடிச் சோழர், பாண்டியர் சிறப்பினைப் புலப் படுத்தியதாக அமையும் இரண்டு தனிப்பாடல்களும் அம்மானைப்பாடலில் ஏற்பட்ட வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றன. பொதுமக்களும், புலவர்களும் தாங்கள் இயற்றிய அம்மானைகளில் பலவேறுபாடுகள் கொண்டனர். தனிச்செய்யுளாய், விளையாட்டுப் பாடலாய் விளங்கிய அம்மானைப்பாடல் விளையாட் டியல்பு நீங்கப்பெற்று நெடியகதை கூறிச்செல்லும் பாடலாக உருமாறிற்று. உடுக்கு, வில் முதலிய இசைக் கருவிகளின் துணையோடு தனி ஒருவரோ, சிலரோ பாடப் பலரிருந்து கேட்கும் நீண்ட நெடும்பாடலாக அம்மானைப்பாடல் வளர்ந்தது. தெய்வங்கள், மானிடத் தலைவர்கள், புராண நிகழ்ச்சிகள் பற்றிய நெடிய பாடல்கள் தோன்றி பாமரமக்களிடம் செல்வாக்குப் பெற்றன. இதன் சிறப்பினையும், செல்வாக்கினையும் உணர்ந்த புலவர்கள் இந்நடையில் பாடல்கள் எழுதலாயினர்.

பஞ்சவர்கள் கதை அம்மானை, வீரையன் அம்மானை போன்ற நாட்டுப்பாடல்கள் நாளடைவில் ஏட்டில் இடம் பெற்றன. தமிழ் அம்மானை, காந்தி அம்மானை போன்றவை தொடக்கத்திலேயே ஏட்டுப்பாடலாக எழுதப் பட்டனவாகும். இவ்விரு வகையாகவும் அமைந்த அம்மானைப் பாடல்களின் செல்வாக்கினை உணர்ந்த பல்வேறு சமயங்களைச் சார்ந்த புலவர்கள் தத்தம் சமயச்சார்புடைய அம்மானைப் பாடல்களைப் புனைந் துள்ளனர். சீரங்க அம்மானை, மாணிக்கவாசகரம் மானை, நபியவதார அம்மானை, கித்தேரியம்மாள் அம்மானை, பார்சுவநாதர் அம்மானை போன்ற பல்வேறு

சமய அடிப்படையிலமைந்த அம்மானை நூல்கள் காணக் கிடக்கின்றன.

இத்தகைய அம்மானைப் பாடல்களின் ஆசிரியர்கள் பெயர்களை அறிந்துகொள்வது அரிய செயலாகும். பெரும்பாலும் அவர்கள் பெயர்கள் அறிந்துகொள்ள முடியாமலேயே உள்ளன. கால, இடச்சூழ்நிலைகளுக்கு ஏற்ப இப்பாடல்கள் வேறுபாடுகளும், வளர்ச்சியும் எய்தும் தன்மையிலிருப்பதனால் இவற்றின் மூல வடிவும், மூல ஆசிரியர்பெயரும் மறைக்கவும்,மறக்கவும் பட்டிருக்கலாம். இத்தகைய நெடும் பாடல்கள் நூலுருக் கொள்ளுங்கால் சில புகழ்மிக்க புலவர்களை ஆசிரியர்களாகக் கூறும் பழக்கமும் நிலவியது (டாக்டர். அ.மா. பரிமணம், 1979).

## சிறப்பியல்புகள்

அம்மானைப் பாடல்களில் நாடோடிப் பாடல்களின் இயல்புகள் யாவும் இருக்கும். கொச்சை மொழிகள், நாட்டு வழக்குச் சொற்கள். யாவருக்கும் விளங்கும் உபமானங்கள், செய்திகளை மீண்டும் மீண்டும் கூறுதல், குறிப்பிட்ட சில சொற்கள் எல்லாப்பாடல்களிலும் வருதல் முதலியவற்றை இந்த அம்மானைப் பாடல்களில் காணலாம்.

## மேலை நாடுகளில் அம்மானைப்பாடல்கள் (Ballads of the west)

மேலை நாடுகளில் அம்மானைப்பாடல்கள் இடைக் காலம் (Middle ages) முதல் இன்றுவரை காணப்படு கின்றன. ஆனால் எந்த இரு நாட்டு அம்மானைப் பாடல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தாலும் அவற்றின் அடிப்படைத் தத்துவங்களில் ஒற்றுமை காண்பது அரிது.

பல்லாண்டுகாலமாக கேள்வி வழிப்பாடல்கள் ஊரக மக்களிடையே அவர்களுடைய சமுதாயக்கட்டமைப்பிற்கு

ஏற்ப பரவலாகக் காணப்பட்டன. கேள்வி வழிப்பாடல் களான அப்பாடல் எழுத்துவடிவை அக்காலத்தில் பெற வில்லை. இவைகளை இயற்றிய பலகவிஞர்கள் எழுத்துக் கல்வி பெறாதவர்களாக இருந்தனர். சில பாணர்களும், சமய அறிஞர்களும், கலைக் காவலர்களும் இப்பாடல் களுக்கு எழுத்து வடிவு கொடுத்தனர். பழைய அம்மானைப் பாடல்களின் காலத்தை கண்டுகொள்வது கடினமான காரியம். அப்பாடல்களின் காலத்தைக் குறிப்பிட முயற்சித் தால் அவற்றின் அமைப்பை புரிந்து கொள்ள இயல வில்லை என்பது தெளிவாகும். அப்பாடல்களின் முதல் பதிப்பு அதன் மூலத் தொகுப்பாக எண்ண இடமில்லை. புதிய பதிப்புக்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டும் காணப் படும். ஒரு பாடல் சமுதாயத்தில் உலாவரப் பல்லாண்டு களுக்கு முன்பே அதில் குறிப்பிடும் நிகழ்ச்சி நிகழ் திருக்கும்.

**சிறப்பியல்புகள்**

1) **கதைவழி அமைப்பு** (Narrative basis)

அம்மானை (நாட்டு)ப்பாடல்கள் ஒரு சிறுகதை அல்லது வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு அமை கின்றன். அக்கதையின் வளர்ச்சி அல்லது வீழ்ச்சியை மையமாகக்கொண்டு ஒரு குறிப்பிட்ட நோக்கோடு வளர்கின்றன. பின்னர் அக்கதையில் ஒரு நிகழ்ச்சியின் உச்சக்கட்டம் எட்டியவுடன் விரைந்து முடிகின்றன. கதை யின் பாத்திரங்கள் வெளிப்படையாக மறைக்கப்பட்டு அவர்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகளின் குறிக்கோள்கள் சிறப்புப்பெறும், நிகழ்ச்சிகள் சமுதாயத்தின் நடைமுறை மொழி சார்ந்து சுருக்கமாக அமையும். காட்சிகளுக் கிடையே குறிப்பிட்ட இடைவெளி காண்பதரிது. உள் ளத்தைக்கவரும் காட்சிகள் எளிய நடையில் அமையும். சுருங்கக்கூறின் சிறந்த நிகழ்ச்சிகளை சடுதியாகக்கூறி முடித்து அதன் உச்சக்கட்டத்தைக் காண்பதே அம்மானை

(நாட்டு)ப்பாடல்கள் கையாளும் முறை. சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் முறையில் சொல் நயம் சிறந்து விளங்கும். ஆனால் சிறப்புச் சொற்களையும், சொற்றொடர்களையும் பலமுறைக்கூறி பொருள் விளக்கும் நிலை காணலாம். சிறப்புச்சொற்களுடன், மாற்றுச் சொற்களும் துணை நின்று நிகழ்ச்சியின் உச்ச நிலை சடிதியாய் வெளிப்படும்.

## 2) கேள்வி வழித் தொடர்பு (Oral transmission)

அம்மானை (நாட்டு)ப் பாடல்கள் கல்வி அறிவற்ற ஊரக மக்களிடையே உருவெடுத்து தங்கள் நினைவி லிருந்து திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டு வருவதால் இவற்றில் அடிக்கடி மாற்றங்கள் தழுவும் நிலை காணப் படுகிறது. மாற்று சூழ்நிலையால் கறைபடாத நிலையில், மரபியல்களில் ஊறிப்போன சமுதாயங்களில் உருவெடுக் கும் அம்மானை (நாட்டு) ப்பாடல்கள் அச்சூழ்நிலையில் மக்களின் வாழ்வு, வளர்ச்சி, ஆசை, நம்பிக்கை ஆகிய வற்றை வெளிப்படுத்தும். இப்பாடல்களின் அமைப்பு நாட்டுப்புறப் பண்பாட்டை ஒட்டியிருப்பதாலும், மாற்றங் களை மறுத்து (Conservative) காணப்படுவதாலும் சூழ் நிலைக்கு ஒப்ப தங்கள் சமுதாயச் சொற்களே வழங்கப் படுகின்றன. இக்காரணங்களால் இவ்வகைப் பாடல்களின் இன்றையப் பதிப்பு அதன் மூல உருவிலிருந்து மாறுபட்டு காணப்படும். வெளியிடப்படும் காலத்தின் நடைமுறை இப்பாடல்களில் இடம்பெறும். ஆனால் மரபியலின் அடிப்படையில் அமையும் இவ்வகை பாடல்களின் நடை யில் உருமாற்றம் ஏற்படுமேயன்றி பொருள் சிதைவு ஏற்படா.

## செயல் முறை அமைப்புகள் (Composition)

### 1) கோட்பாடுகள் (Theories)

அம்மானை (நாட்டு)ப்பாடல்களை இயற்றி,

அவற்றை சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளும் கோட்பாடுகளில் அறிஞர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறுகின்றனர். ஒரு சமுதாயத்தின் அங்கத்தினர்கள் தங்கள் ஆடல் பாடல்களின் மேம்பட்ட உச்சநிலைகளுக்கு ஏற்ப குழுவாகச்சேர்ந்து இவ்வகைப் பாடல்களை இயற்றுவதாகச் சமுதாயக்கல்வி நிலைய (Communal School) அறிஞர்கள் கருதுவர். ஆனால் தனி ஆள் இயல் (individualists) கொள்கையாளர் இதற்கு மாறாக, ஒவ்வொரு பாடலும் ஒரு தனி ஆளால் இயற்றப்பட்டது என்றும், அவர்கள் இத்துறையில் தலைசிறந்த கலைஞராய் இருக்கத்தேவை இல்லை என்றும் கருதுவர். ஆனால் இந்தக்கோட்பாடுகளின் வேறுபாடுகளில் எந்தச்சிறப்பும்தெரியவில்லை. ஒரு கவிஞன் சமுதாயத்தின் கருவியாகக் காணப்படுகிறான். அவன் உருவாக்கும் பாடல்கள் சமுதாயத்தின் தேவைக்கு ஏற்ப உருக்கி வனையப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படவேண்டியது இன்றியமையாதது.

### ii) நுட்ப செய்முறையும், வடிவும் (Technique and forms)

ஒரு சொல்லை அல்லது சொற்றொடரை பலமுறை கூறுதல் இப்பாடல்களின் நுட்ப செயல்முறையிலும், வடிவிலும் ஒருங்கிணைந்து காணப்படுகின்றன. பொருள் சிறப்பற்ற சொற்கள் சிலவும் இடையிடையே காணலாம். கதையின் சிறந்த பகுதிகள் கேட்போரின் உள்ளம் கவரும் வரை சொற்களாகவோ, சொற்றொடர்களாகவோ, பலமுறை கூறப்படும். இப்பாடல்கள் செவிவழியாய் மாத்திரம் கேட்டு அறியும் நிலைகாண்பதால், சிறப்புப் பகுதிகள் மக்கள் உள்ளத்தைக் கவரும்வண்ணம் மீண்டும் மீண்டும் கூறுதல் இன்றிமையாதது. இம்முறையால் கவனக்குறைவால் ஏற்படும் மறதிகளைமாற்ற முடியும். ஆணைகளும், அறிவுரைகளும் இம்முறையில்

பலமுறை கூறப்படும், பதில்கள் கேள்விவடிவில் தெளி வாக வெளிவரும். இதனை ஒரு கலையாகவே கருதலாம்.

குறிப்பிட்ட ஒரு சில கற்பனைகளே (imageries) கேள்வி வகைப் பாடல்களில் மாறிமாறி இடம் பெறு கின்றன. பல்வேறு சொற்களால் சுவைபட கூறுதற்கு மாறாக குறிப்பிட்ட ஒருசில சொற்களையே மாறி மாறிப் பயன்படுத்துவதைக் காணலாம். சான்றாக, அரசர்கள் எல்லோரும் வீரர்கள், பெண்கள் கற்புக்கரசிகள், வெள்ளை நிறத்தை பாலிற்கும், சிவப்பை இரத்தத் திற்கும் ஒப்பிடுவர். இவை அனிச்சச் செயலாக வெளிப் பட்டு பாடும் கலைஞர் பாடலில் அதிக கவனம் செலுத்த இடமளிக்கும். எளிய, இனிய, கொச்சை மொழியில் உண்மைகளை விளக்குவர். பாடும் கலைஞரின் தனித் தன்மை மறைக்கப்பட்டு சமுதாய நோக்கோடு பாடல் கள் வெளிப்படும் (Encyclopaedia Britannica, Vol. 2, 1982)

**நாட்டுப்பாடல் வகைகள்** (Types of balladry)

அம்மானை (நாட்டு)ப் பாடல்களை மூன்று வகை யாகப் பிரிக்கலாம். இவை பாணர் அம்மானை (Minstral Ballad), வீதிவழி அம்மானை (Broadside Ballad), இலக்கிய அம்மானை (Literary Ballad) என்பவை யாகும்.

**பாணர் அம்மானை**

குறுநில மன்னர்கள், நிலக்கிழார்கள், சீர்திருத்தச் செம்மல்கள், பெரும் செல்வமிக்கவர்கள், பெரும் கொள்ளைக்காரர்கள் ஆகியோரைப் புகழ்ந்து பாடும் தொழிலைக் கொண்டவர்கள் பாணர்கள். ஆனால்

இவர்கள் பாடல்களுக்கும், சமுதாய அடிப்படையில் அமையும் பிற நாட்டுப் பாடல்களுக்கும் பெருமளவில் வேறுபாடுகள் உள்ளன.

## வீதிவழி அம்மானை

முதலில் அச்சேறிய இவ்வகை அம்மானைகள் துண்டுத் தாள்களில் அச்சிடப்பட்டு தெருக்களிலும், பெரு வீதிகளிலும் பலமுறை பாடப்பட்டு மக்களின் மனதைக் கவர்ந்தன. பின்னர் அவை பொதுமக்களுக்கு விலைக்கு விற்கப்பட்டன.

## இலக்கிய அம்மானை

வீதிவழி அம்மானைகளைப் பின்பற்றி இலக்கிய அம்மானைகளையும் இயற்றலாயினர். பின்னர் எதுகை மோனை, சிலேடைநயம் போன்ற இலக்கிய நயங்கள் செறிந்த அம்மானைப் பாடல்கள் வெளிவரலாயின. இலக்கிய அம்மானை படைத்தவர்களுள் 18 - ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஜோனத்தான் சுவிப்ட் (Jonathan Swift), மாத்தியு பிறியர் (Mattew Prior), வில்லியம் கௌபர் (Willam Cowper) ஆகியோரும், 19-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த தாமஸ் கூட் (Tomas Hood), டபில்யு. எம். தக்கரே (W. M. Tuackcray), இலூவிஸ் கேறல் (Lewis Carroll) ஆகியோரும் குறிப் பிடத்தக்கவர்களாகும்.

## சான்றுகள்

Encyclopaedia Britannica, Vol. 2, pp 641-645, Helen Hemingway Benton Publishers, Chicago/ Geneva / Londen/Manila/Paris/Rome/Seoul / Sydney/ Tokyo/Tornto, 1982.

M. Arunachalam:
Ballad Poetry, Gandhi Vidyalayam, Thanjaur, 1976.

கலைக்களஞ்சியம், தொகுதி 1.,

புலவர். வீ. சொக்கலிங்கம் (Ed.)
ஸ்ரீ பார்சுவநாதர் அம்மானை
சரஸ்வதி மகால் நூல் நிலையம், 1981

நா. வானமாமலை (Ed.)
முத்துப்பட்டன் கதை,
மதுரைப் பல்கலைக் கழகம் மதுரை, 1971.

நா. வானமாமலை (Ed.)
வீரபாண்டியக்கட்டப்பொம்மு
கதைப் பாடல், மதுரைப் பல்கலைக் கழகம்
மதுரை, 1971.

சி. எம். இராமச்சந்திரஞ் செட்டியார்:
இராமய்யன் அம்மானை, தஞ்சை சரசுவதி
மகால் வெளியீடு எண் 7, தஞ்சை, 1978.

புலவர். வீ. சொக்கலிங்கம்:
சீவக சிந்தாமணி அம்மானை,
தஞ்சை சரசுவதி மகால்,
வெளியீடு எண் 185, தஞ்சை, 1982.

டாக்டர். அ. மா. பரிமணம்:
வீரையன் அம்மானை
தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு
எண் 165, தஞ்சை, 1979.

த. இராசாராம்:
தமிழில் அம்மானைப் பாடல்கள்,
குமாரசுவாமி அச்சகம், புத்தேரி,
நாகர்கோவில், 1970.

# கதைச் சுருக்கம்

## (அதிரியான் அம்மானை)

### நூன்முகம்

அதிரியான் அம்மானை ஒரு நாட்டுப் புறக் கதைக் காவியமாகும் (Folk Epic). இது அதிரியான் நத்தாலியாள் என்ற தம்பதியரின் உறுதியான கிறித்தவ வாழ்க்கையினை மையமாகக் கொண்டு உருவானது. இக்கதை உரோமை நாட்டை களனாகக் கொண்டு நடைபெற்றது என்று இக் காவியமே எடுத்தியம்புகிறது. மசுமியான் மன்னன் உரோமை ஆண்ட காலத்தில் கிறித்தவ மக்களைக் கொடுமைக்கு ஆளாக்கினான். அக் காலத்தில் அதிரியானும் நத்தாலியாளும் மன்னனின் கொடுமைக்கு அஞ்சாது கிறித்துவுக்காகப் பாடுபட்டு உயிர் நீத்துப் புனிதர்களானார்கள். இக்கதையை இக் காவியம் எடுத்தியம்புகிறது. மேல்நாட்டு கிறித்தவக் குருக்களின் வருகைக்குப் பின்னர் இக்கதை தமிழகத்தில் பரவியது இவ்வாறு இந்திய மண்ணில் வந்த இக்கதை தமிழ்மக்களின் நெஞ்சங்களில் சிறந்த இடத்தினைப் பெற்று வழிவழியாக வழங்கி வந்திருத்தல் வேண்டும். காயல்பதிநகரான் கேட்டுக்கொண்டதின் பேரில் இக் கதை கவித்திறம் வாய்ந்த தமிழ்க்கிறித்தவர் ஒருவரால் நாட்டுபுறக் காவியமாகப் பாடப்பட்டுள்ளது.

### நூற்பெயர்

இக்காவியம் எழுதப்பட்டுள்ள ஓலையில் இந்நூற்குப் பெயரெதுவும் இடப்படவில்லை. அதிரியான் கதையைக் கூறுகிறேன் என்று மட்டும் நூலாசிரியர் கூறியுள்ளார். ஆங்காங்கே கதையை 'அம்மானை' எனக்கூறி முடித் திருப்பதாலும், கதைப் பாடல் வடிவு பெற்றிருப்பதாலும் இந்நூற்கு 'அதிரியான் அம்மானை' என்று பெயரிடப்

பட்டுள்ளது. ஒரு சில இடங்களில் மட்டும் இந்நடை மாறுபட்டு 'விருத்தமாக' அமைந்துள்ளது.

**நூலாசிரியர்**

இந்நூலாசிரியரின் பெயரை இந்நூலிலிருந்து அறிய முடியவில்லை.

'தாணுவெனு மரசன் சங்கத் (துறுபு)லவன்
காயல் பதி நகரான் காவிய மொன்றோது
கின்றவாய
தமிழு மறுபாசையு மறிந்தோன் மங்காப்
பா(வேந்)தன்
மனுவேல் தமிழ் கிறித்தோன் இங்கா மெனத்
தெரிந்து
யிவ்வுரையைத் தந்தபடி பாடுகிறேன்'

என்று கூறுவதால் காயல்பதி நகரான், தாணு என்னும் அரசன் கேட்டுக் கொண்டதின் பேரில் எழுதினார் என்று தெரியவருகிறது. இக்கவிஞர் தமிழும் வேறு மொழியும் அறிந்தவர், தமிழ்க் கிறித்தவர் என்று மட்டும் தெரிய வருகிறது.

**நூலின் காலம்**

இந்நூல் எழுதப்பட்ட காலம் நூலின் முடிவில் எழுதப் பட்டுள்ளது.

'பிரமாதிசஂ மார்கழி மீ' ய க்ஷ சனிவார நாள் அர்ச்சிய சீச்டர் அதிரியரம்மானை எழுதி முடிந்தது' என்று இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. பிரமாதிச தமிழ் ஆண்டு, ஆங்கில ஆண்டு 1913க்கு நிகரானது. மார்கழி 16ஆம் நாள் சனிக்கிழமை எழுதி முடிக்கப்பட்டது என்று பொருள்படும்.

## நூல்யாப்பு

இந்நூல் அகவல் பாவினால் இயன்றது. ஒருசில விருத்தப்பாக்களும் இடம் பெற்றுள்ளன. அகவல்பா பகுதியில் அடிதோறும் பொழிப்பு மோனை அமைந்துள்ளது. அடிதோறும் எதுகை எழில் பெற்று விளங்குகிறது. சிற்சில இடங்களில் அடியின் ஈற்றில் 'அம்மானை' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இச்சொல் கதையின் ஏதேனும் கருத்தோ, நிகழ்ச்சியோ முடிவடையும் இடத்தில் வருகிறது. சொற்சுவை, எளிமை, கருத்துவளம் ஆகியன இந்நூலின் தனிச்சிறப்புகள்.

## கதைச் சுருக்கம்

இத்தாலியாவில் உரோம் என்னும் பெரும்பகுதிக்குத் தலைவனாய் கொடியவன் மசுமியான் என்னும் இராயன் ஆண்டு வந்தான். தன் மதத்தை மெய்யெனக்கொண்டு நீதிக்குக் கேடாய் நாட்டை ஆண்டு வந்த காலத்து கர்த்தர் மனுவாய் இவ்வுலகில் தோன்றி சுத்தமுள்ள வேதச் சுருதிதனை உரைத்தருளினார். அவற்றைக் கேட்டும் ஏற்றும் வாழ்ந்த கிறித்தவர்களுக்கு மன்னனும், பெருந்துரைமார்களும் கொடிய துன்பங்களை விளைவித்தனர்; நிந்தனைகள் பல செய்து பாடுபடுத்தினர். இதற்கு அஞ்சிய கிறித்தவர்கள் அந்நகரினை விட்டு வனம் புகுந்து வாழத்தலைப்பட்டனர். உண்டியற்று வாடியும், உறங்காதும் இரவுபகல் காட்டில் புள்ளும், மானும், புலியும், கொடுவரியும், குஞ்சரமும் கண்டு அஞ்சாது மேலுலகம் கண்டவர்போல வனத்தில் வாயு வருந்தி, சருகருந்தி மாயுமளவும் தவஞ்செய்திருந்தனர். இவ்வாறு நெஞ்சத்துணிவும், நேர்மைத்தெளிவும், நீதித்திறனும் கொண்டு அஞ்சாது இவர்கள் வாழ்ந்த போதும் மன்னனின் கொடுமைக்கு ஆளாகிப்பலர் மாண்டனர்.

இவ்வாறு கிறித்தவர்கள் வதைப்படுங்காலத்து அரசவையில் நீதியுடையவனாய், இளமையும் அழகும் நிறைந்தவனாய், வேந்தன் ஏவலாளனாய், பெரும் பதவி ஏற்று அதிரியான் என்பவன் வாழ்ந்து வந்தான். தனது இருபத்தொன்றாம் வயதில் அழகும், இளமையும் நிறைந்த நத்தாலியாள் என்பவளை மணம்முடித்தான். நத்தாலியாளின் பேரழகிற்கு சரிஉவமை யாதொன்றுமில்லை. அன்பும், பாசமும் கொண்டு அதிரியானுடன் வாழ்ந்தாலும் கிறித்தவளான நத்தாலியாள் திடமனத்துடன் அயலார் அறியாமல் சோதிபரனை மனத்தில் வைத்து திருமறை நெறிதவறாமல் வாழ்ந்து வந்தாள். நாடோறும் இறைவனைப் போற்றித் துதித்தாள். 'சவுலை தனிவழியில் மறித்து மெய்மறையில் சேர்த்தவனே, துங்கனேசாக்கி என்போன் வல்லபரியேறி மான் வேட்டையாடுகையில் வன் மதத்தை மாற்றவெண்ணி மானின் கலைக்கோட்டில் வந்து வெளிப்பட்டவனே, கருணைப் பெருங்கடலே எனதுயிராயிருக்கும் அதிரியான் என் தலைவன் வன் மதத்தை நம்பி மறைமுதலை நம்பாமல் வாழ்கின்றான். அவன் என் தலைவனாய் இருத்தல் ஏற்புடைமையோ. பொய் மதத்தை விட்டு மெய் மறையில் நாளும் வாழ ஆள்கொள்வாய் என்று நாடோறும் அழுது மன்றாடி வந்தாள். இவ்வாறு நத்தாலியாள் அதிரியானை மணமுடித்து மாதம் பதினாறு கடந்து சென்றது.

அப்போது கொடியவனான மன்னன் மசுமியான் கிறித்தவரை நாட்டைவிட்டு விரட்டும் பொருட்டு கொடுமைகள் பல செய்தான். மேலும், அருந் தமிழைச் சார்ந்த அஞ்செழுத்தை ஓதாமல் பெருங் கிறித்தவரென்று பேர் சொன்னவரை எல்லாம் விலங்கிடுவேன், குருதி சிந்த அடிப்பேன், வன் சிறையிடுவேன், எண்ணெய் காய்ச்சி தோய்ப்பேன், கடலிற் கவிழ்ப்பேன்,

கத்தி கொண்டு கீரிடுவேன், கண்ணைப் பிடுங்கிடுவேன். குத்தி உயிர்பறிப்பேன், கொல்லுவேன்' என்று பறை அறிவித்தான். மன்னன் அறைந்த மொழிகளைக் கேட்டும் அஞ்சாது நின்ற கிறித்தவர்களைப் பிடித்துச் சிறையிலிட்டான். அச்சிறை வாசலுக்குப் பெருங்காவல னாய் அதிரியானும் இருந்தான்.

சிறையில் வாடித்துன்புற்றிருக்கும் மாதவத்தோரைக் கண்டு அதிரியான், 'அன்பான புண்ணியரே! இப்படிப் பாடுபட்டு துயரோடு நீர் இறப்பதால் நீர் பெறும் நற் பலன் யாது உரையீர்' என்று வினவினான். அவன் வினா கேட்ட தவத்தோர், 'நல்துரையே! இப்பேருல கினைப் படைத்த கர்த்தர் எமக்குச் செய்யும் நன்மை களைச் சொல்லுதல் அரிய செயலாகும். தன் வேதம் போற்றித் தனக்காகப் பாடுபட்டவர்களுக்கு அனந்தனந்த காலம் உலகில் புகழுடன் பெயர் நிறுத்தி நீதி கொடுத்து ஆனந்த மோட்சத்தில் அஞ்சுகளோடு (வானதூதர்) இறைவனை முகமுகமாய் தரிசித்து மகிழ்ந்திருப்பர்' என்று கூறினர். இம்மொழி கேட்டு உள்ளம் தெளிந்த அதிரியானும் மனமகிழ்ந்து நீதி மறைக்காய் மடியப் பிரியமுற்று சிறையிலிருக்கும் தவத்தோருடன் தானும் கிறித்தவன் என ஏட்டில் பெயர் எழுதிக் கொண்டான். நெடுநாள் நத்தாலியாள் இரந்து மன்றாடிய வேண்டு தல் கேட்கப்பட்டது.

இவ்வாறு அதிரியான் மனம்மாறி கிறித்தவனான செய்தியை அங்கிருந்த மற்றொரு காவலன் அறிந்து அரசனிடம் சென்று மாமகுடஞ்சூடி மடல்காசனத்தேறி வேந்தர் பல தொழ ஆளும் எம்மன்னா! உன் நம்பிக் கைக்கு உகந்தவன், துரைகளுக்கெல்லாம் மேலான துரையான அதிரியானென்பான் தானும் கிறித்தவனாய் பெயரெழுதி வைத்தான். அதனைக்கண்டு இங்கடியேன் உரைக்க வந்தேன் என்றான்.

இம்மொழி கேட்ட மன்னன் கடுஞ்சினம் கொண்டு அதிரியானை அழைத்து, இவ்வுலகில் நீ பெற்ற பெருமைகளை எல்லாம் இழந்து என்னைப் புறக்கணித்து என் வார்த்தை கேளாமல் உன்னைக் கிறித்தவன் ஆக்கியவர் யார்? எதைக்கண்டு மயங்கிவிட்டாய்? ஒலித்த பறை தனைக் கேட்கவில்லையா? காவலில் வாடும் மக்கள் கூட்டத்தைக் காணவில்லையா? என்னைப் புறக்கணித்து அம்மறையில் சேரக்காரணம் என்ன சொல்லும்! என்றான். அதற்கு அதிரியான், தேர்வேந்தே! உண்மைச் சூரியனைக்கண்டார் அதனை மறைப்பரோ, ஈடேற்றும் கர்த்தர் எமக்கொருவர் உண்டென்று தெளிந்தேன். வீடேற்றும் நன்மை விரும்பினேன். மாமறையில் சேர்ந்தேன்! என்று கூறினான் அவன் மொழி கேட்ட மன்னன் இன்னும் அதிரியானை அருகே அழைத்து, 'முன்னோர் போற்றி வந்த தேவதைகள் முன்னின்று தவறுரைக்கிறாய். புகழ் படைத்த உன் பெருமைதனை அழித்து தமிழ் மரபு மறந்து போதல் நன்றோ? இஃது அறிவுடைமையோ? என் உள்ளத்து கோபம் பொங்கி எழுகிறது. உன் செயல் இனிபொறுக்க இயலாது' எனக்கூறி அவனை சிறையிலடைத்தான்.

'வல்ல கிறித்தவர்கள் மாமறைக்காய்ப் பாடுபட்டதைக் கண்ட உன் கணவன் தானும் ஆண்டர்பிரான் மறைக்காய் பாடுபடத்துணிந்தார். அதனைக் கண்ட மன்னன் கோபித்து அவரைக் கொடுஞ்சிறையில் இட்டார்' என்று வீரனொருவன் சென்று நத்தாலியாளிற்கு உரைத்தான். அம்மொழிகேட்ட நத்தாலியாள் மிக மகிழ்ந்து விரைவாக ஓடிவந்து சிறையில் இருக்கும் தன் கணவன் காலில் உள்ள கனவிலங்கை முத்தி அன்புடன் 'நேசப்பிறப்பே! நினைவு அறிவு ஒன்றானவனே! இவ்வுலக வாழ்வினை பெரிதென எண்ணாதே; நெருப்பிலிட்ட பஞ்சென இவ்வுலகவாழ்வு அழிந்தொழியும்; இவ்வுலக

வாழ்வைப் பெரிதென நம்பி வாழ்ந்தோ ரெல்லாம் இறந்தொழிந்தனர்; உடற்சுகத்தைப் பெரிதெனக் கருதாதே; இறைவனுக்காகச் செத்தவரும், கடுங் காவலில் இருப்பவரும், கனதபசு பண்ணுவதும் விண் காண அல்லவா? தேறுதலாய் நீர் இரும்; சிட்டர் சொன்ன புத்தி நம்பும்; ஆறுதலாய் ஏகன் இயேசு உன் அருகிலிருப்பார்' என்று ஆறுதல் கூறினாள்.

அதிரியான் உள்ளுறுதிகொண்டு, 'உயர்ந்த தவக் கன்னியே! அன்பே! என்னாதரவே! அன்று நீ சொன்ன செய் கருமந்தன்னாலே ஏகன் இயேசு எமக்களித்த மாமறைக்காய் சாகத் துணிந்தேன். ஒன்றுக்கும் அஞ்சேன். நீ போய் எம்முடைய மாளிகையில் இரு. வஞ்ச மனத்தார் வதைத்திடும் நாளறிந்து துஞ்சுமுன் வாரேன்' என்று கூறினான். அதைக்கேட்டு இருவிழியும் நீர் சொரிய அறத்தோரிடம் கூறி, பின்னர் மாளிகை நோக்கிச் சென்றாள். அங்கு மரியன்னையை உதவ வேண்டி நின்றாள். இருபத்தொரு வயதும், அழகும் நிறைந்த புதிய மணவாளனுமான அதிரியான், அரசாங்கப் பதவியிழந்து, உண்ணும் உணவும் துயிலும் மறந்து, கனவிலங்கு பூண்டு, நீங்கா இருட்டறையில் அஞ்சாது அங்கு வாழும் சுத்தருடன் தானும் கூடி ஆண்ட வரை மகிழ்ந்து போற்றி வாழ்ந்திருந்தான்.

இவ்வாறு சிறையில் வாடுகையில் தன் வாழ்நாள் இழப்பதற்குரிய நாளறிந்து தனக்குப் பிணை கொடுத்து நேசமுள்ள காதலியைக் கண்டு வரவேண்டும் மென தவத்தோரிடம் விடைபெற்று, சாயல் மாற்றி, முகக் குறியும் வேறாக்கி, ஆடை வேறுமாற்றி, சிறைவிடுத்துத் தன் இல்லம் நோக்கிச் சென்றான். இவன் வருகையைக் கண்ட தோழி ஒருத்தி நத்தாலியாளுக்கு இவன் வரவினை எடுத்துரைத்தாள். அதனைக்கேட்ட நத்தாலியாள்,

'என் தலைவன் நாதனுக்காய் செத்தாலும் சாவானே அல்லால்வாரான்' என்றுரைத்தாள். மீண்டும் நத்தாலியிடம் ஆளொருவன் வந்து அதிரியான் வருகையை எடுத்துரைக்க, இடிவிழுந்ததுபோல் மயங்கி, கையற்று ஏங்கி, பேச்சற்று நிற்கையில் அதிரியான் அங்கு வந்து சேர்ந்தான். அவன் வருகையை கண்டு துக்கமுற்று யாதொன்றும் பேசாமல் நத்தாலியால் வாயிற்கதவை அடைத்தாள். பின்னர் மனவேதனையுடன் பேசலுற்றாள். 'இறைவனுக்காய் நீ மடிய இருந்த உறுதி இழத்து இங்கெழுந்தருளக் காரணமென்ன? பொன்னாடர் பாக்கியத்தை போக்கடித்தீரே! சாகப்பயந்தீரா? சஞ்சலங் கண்டு அஞ்சினீரா? இங்கு ஏகக் காரணமென்ன? என வினவினாள். அதுகேட்ட அதிரியான், 'உன்னைக் கண்டு மீண்டு போகவே வந்தேன்' என்றுறைத்தான். அவ்வார்த்தைதனை நம்பாமல் விழிநீர் சிந்தி என்னைப் போல் துன்புற்றார் இவ்வுலகில் உண்டோ? சாகப் பயந்தீர்; ஆகவே கர்த்தர் அருளை அற்பமாக எண்ணி விட்டீர். இளமையும், அழகும் பெரிதென மதித்து இவ் உலக இன்பத்தில் பெரிதும் இச்சை கொண்டீர். தம்பிரான் தமக்காய் என் தலைவன் சாகத்துணிவான் என்ற என் எண்ணமெல்லாம் வீணாக்கி விட்டீர், வெகு துயருக்காளாக்கி விட்டீர், உன்தன் விழியில் நான் விழியேன்' என்று வருந்தி, கோபித்துக் கூறினாள்.

அவளது திடமனதும், அன்பும், தன்பால் கொண்ட நல்லெண்ணத்தையும் கண்டு உருகி, 'இறைவன் திருவருளால் ஒன்றுக்கும் அஞ்சாதே; அன்றைக்கு நீ அறிக்கை இட்டபடியே சாகும்போது என்னருகே நீ இருக்க வேண்டுமென்று விரும்பிச் சிறையிலிருச்கும் சுத்தர்களைப் பிணை வைத்து உன்னை நான் காணவந்தேன். காலம் கடத்தினால் அவர்களுக்கு தீங்கு வரும். ஆகையால் நான் உன்னைக் கண்டுசெல்ல வாசல் திறந்து

விடு. நான் சாகும்படி வஞ்சர் என்னைச் செய்துவிட்டால் என்னை நினைத்து அழுதழுது பெருவிசன மடைவாய் என்று கண்டு செல்ல வந்தேன்' என்று சொன்னான். அதைக் கேட்ட நத்தாலியாள் இருவிழியும் நீர் சொரிய வாயிலைத் திறந்து கையால் தழுவிக் கணவன் இரு காலில் விழுந்து, 'என் கோமானே! புண்ணியத்தின் ஆதரவே! நீர் துஞ்சப் பயந்து சிறைவிட்டு வஞ்சித்து வந்துவிட்டீர் என்று எண்ணி வார்த்தை பல பேசி விட்டேன். நான் அறியாமல் செய்ததெல்லாம் நீர் பொறுப்பீர். என் கர்த்தாவே ஆதிக்கடவுளுக்காக! இப் புவியில் மடிந்தால் உயர் முடிபெற்றிடலாம்' என்றுதன் காதலன் தன்னை உள்ளுறுத்திக் கூறினாள். அதிரியான் பின் சிறைவீடு நோக்கிச் சென்றனர்.

சிறையிலிருந்த சுத்தர் தம் துன்பம், புண் கண்டு நத்தாலியாள் வருந்தித் துகில் கொண்டு அவர் புண் துடைத்து அன்பான வார்த்தை பல சொல்லிப் பணி விடைகள் செய்துவந்தாள்.

மன்னன் அதிரியானை அழைத்து, 'உன் நிலை கண்டு என்னுள்ளம் துன்பப்படுகிறது; உன்மீது அன்பு வைத்தேன்; உயர் பதவி தந்தேன்; மேன்மை செய்தேன்; இளைஞன் நீ மன்றல் செய்து சிலகாலமே ஆகிறது; ஆகாதார் சொற்கேட்டு ஏன் துன்பப்படுகிறாய்; முன் னின்ற நிலைக்கு நீ வந்தால் மூவிரட்டியாக்கி உன்னைப் புகழுடைத் தாக்கிடுவேன்; மேடை தருவேன்; விறை புனந்தருவேன்; வன்னப்பரிதருவேன்; வாம்பரி ஏறி ஏவல் செய்ய நல்பாக்கியத்தைத் தருவேன்; என் தெய் வத்தை இணங்கித் துதியும்' என்றான்.

அதற்கு அதிரியான், மெய்யான திருமறையை விட்டு பேய்மறைக்கு வாரேன். கோமானே! பிஞ்சிருக்கக்

காய்த்த பெருங்கனி யென்றாலும் நஞ்சிருக்கக் கண்டு நலமென்று கருதுவரோ? பேய்ச்சுரைக்காய் பேணிக் காப்பாரோ? நெருப்பை மடியில் வைப்பாரோ? கக்கி னதை மீண்டும் உண்பாரோ? தாகவிடாய் மிகுமானால் நண்ணீரிருக்க உப்புநீர் அருந்துவாரோ? நின் மதத்தை நம்பி நாதன் அடைத்த நரகிற்குப் போவேனோ? பேயைத் தேவனென்றும், வானாதி நாதனென்றும் கூறும் உன் பேச்சை கேளேன். மோட்சப் பேரான முதலோனை நான் மறவேன். இயேசு பிரானை நம்பினேன். மண் நடுக்கமுற எத்தனை ஆக்கினையிட்டாலும், உடலைக் கீறினாலும் பாக்கியமென்று ஏற்பேன்; பரமனை நான் மறவேன்' என்று அதிரியான் கூறக்கேட்ட மன்னன் மிக்க கோபமுற்று கட்டியடியும் என்று பணியாளர்களுக்கு ஆணையிட்டான். உடனே பருமரத்தில் அவனைக் சேவகர்கள் வண்தசைகள் சொரியக் குருதிஆறு ஓடுமாறு அடித்தனர். எலும்பு புறம் தோன்ற, தசைகள் பல திக்கும் தெறிக்க, வாழ்நாள் அழியுமாறும் அடித்தனர். பின் சிறையிலடைத்தும் மன உறுதி குறையாது நின்ற தன் கணவனை நோக்கி நத்தாலியாள், 'என் பூமானே! இக் கொடியர் செய்யும் இச்செயலெல்லாம், இப்புவியில் படும் பாட்டிற்கெல்லாம் விண்ணில் வீடுபேறு பெறுவீர்; நீதிபரனை நித்தமும் கண்டிருப்பீர்; சாகினும் ஆதி தன்னை மறவாதே' என்று ஆக்கமொழி பல கூறி மனந் தேற்றினாள். சிறைவீட்டில் அவன் தன் காயம் துடைத்து, மோட்சத்தில் வாழ்வோர் முடிவேந்தர் கூட்ட மதில் சேரும் பாக்கியத்தைப் பெற்றீர், அஞ்சுகள் போல் அளவில்லாத பாக்கியத்தைப் பெற்றீர், என்று ஆறுதலான சொற்களைச் சொல்லி, காயமெல்லாம் துடைத்து மாதவர்க்குப் பணிபுரிந்து நின்றாள். இச் செய்தியை ஒற்றர் அறிந்து அரசனுக்குக் கூறினர். அவன் கடுஞ் சிறை நோக்கிக் கன்னியர் செல்லா திருக்கக் கடுங்காவலிட்டான்.

இதையறிந்த நத்தாலியாள் தன்அழகுக் கூந்தலைக் கத்தரித்து ஆண்மகன்போல் வேடம் தரித்துக் காவலர் கண்டு அறியாமல் சிறைவீட்டில் தொண்டுபல செய்தாள். இச்செய்தியை அரசன் அறிந்து கொடுங்கோபம்கொண்டு காவலர்களை அழைத்துச் சுத்தர்தம் கால்களை முறிக்கும் படி ஆணையிட்டான். இதை அறிந்த நத்தாலியாள், இவ்வுலகவாழ்வு அற்பமென விட்டொழிந்தேன்; தேவ னுக்காக மண்ணில் பாடுபடப்போகிறோம்; பழுதேது! வந்தாலும் அஞ்சோம்' என்று காவலர்க்குரைத்து சிறைக் காவலுட்புகுந்து தன் காதலனைக் கண்டு, 'என்னுயிரே! அன்பே! பொன்னுலகம் கண்டுய்யக் காலம் வந்து விட்டது; ஆதியைப் போற்றி நீர் பட்டபாடுகளுக்கெல் லாம் புகழ்பெறும் காலம் வந்துவிட்டது; உன்தன் முழந் தாளை முறிப்பதற்குச் சேவகர்கள் வருகிறார்கள், உத்தம மனம் கொண்டு ஆதியைப் போற்றிக்கொள்' என்று காதலனை ஆயத்தம் செய்தாள்.

இருவரும் உள்ளத்தால், வாக்கால் ஓதவறிய விண்ணவனைப்போற்றி ஏகனிடம் அன்புடன் ஏக மனந் தெளிந்திருந்த வேளையிலே கொடிய கொலைக்காவலர் கள் சிறை வீட்டினுள் புகுந்து அதிரியானைப் பிடித்துப் பட்டடையில் வைத்து முட்டியால் தட்டி காலை முறித் தனர். இந்நிலை கண்டு கன்னி உள்ளம் தாங்காது கண்களில் நீர் சொரிய கால் முறித்த துண்டத்தை எடுத்து முத்தம் செய்து, உள்ளம் தெளிந்து, துக்கத்தை உள்ளடக்கி சொல்வாள்: 'அன்பே! புண்ணியமே! நீதிப் பராபரனை நெஞ்சிருத்திக் கொண்டவரே! இதுமட்டும் போதாது இறைவனுக்காக முன்னாள் தவத்தோர் பட்ட பாடுகளுக் கொத்திருக்க செங்கரத்திலொன்றை முறிக்க நீர் கொடுத்தால் மேலான வான்புகழ்ச்சி உண்டாகும்' என்றாள். அதுகேட்ட அதிரியான், என் அன்பே! கற்பே! எனதாருயிரின் அன்புத்துணையே! ஆசையைத்தேடும்

உடல், பரமனைப் பணியாத வஞ்சவுடல், புன்மைபுரி நீசவுடல், இதற்கு எத்தனை பாடு, இடர் வந்த போதும் அஞ்சேன்; துணிந்து விட்டேன்; துண்டித்து துக்கப்படுத்தினும், பிச்செடுத்துப் போகினும் அஞ்சுவதில்லை' என்று கூறிக் கொலைஞரிடம் 'என் கைகளையும் முறியும்' என்றான். கொலைஞர் கையை முறிக்க, அக்கைதனை எடுத்து நத்தாலியாள் மறைத்து வைத்துக் கொண்டாள். அதிரியான் ஆவி உடலை விட்டு நீங்கி வானோக்கிச் சென்றது.

வெற்றிகொண்டு மண்ணில் வினை முடித்து வானாட்டை நோக்கிச் செல்ல வானதூதர் எதிர் கொண்டு வந்து அழைத்துச்சென்று பொன் முடிசூட்டி, கீதம் பாடி ஆதிபரன் முன்கொண்டு சென்று வைத்து மகிழ்ந்தனர். சுத்தர்களும், அதிரியானும் இறைவனைக் கண்ணாரக்கண்டு களிகூர்ந்து இருந்தனர்.

அதிரியான் ஆவி உடலை விட்டுச் சென்றதும் சுத்தர்தம் உடலைச் சுடவேண்டும் என்று அரசன் கூற, அவ்வாறே உடலை எடுத்துச் சென்று பலபேர் சூழ்ந்து தீயிலிட்டனர். நேசமுள்ள சுத்தமுடையார் உடல் தீ ணிலத்தில் வேகாமல், இயேசுக்கிறித்துவின் அருளால் இடியு முழக்கமுமாய்க் கார்மேகம் சூழ்ந்து பேய்மழை பொழிய, வாட்டும் மழைகண்டு அஞ்சி அரசனும் தூதர் களும் ஓடிமறைந்தனர். பெருமழையால் அக்கினியும் செத்தது. இந்நிலைகண்டு அனைவரும் வியப்புற்றனர். இறைவனின் எண்ணிலா அருளை என்னென்றுரைப்பது? இவ்வற்புதச் செய்திதனைக் கண்ணாரக் கண்டு களி கூர்ந்து நீதிக் கிறித்தவர்கள் விமலனைப் போற்றி அருந் தவத்தோர் உடலை கோன்தாந்திநோபில் (Contanti-nople) என்ற ஊருக்கு சிங்காரக்கப்பலிலே சிறப்புடன் கொண்டு சென்றனர்.

தன் கணவன் அடைந்த வான் பேற்றைத் தானும் அடையவேண்டி நத்தாலியாள் நாளும் இறைவனை மன்றாடிக் கற்புடனே மாளிகையில் வீற்றிருந்தாள். நத்தாலியாளின் நன்மரபும், உயர்குல வன்னியமும், வேண்டுந்தனமும், வெகுமானமும், அழகும் கேள்வி யுற்றுப் பேராசை மிக்க துரையொருவன் தான் அவளை மணம் புரிய விரும்பி ஆசை மிகவே, மன்னன் மகுமி யானைச் சென்றடைந்து புகழ்ந்து கூறினான். அரசே! சிகாமணியே! என் மன்னா! விண்ணப்பம் ஒன்றுண்டு. இவ்விரி நிலத்திற் பாடுபட்டு இறந்த பேரதிரியானு டைய மனைவி வஞ்சி நத்தாலியாளை யான் கைபிடிக்க வேண்டுகிறேன். ஒப்பில்லா வேந்தே! 'வேண்டுவன செய்' என்றான்.

மன்னன் மகுமியானும் மாதர் சிலரை அனுப்பி எப்படியும் பேசித்துரையை மணம்முடிக்க நத்தாலியாளை இணங்கச் செய்யவேண்டும் மென்றான். மன்னன் உரைத்தபடி அம்மாந்தர் கன்னி நத்தாலியாவைக் கண்டு நளினமான வார்த்தை பல கூறினர்: 'தேனே! திரவியமே! மதுரமொழி வாசகமே! கோலமுகத்தில் சீர்குலைந்து இருப்பானேன். இந்த இளவயதில் இனிமையான தெல்லாம் சிந்தை களித்து சகலவரிசையுடன் சுகமாக வாழாமல், அதிக சலிப்புடனே அழகிளந்து வாடுவதேன். உன்னை விரும்பி வேந்தனொருவன் மணமுடிக்க விரும்பி எம்மை விடுத்தான். அவனை மணமுடித்தால் யாதொரு குறையில்லாமல் அரசச்சிறப்புடன் பெருமை பெற்றிருப் பாய் என்று ஏந்திழையார் கூறினர்.

ஏந்திழையார் மொழிகேட்ட நத்தாலியாள் ஆதியை நெஞ்சிருத்தி, 'இவ்வுலகச் செல்வமெல்லாம் அழிவுடை யதே; அழியாத பெருஞ்செல்வமும், சிறப்பும் யான் பெறு வேன். வான்வீடே என்வீடு' என்றுரைத்தாள். அவள்

தன் மொழியினை மன்னர்க்கு உரைக்க ஏந்திழையார் சென்றனர்.

அவர் சென்றபின் மாதவத்தின் கற்புடையாள் துக்க மிக அடக்கி அரசனின்று வந்த காரியத்தை மனத்தில் எண்ணி, சாகினும் கற்பிழக்க மாட்டேன்; ஆதியே மண்ணும் மனுவும் படைத்த மாபரனே கற்பு வழுவாமல் காத்தருள வேண்டுமென்று ஆதியைப் போற்றி அழுதழுது மன்றாடி நின்றாள். ஓது நெறி கண்டு உகந்த சுத்தருடன் நானும் வானிற்சுகமாய் இருக்கவேண்டும், அன்பான பத்தா அதிரியான் எங்கே இருக்கிறாரென்று சொல்லு மென்று வேண்டி நின்ற நத்தாலியா கனவில் வானதூதர் தோன்றி, உன்னுடைய அன்பான தலைவர் அதிரியான் பொன்பரவு மோட்சத்தில் முன் புகுந்தார். அவர்தம் உடல் துங்கப்பதியென தோன்றும் கான்தாந்திநோபில் என்னும் மாநகரில் ஓரிடத்தில் மகிமைபடவே அடக்கி இருக்கிறது. மகிழ்ச்சியுடன் நீர்தாமும் இவ்விடத்தில் நில்லாது சீர் பொருந்திய அவ்வூருக்கு ஏகும் என்று பிரியமுடன் கூறி மறைந்தார்.

நத்தாலியாளும் நித்திரை நீங்கி கண்ட கனவின் படியே தன் தலைவன் செங்கரத்தைத் தன் கரத்தில் ஏந்தி, தன் செல்வமெல்லாம் வறியவர்க்கீந்து மாற்றார் இச்செய்தி அறியாத வகையில் கிறித்தவருடன் கப்ப லேறிக் கான்தாந்தினோபிள் ஓடினாள்.

நத்தாலியாளை மணக்க ஆசைகொண்ட துரை மூன்றுநாள் கழித்து நத்தாலியாளை மணமுடிக்கத் தேடிவர கற்புடைய நத்தாலியாள், கிறித்தவர்களுடன் கப்பலேறி போனாள் என்ற செய்திகேட்டு, எப்படியும் அவளைத் தேடிப் பிடிக்காமல் திரும்பிடேன் எனக்கூறி ஓடத்தில் ஏறிப் பின் தொடர்ந்து பிடிக்க வென்று போகையில் கர்த்தர் இயேசுவின் திருவருளால் ஈனன்

இழைத்த இடர் அகற்றிக் காக்க வென்று கனமழையும் பெருங்காற்றும் போந்து அலைமோதிப் பெருங்காற்றால் துரை போன கப்பல் திரும்பியது. அவனும் சிந்தை கலங்கி வீடு திரும்பினான்.

நத்தாலியாளும் நீதிக் கிறித்தவர்களும் பயணம் போகையில் பாதி இரவில் பசாசு ஒரு மாலுமியாய் உருகொண்டு வந்து நீங்கள் எவ்வூருக்குப் போகிறீர்கள் என்று வினவி நிற்க, அவர்களும் கான்தாந்தினோபிள் செல்லும் செய்திதனைக் கூற பேய் பாய் மாறிக்கொண்டு கடலை ஊடறுத்துச் சுக்கான் சுழலாமலே திரும்பி இட புறமாறி ஓடுமென்று கூற, பேய் சொன்ன வார்த்தை எண்ணாமல் இறைவனை வேண்டி நிற்க வானதூதன் தோன்றி பேய் காட்டும் வழிதவிர்த்து வலந்திரும்பித் தேவன் முன்னாகச் செல்லப் பின்தொடர்ந்து சென்றனர்.

இறைவன் அருளைக் கண்டு மனம் உருகிப்போற்றி அடிதொழுதனர். பின்னர் திருப்பதிகை சென்றடைந் தனர். அங்கு சுத்தர் தம் உடலை வைத்திருக்கும் வீட்டிற்கு ஏகி வணங்கி சிந்தை குளிரத்தரிசித்து நின்றனர். கடல் கடந்து வந்த அலுப்பால் தரையில் படுத்துக் கண்ணுறங்கினாள் நத்தாலியாள்.

காரிகை தன் கணவன் அதிரியான் மகிழ்வுடன் அவள் முன் தோன்றி, 'ஆதித்துணையே! அன்புடைய காதலியே! என்தனக்குச்செய்யக்கருமம் சொன்னவளே! பாவத்தைவிட்டுப் பரலோகத்திற்காளாக்கி பரகதி சேர்த் தவளே! முப்பொருளும் ஒன்றான முன்னோன் இயேசு தன்னை எப்போதும் கண்டிருக்க ஏற்ற புத்தி சொன்ன வளே! மெய்வேதந்தன்னை விரித்துரைத்தவளே! நரபுரி யில் ஏகாமல் வாகை இமபுரியில் வாழ்வித்த மாதவமே; வரிசையுள்ள மோட்சத்தில் ஏகாதி கர்த்தரைக் கண்டிருப்

போம். சீரிய ஏகன் திருப்பாதம் கண்டு தொழ, அன்பே! என் கண்ணே! அறிவுடைய ஆயிழையே! இன்பான தேவியரே! இப்புவுயில் வாருமென்று' ஆனந்த வார்த்தை சொல்லி வானில் மறைந்தார்.

மங்கை மருண்டெழுந்து நித்திரையில் தன் தலைவன் நேசமாய் சொன்ன மொழி அத்தனையும் அருகிருந்தாருக்கு எடுத்துக் கூறிக் கட்டித் தழுவி மகிழ்ந்து, காலை மடித்து, கரங்குவித்து விண்ணோக்கி வேண்டலேற்றாள், 'மானிடர் எமக்காய் மைந்தராய் வந்தவரே! பொந்து பிலாத்து என்னும் பொல்லாதவன் கீழ் தம்முயிரைக் கொடுத்த மாமரியாள் புத்திரனே, நடுத்தீர்க்க இப்புவியில் வருபவனே! ஆதியே வேத பராபரனே! விண்ணவர்க்கு நாயகமே! என் ஆத்துமாவை இரங்கி அழையுமென்று அழுதிறந்து வேண்டி நின்றாள்.

அவன் விரும்பியபடி அவள் ஆத்மா உடலை விட்டு பிரிந்து வான் நோக்கிச் சென்றது. வானதூதரும் வானோரும் அணிஅணியாய் வந்து அழைத்துச் சென்றனர். இணையில்லா பேரின்பமுற்று நத்தாலியாள் மகிழ்ந்தாள்.

# Critical Introduction

## BALLAD [Ammanaip padal]

The ballad is a short narrative folk song whose districtive style crystallized in Europe in the late Middle Ages and persists in the present day in the communities where literacy, urban contacts and mass media have not yet affected the habits of folk singing. In no two language areas, however, are the formal characteristics of the ballad indentical. For example, British and American ballads are invariably rhymed and strophic (i. e., divided into stanzas); the Russian ballads known as *byliny* and almost all Balkan ballads are unrhymed and unstrophic; and though the Spanish *romances* and the Danish *riser* are alike in using assonance instead of rhyme, the Spanish ballads are generally instrophic while the Danish are strophic parcalled into either quatrains or couplets (Encyclopaedia Britannica, Vol 2, 1982.

Ballad chronology can be traced to singing stories in songs, either stories composed for the occasion out of a repertory of traditional motifs or phrases or stories preserved by memory and handed down orally, is found in most primitive cultures. The ballad habit thus is unquestionably very ancient. As an oral art, the ballad does not need to be written down to be performed or preserved; in any case many of the carriers of the ballad tradition are illiterate and could not make use of a written and notated ballad. The few early

ballad's records survived accidentally, due to some monk's, minstrel's or antiquary's façination with rustic pastimes.

The precise date of a ballad, therefore, or even any particular version of a ballad, is almost impossible to determine. In fact, to ask for the date of a folk ballad is to show that one misunderstands the peculiar nature of balladry. The first recorded of a ballad must not be assumed to be the ballad's original form; behind each recorded ballad one detects the working of tradition upon some earlier form, since a ballad does not become a ballad until it has run a course in tradition. Historical ballads would seem on the surface to be easily datable, but their origins are usually uncertain. The ballad could have arisen long after the event it describes, basing itself, as do the Russian ballads of the kievan cycle and the Spanish ballads about the Cid, or Chronicles or Popularlegendo. It is also likely that many histotieal ballads on similar themes through the alteration of names, places, and local details.

There is no appropriate Tamil word here to correspond to the English word ballad. The term *Ammanaippadal* can be employed to denote the balled. But these two terms are not identical. *Ammanaippadal* generally has a story as the content which is narrated in a long poem where the language used will be simple. The vocabulary, syntax, ideas, emotions, imagery, contex and character are part and parcel of the participating

community, which in turn will have full appeal to the rural masses. Ballads of Tamil are the long *ammanaippadal* run to thousands of lines and belong to several categories. Most of them are intended to entertain the rural public. If the language, the description, and the story interest appeal to them, then this type of poetry becomes a folk poetry. The *ammanaippadal* is always a narrative poem and constitutes the largest volume of Tamil ballad poetry.

**Elements Employed**

The folk ballad tells a compact little story that begins eruptively at the moment when the narrative has turned decisively toward its catastrophe or resolution. Focussing on a single, climatic situation, the ballad leaves the inception of the conflict and the setting to be inferred or sketeches them in hurriedly. Characterization is minimal, the characters revealing themselves in their actions on speeches; overt moral comments on the character's behaviour is suppressed ond their motivation seldom explicitly detailed. Whatever description occurs in ballades is brief and conventional; transitions between scenes are abrupt and time shifts are only vaguely indicated; crucial events and emotions are conveyed in crisp, poignant dialogue. In short, the ballad method of narration is directed towards aciving a bold, sensational dramatic effect with purposeful starkness and abruptness.

But despite the rigid economy of ballad narratives, a repetory of rhetorical device is employed for prolonging highly charged moments in the story and thus quickening the emotional atmosphere. In the most famous of such devices, incremental repetition, a phrase or stanza is repeated several times with a slight but significant substitution at the same critical point. Suspense accumulates with each substitution, until at last the final and revelatory substitution burst the pattern, achiving a climax and with it a release of powerful tensions.

The Tamil term *Ammanaippadal*, however long the poem may be, frequently use the word *Ammanai* as a sort of refrain. This word has no direct impact, yet the poet uses it in the poem. In the Historical ballad, Puranic ballad or in a Romantic story *Ammanai* is used to puncuate the narration. 'Amma' means mother, and *Ammanai* is also used almost in the same sense with related meanings. In the vocative case - *ma* gets elongated as - *maa.* When girls address one another in the course of a game, they use the term *Ammanai* to mean 'my dear' or 'my girl'. This addressing term has assumed the form of a refrain. The ancient Tamil classic *Silappadikaram* employs the form and motif of many folksongs, of which one is the *ammanai.* In chapter 29 of this epic, girls play and dance to the tune of many songs. One such form is called *ammanai vari,* which means a musical piece.

The term *Ammanai* is repeated by the ballad composer. for him, it serves a purpose. Whenever

there is a pause in the story or a switch over from one scene to another, or a retrieval of a situation where the emotions reach the peak the composer uses this term as a refrain. The introduction of this term may also mean the pulling down of the curtain. It can be a magic word used at the appropriate context at the end of each concluding line. It creates the requisite atmosphere both for the singer narrator and for the listener. It is a signal and the clue for the next scene. There are a number of references for *Ammanaippadal* since Silappadikaram. Out of the total of hundred and fifty Tamil ballads, *ammanai* occurs in thirty five titles.

The term *ammanai* in particular, signifies a game of balls or cowries played by three girls. The first girl makes a statement; the second one askes a question based on the first and repeats it; the third gives an answer to both the statement and the question. The answer may be a pun with ambiguity wherein one interpretation may stand for the statement, and the other for the question. All the three girls use the word *Ammanai* at the end of the lines. And hence the name *Muvar Ammanai* is used. This game is played by throwing small balls of different colours up vertically one by one, catching them skillfully and thus continuing the play without any break, and without dropping a ball. Seven or more balls are also used according to the skill and dexterity of the participants. *Ammanai* had been popular among the illiterates for several centuries. By their elements of repetitions, rhyme,

alliteration and assonance, along with pun and play, these songs have endeared themselves not only to the rural girls but also to the urban elites.

Since ballads *(ammanaippadal)* thrive among unlettered people and are freshly created from memory at each performance they are subject to constant variation in both text and tune. Where tradition is healthy and not highly influenced by literary or other outside cultural influences, these variations keep the ballad alive by gradually bringing them in line with the style of the life, beliefs, and emotional needs of the immediate folk audience. Ballad tradition, however like all folk arts, is basically conservative, a trait that explains the references in several ballads to obsolete implements and customs, as well as the appearance of words and phrases so badly grabled as to show that the singer does not understand their meaning though he takes pleasure in their sound and respects their traditional right to a place in his song.

The new versions of ballads that arise as the result of variations are no less authentic than their antecedents. A poem is fixed in its final form when published, but the printed or taped record of a ballad is representative only of its appearance in one place, in one line of tradition, and at one moment in its protean history. The first record of the ballad is not its original form, merely its earliest recorded form, and the recording of a ballad does not inhibit tradition from varying it subsequently into other shapes.

because tradition preserves by recreating rather than by exact reproduction.

## Theories

How ballads are composed and set afloat in tradition has been the subject of bitter quarrels among scholars. The so-called communal school, argued at first that ballads were composed collectively during the excitement of dance and song festivals. Under attack the communalists related to the position that although non of the extent ballads had been communally composed, the prototypical ballads that determined the style of the ballads had originated in this fashion. The opponants the individualists, hold that each ballad was the work of an indidual composer, not necessarily a folk singer, tradition serving simply as the vehicle for the oral perpetuation of his creation. This fact is considered of little importance because the singer is not expressing himself individually, but serving as the deputy of the public voice, and because a ballad does not become a ballad until it has been accepted by the folk community and been remolded by the inevitable variations of tradition into a communal product.

## The techinques involved in ammanaip padal

Repetition is the very soul of a ballad *(ammanaip padal)*. The rural masses will appreciate a particular matter of interest been presented in different forms with different imagery, without altering the theme wherein to follow a single rhythm.

The ballad singer narrates the story in a simple spoken language, with realism and directness; the language used will come out spontaniously which will add to the beauty of the performance. Proverbs play an important role with the unlettered folk; spontanious use of proverbs to make things explicit is a day to day affair; this element finds full expression even in the ballads. Vivid portrayal of incidents help the illiterates to have [permanent trace for generations. Each of the major characters employed ought to have a distinct character, or roll to play. The classical ballad makers had mastered this art and that accounts for their classicism and popularity which continued unabated. But some of the later ballad composers failed to have the prerequisite of mastering this art and hence lost the mass appeal.

Verbal and ornamental decora ion are the other essential techniques involved. The ornamental decoration and description of the jowels used by the major characters, especially the heroine will be enumerative. To a certain extent the illitrate rural public also enjoy the verbal luxury to the material possession. Every ballad adds a postscript at the end which in generally is the form of a benediction on the listener or reader. People expect some assurence of something good on the completion of a good act, even on reading a book, some of these ballads even go out of the way to add a special time or space on the fortune that will bestow on by listening or reading them. For instance, to those who listen or read the *Madurai Viran ammanai,* there

of, wedding will be celebrated; if jobless, they will get a job, if suffering from disease, they will be cured; mental worries will vanish; all prosperity, progeny and eight fold riches will accrue (M. Aruna chalam, 1976.)

The teachnique and form involved in other languages are also almost similar. Any compressed narrative of sensational happenings told at a high pitch of feeling is bound to repeat words and phrases in order to accommodate the emotion that cannot be be exhausted in one saying. Much repetition in ballads is mnemonic as well as dramatic. Since ballads are performed orally, the hearer cannot turn back a page to recover a vital detail that slipped by in a moment of inattention. Crucial facts in narrative, therefore, are incised in the memory by skillful repetition; instruction given in a speech are exactly repeated when the singer reports the complying action; answers follow the form of questions that elicited them. The interwoven refrain is a concession to the musical dimension of the ballad.

The exigencies of oral performance also accounts for the conventional sterotyped imagery of the ballads. For unlike the poet, who reaches for the individualistic, arresting figure of speech, the ballad singer seldom ventures beyond a limited stock of images and descriptive adjectives; knights are always gallant, swords royal, and ladies chaste; what ever red is red as blood, white is stereo-typed as milk white or jasmine white. Such conventions fall

into place almoat by reflex action, easing the strain on the singer's memory and allowing him to give his full attention to the mainpulation of the story. The resulting bearness of the verbal texture, however, is more than compensated for by the dramatic rhetoric through which the narrative is projected. In any case, complex syntax and richness of language are forbidden to text meant to be sung, for music engages too much of the hearer, attention for him to untangle an ambitious construction or relish an original image. Originality indeed, like anything else that exalts the singer, violates ballad decorum, which insists that the singer remain impersonal.

A ballad is not technically a ballad unless it is sung; but though tunes and texts are dramatically interdependent, it is not unusual to find the same version of a ballad being sung to a variety of tunes of suitable rhythm and metre or to find the same tune being used for several different ballads. And just as there are clusters of versions for most ballads, so a given ballad may have associated with it a family of tunes whose members appear to be versions of a single prototypical form.

## Subject Matter

The finest of the ballads are deeply saturated in a mystical atmosphere imparted by the presence of magical appearance and apparatus. In addition to those ballads that turn on a supernatural occurrence,

causal supernatural elements are found all through balladry. The separation of lovers through a misunderstanding or the opposition of relatives is perhaps the commonest ballad story. For example, the heroine dies of love sickness; fathers oppose the suitors of their daughters; an eloping couple is overtaken by the girl's father and brothers.

The outcome of a ballad love affair is not always, though usually, tragic. But even when true love is eventually rewarded after such bitter trials that the price they pay seems too great. The course of romance runs hardly more smoothly in the many ballads, where separated lovers meet without recogniging each other, the girl is told by the 'stranger' of her lover's defection or death, her ensuing grief convinces him of her sincere love, then he proves his identity and takes the joyful girl to wife. Crime, and its punishment, is the theme of innumberable ballads. For instance, Sweetheart of a person poisons him; the murders prompted by sexual jealousy.

In general, the ballads from romances have not worn well in tradition because of their unpalatable fabulous elements, which the modern folk apparently regard as childish. Noted among them are religious ballads. For example, *athiriar ammanai.*

The details in historical ballads are usually incorrect as to fact because of fautly memory or partisan alterations, but they are valuable in

reflecting folk attitudes toward the events they imperfectly report. By far the largest number of ballads that can be traced to historical occurences have to do with local skirmishes and matters of regional rather than national importance.

Sensational shipwrecks, plagues, train accidents, mine explosions, famine, all kinds of shocking acts of God and man were regularly chronicled in ballads, a few of which remained in tradition, probably because of some special charm in the language or the music.

Epic and saga heroes too figure prominently inballadries. For example, *Virapandiya Kattapommu Kataipadal* the out law hero, his chivalrous style and generosity to the poor; warning young men to avoid the curse of piracy; folk's hostile attitude towards religion; inequality in society, religion etc. that breed saga heroes. The kindly, law-abiding, devout is a rarity among ballad heroes.

A few balladries deal with the hazards of such occupations as sea faring lumbering, mining, herding cattle, and the hardship of frontier life. But men in these occupations sang ballads also hat had nothing to do with their proper work.

# Athiriar Ammanai

**Introduction**

Athiriar ammanai is a folk epic, in which the theme is based on the life, sufferings and death of a pious christion couple named Athirian (Adrian) and Nathalial (Nathali). The story is a reflection of the things that had happened in Rome and constantinople. When emperor masumian was ruling over Rome, christians were persecuted. Athirian and Nathalial withstood the persecution and died for their faith. After the arrival of christian missionaries in India this story was narrated to the public and gained popularity in Tamil Nadu for generations. On the request of the Ruler of Kayalpattinam (Kayal pati) this epic was composed as a folk epic.

**Title of the epic**

There is no clear clue to find the title of the epic. The composer has stated that he is narrating the story of *Athirian.* It is also because of the fact that some of the lines end with the word *'ammanai'* and the story has a poetic form, it can be called *'Athiriar Ammanai'*. With a few exceptions, the style of the poem is well structured.

**Name of the Author**

The exact name of the author of this work is hardly traceable. On the frequest of Thanu, the king of Kayalpattinam, a christian well - versed in Tamil and other languages composd this poem.

**Period of the epic**

This epic was written on Saturday the 16th December, 1913.

**Composition**

The term 'ammanai' is used in a few occasions as a refrain. The elements of repetition, rhyme, alliteration, and assonance along with pun and play are significantly employed.

**Summary**

During the reign of Emperor caesar masumian of Italy at the capital city of Rome, upheld and proclaimed his religion as the only true religion. In those days God sent His only begotten son to the world and revealed the truth. Those who heard, believed the truth and followed christ were tortured and persecuted by the king and his men. Those who were afraid of this persecution left their homes and took refuge in the forest and spent their life without food, shelter and clothing. Many of them died of hunger and disease.

During that period, there lived a young, handsome, just and royal General named Athirian. At the age of twenty one he married a young, beautiful, pious and chaste girl called Nathalial. She was a secret christian with full of compassion and love, practising the truth in her day to day life. But she was much worried about her husband who worshipped other gods and goddesses. The king gave a

proclamation to his citzens to accept his religion as the only true religion and to practise it. and if anybody violated it they would be prosecuted and deported.

Some of the faithful christians did not obey the proclamation, and were imprisoned. Athirian was appointed as the chief guard of the prison. Inspite of the severe tortures christians had in the jail, they were not willing to deny their faith in christ, instead they grew stronger in faith and their number multiplied day by day. The attitude of the christians insticated Athrian to investigate deep into the cause of their sacrifices. So he enquired them the reason for their commitment to christianity. They replied him that it was an experience of joy, peace and happiness and it would be difficult for anybody to explain the innumerous blessings one would receive from god. Through sufferings, sacrifices, and practising the true religion (christianity), one would attain heaven and live with the angels for ever and ever, in the presence of God. Realising the truth and moved by the holy spirit Athirian also became a christian. God answered the prayer of Athirian's wife Nathalial.

One of the guards went and reported the conversion of Athirian to the emperor. The emperor was shocked by the news and became furious, called Athirian and ordered him to explain the reason for his conversion. Her answered the king

"would it be possible to hide the real sun?", when he found the redeeming God and the truth that would lead him to heaven to be with the multitude of saints there in eternity he had to become a christian. The king called Athirian closer to him and requested [not to go against thir gods & goddesses to ruin his life. When Athirian refused to obey, the king ordered Athirian to be imprisoned.

As soon as the news was conveyed to Nathalial, she rushed to the prison, kissed the chained feet of her husband and encourged him not to worry for his life in this world. She added that the things around were all vanity, and would vanish as cotton in the fire. But those who believed the truth, suffered for christ, practiced asceticity, and died for God would go to heaven. There should not be any need to be perplexed, Jesus christ would be with him to console as He did to those who believed him.

Athirian was encouraged by her words and told that he was fortunate to suffer for christ because of the good deeds his wife had done in the past. He bid her to return home and promised that he would not return until he knew the day of his persecution. With deep srorow and heavy heart she wept bitterly and left for her palace where she continued in prayer. The princely Athirian sacrificed his government authority, royal food, good sleep, was chained and imprisoned in a dark cell. He was living with other saints praising God without fear.

When the day of torture drew near Athirian asked one of his christian friend's to stand as sureity, and in disguise proceeded towards his palace to meet his wife. One of her maids ran and informed his arrival to Nathalial. But she did not believe the news and said that her husband would not return home, rather he would die in person. Within a short while, when she heard the same news from another person she was shocked with grief, became mum and closed the door. When Athirian reached the entrance, with great agony she asked him from inside to tell her the reason for deserting his faith, prison and the real God. Athirian replied that he came to meet her just before his death. Not convinced by the reply she wept aloud and uttered that she was the most unfortunate woman in the world and added that her husband was afraid of sufferings and death, and did not believe in truth and the grace of God. He considered his youth, rches, beauty and worldly pleasures more than eternity and ran away from prison and God. Her prayer and longing for her husband to become a martyr failed, and she did not want to see his face.

Moved by the sincere and courageous words of Nathalial, he told her not to be perturbed by any doubt, he had come there in disguise to fulfil her wish to meet her before his death. Having kept one of his friends as his sureity in prison waiting he had come to meet her for the last time. If she delayed further the life of his friend would be in danger and asked her to open the door without delay just to see her

and return immediately. Nathalial opened the door, fell on his feet, kissed him and asked his pardon. Both of them hurried together to the prison. There she consoled the christians, nursed and cleansed their wounds.

In the meantime the king took pity upon Athirian, met him and said that he would give higher positions and three-fold riches if he would return to his old faith. But Athirian refused to accept any of these benefits and stated that it would not be proper to pluck the unriped when there were riped ones; would it not be foolish to keep the fire inside one's garment; would it be nice to eat the vomitted food again, would it be sane to drink saline water when plenty of spring water was available; it was impossible for him to forget the heavenly father and to go away from His Son Jesus Christ. Even if he was tortured and speared to death he would never forget and reject his God, the only Saviour. The king became insulted and ordered his guards to torture Athirian and to send him back to prison. The guards tied him and whipped him until blood began to ooze.

Witnessing the courage and faithfulness of her husband, Nathalial said that he would be rewarded for all these sufferings when he reach heaven and would be with the God of justice for ever and ever, she continued in serving and consoling the saints and attended on their wounds. The spies informed the king about her activities in the prison. The king ordered not to allow any ladies

inside the prison. Nathalial cut off her beautiful tresses and in disguise entered the prison and took care of the needs of the prisoners. When the king heard about that he ordered to break the knees of the holymen.

Nathalial took courage, went inside the prison again, met her husband and told that the days were nearing for him to see heaven and to receive the reward for his sufferings; hence not to be disheartened. Then the guards entered in, caught hold of Athirian and broke one of his knees. With immensed pain she took the, cut off leg and kissed it and added that her husband should be prepared to give his hand also, so that he should be counted with other saints. When Athirian requested the guards to cut off his hand, the cruel guards tortured him and removed one of his hands. Nathalial took it, embrassed it, kissed it and hid it somewhere. Athirian breathed his last.

Angels descended down to receive him, crowned him, praised him, carried him and happily placed him before the Almight God in heaven. The king ordered to cremate the body. the guards raised the fire, but Christ sent thunder-storm and heavy downpour. Afraid of the nature's wrath the king and his men fled away; the fire too did not have the power to touch the body - Christians assembled there were surprised to witness the wonderful things happened and praised the living God. Some

of them took the body and boarded it in a ship. Nathalial was unaware of the destination. Then she returned home and led a chaste life, prayed God to help her to join her husband, practised the truth inher day to day life.

One of the princes of Rome was attracted by the family status, beauty, wealth and the character of Nathalial, wanted to marry her. He expressed the desire to the king. The king sent his messengers to plead Nathalial to get her agreement for the marriage. The messenger conveyed the desire to her and said that she would receive a number of privileges from the king if she would agree to the proposal.

But she prayed God to give her refuge so that she could join her husband and to be with him always in heaven. She was much worried, decided to die rather than to loose her chastity. She spent her time weeping and praying for mercy from God to save her. An angel appeared to her in a dream and said that her husband was taken to heaven and his body was burried in the great city of Constantinople. The angel bid her not to stay in Rome but to proceed quickly to Constantinople. When she woke up she kept those things as secret, sold her belongings, gave them to the poor, and with the help of the faithful christians boarded a boat to Constantinople, took along with her the cut off hand of her husband.

Three days latter the prince who wanted to marry Nathalial came to know about her escape to Constantinople. He determined to follow and to capture her. God sent storm and heavy rain that prevented the prince to abandon his attempt and returned to Rome disappointed.

In the midway in the sea satun took the form of a captain and adviced Nathalial and her friends to take a wrong direction, but the angels helped them to find the correct way, led by the angel they reached Constantinople. Finally they found the home where the body of Athirian was kept and paid respect. Due to tiredness of the journey Nathalial fell fast asleep.

Athirian appeared to her in a dream, praised her, and thanked her for the devoted life she led to show the truth to people, particularly to him the way to reach heaven. He expressed his desire to meet her in heaven, to be with her in eternity. With joy and happiness she woke up and explained the dream to the other believers. Then she knelt down to give thanks to God and to pray. God answered her prayer, sent a multitude of angels to carry her soul to heaven, to be with her husband and other saints for ever and ever in eternity.

# அதிரியான் அம்மானை

## மூல பாடம்

சீர் மேவு திண் புவியிற் தேவனருள் கூர்ந்து
பார் மேவ வாழப் பரலோகங் கொண்டாட
மெய் வேதம் வாழ விழற் சமயம் போயொதுங்க
துய்யோர் சுகமிருக்கச் சோதித் திருவருளால்
பாவி களுய்யப் பரகதியி லெந்நாளும்
மேவுங் கிறிஸ் தவர்கள் மேன் மேலு முண்டாக
அவ்விய மத்த வரசர் குலக் கன்னியரை
கவ்வை யறப் போற்றி கழல் பணிந்தேனம்மானை.
தாயே யுனைப் போற்றி சந்ததமு மன்பு வைத்து
தூயோனே வானில் சுக மிருக்க வேணுமென்று
எத்தனையா மாண்டு யிறந்ததலை ஓட்டிலுயிர்
கத்தனருளா லிருத்திக் காஞ்சன விண் சேர்ந்தவளே
நீதிச் சுடரொளியாய் நிருப குலக் கன்னியு மாய்
ஆதிக் குகந்த வளாய் அனைத்துயிர்க்குந் தாபரமாய்
மண் வாட்டங் கேட்ட மதுர மொழி வாசகமே
கொண்டாட்டம் பண்ணியுன்னைக் கும்பிட்டடி பணிந்தேன்.
நத்தாலி யாளெனும் பேர் நாட்டு தவக் கன்னியரை
கத்தரருளாலே கல்யாணஞ் செய்திருந்த
அம்புவியிற் சுத்தன் அதிரியானென் பவ(ர்மேல்)
நம்பி யொரு பனுவல் நான் பாடவே துணிந்தேன்.
அன்பான சுத்த அதிரியாமென்ற முனி
இன்பாக விந்த விரு நிலத்திலே நடந்த
தன்மைச் சரித்திரத்தை (தானறிகுவா) முயர்ந்த
நன்மை யிரோமை யெனும் நாகரிக மாநகரில்

தீட்டுங் கிரந்த மொழி செய்யரங்கிற் சிக்கறுத்து
நாட்டும் படியே நலஞ் சேர் கிறிஸ்தவர்கள்
கொண்டாட வேண்டி குருகுலத்தோர் வாழ்கின்ற
பண்டோது நீதிப் பழங்காயல் மாநகரில்
எம்பிரானுக் கேற்ற யினிய குரு வோரும்

அம்புவியிற் கற்ற அரிய தமிழ் வல்லோரும்
கூடித் தமிழ்ப் படுத்திக் கொண்டாட்டஞ் செய்தகதை
நாடிக் கிறிஸ்தவர்கள் நாள் தோறுங் கொண்டாட
வேணுமென விரும்பி மிக்கோருஞ் சொன்னபடி
தாணு வெனு மரசன் சங்கத் (துறுப்பு)லவன்

காயல் பதி நகரான் காவிய மொன்றோதுகின்ற
வாய தமிழுமறு பாஷையு மறிந்தோன்
மங்காப் பா(வேந்)தன் மனுவேல் தமிழ் கிறிஸ்தோன்
இங்கா மெனத் தெரிந்து யிவ்வுரையைத் தந்தபடி
பாடுகிறே னெஞ் சொற் பழுதாயிருந் தாலும்

தேடும் புகழ்க் கதையிற் தீங்கொன்றுங் காணாது
தாமரைப் பொன் முத்துச் சவரங் கோரோசனை பால்
பூமலர்த் தேன் பட்டு புனுகு நறு சந்தனங்கள்
எங்கே பிறந்தாலு மேற்கும் பெரியோர்(கள்)
சங்கை மிகுந்த தவ அதிரியான் கதையை

தீங்குரைக்க மாட்டார். சிறந் திலங்குஞ் சூரியனை
பாங்குடையோர் கண்டு பழுது சொல்லப் போறாரோ
ஆகையா லெவ்வுயிர்க்கு மன்பு தருஞ் செங்கதிரை
கூகையார் கண்டு குளறுவது போலாகும்
அன்பத்தார் தீங்குரைப்பா ராசையுற்றா ரன்புவைப்பார்

என் புத்தியாலே யிது கதையைப் பாடயில்லை
வெம் பணிகள் போயொதுங்கு (வெங்கதிரோன்) (போ) லெழுந்த
எம்பிரான் கூட்டத் தியல்பாக வந்துதித்தோன்
தொழுவான் கதியடையத் தூய வழிக் காட்டி யந்நான்
யெழுவான் பிறமாக யீந்தியவில் வந்தகுரு
வம்புறந் துக்கி மனுவுய்ய வன்புவைத்தோன்
சம் பிரான்சிஸ்கு சவெரியார் நன்னருளால்
தற்பரனைப் போற்றித் தாய்மரி தாள் பூண்டு கொண்டேன்.
அற்புதனுக் கேத்தமிகே லாஞ்சுபதம் பணிந்தேன்
ஆதி யிவரென் றொரு நா ளங்குலியால் காட்டி நின்ற
நீதி யருளப்பருட் நேசபதம் பூண்டு கொண்டேன்
எல்லார்க்கு முன்னாம் இராயப்பர் தன்னுடனே
நல்லாற்று மார்க்களெனும் நால் மூவரைப் பணிந்தேன்
வாரி தனிற்றவாழ்ந்து......வை......மாளகத்து
காரியம் பேசிக் கடலேறி யூர்புகுந்த
சாத்திரி யென்னுந் தனிப் பேருடைய னையே
ஏற்றிப் பணிந்து யிருதாளைப் (போற்றி செய்து)
ஆறிருவர் பேறு மதினாலவர் தன்வரமும்
பேறுடை யோரான பெரியோரையும் பணிந்தேன்
எண்ணரிய மோட்ச மதிலேகனைக் கண்டேயிருக்கும்
புண்ணிய ரெல்லார் பதமும் போற்றிப் பணிந்து கொண்டேன்
நீங்காத நீதி நிறைய முரோமா புரியில்

பாங்கா யிருக்கும் பாஞ்(சன்)றீத சவை
தன்னருளைக் கொண்டு தலத்திலெமை யீடேற்றும்
மன்னிய மெய்க்குருவின் மலர் பாதம் பூண்டு கொண்டேன்.
கானலை நீரென்று கனக்கவே ஓடுகின்ற
மானெனவே (நானும்) மதியறியேன் வாணர்களே
அன்னாளிறைவ னரியா சனமாம் பெருமை
சொன்னா ரதன் பயனைத் தூயோரறிந்து கொள்வார்
நீட்டிய பூதலத்தில் நேச(மாய்)த் தான் சொல்லுமொழி
கேட்டார் நகைப்பார் கெடு மதியைத் தாராது
என் வாக்கைப் பேணி யெவரும் விரும்பாமல்
முன் வாக்கிறைவர் சொன்ன முத்தி மொழி நம்பிடுவீர்
சொற் பயனுங் காப்புந் தொகை சேரிலக்கணமும்
அற்ப மறியேன் அதிரியா மென் பவர்க்கு
காவியத்தைப் பாடக் கணக்கோ புலவீரே
கூவி முனியக் குறியல் காணம்மானை.
எங்கோனுங் கேத்த (இந்ஞ்) சுத்த மாதவத்தில்
மங்கையுஞ் சுத்தமுள்ள மாபெரிய வங்கிடத்தாள்
உண்டான மண்ணில் உருவ லாவண்யங்கள்
கண்டோரதி சயிப்பார் கற்றவர்க்குஞ் சொல்லரிதே
இத்தாலிய ரோமை யென்னும் பெரும் பகுதியில்
கத்தா விடமாக்க காசியினிலே யிருக்கும்
அற்சிய சீஷ்ட அரிய சவைச் சொற்படியே
நிச்சயம் பண்ணி நிலைக்கு நின்ற நேராளர்
ஏகாதி கர்த்தர் னெமக்களித்த மாமறைக்காய்
அ கார கார் கையில் (அவனி தனில்) மடிந்தோர்

மோட்ச்சத்தில் வாழ்வோர் முக்கிய முடி
புனைந்தோர்
பாக்கிய வாளர் பணிந்த புவிய தனில்
தோன்றியதும் மன்னர் துரைத்தனத்தை
யாண்டதுவும்

ஈன்றோர் பதியி லிவர்கள் இருந்ததுவும்
இவ்வூர் சிறப்பி லியலதிரியானு முனி
அவ்வூரிலோர் மடமின் னான் தவக்கன்னியரை
மன்றல் செய்து கொண்டதுவு மானார்
கிறிஸ்தவளாய்
என்றுந் தலைவனுக்கு ஏத்த புத்தி சொன்னதுவும்

மண்ணுலகை யன்னாள் மகிமை பெறவாண்ட
மன்னன்
பண்ணுங் கொடுங்கோல் பறை முறைகள்
சாற்றியது(ம்)
நீதி யுத்த மன்னன் நெறி சேர் கிறிஸ்தவர்கள்
வாதையுத்து வாடுதற்கு வன் சிறையில்
வைத்ததுவும்
காவலிருப்போர் கதை வசை கண்டுலகில்

ஏவல் த(ருமி)றைக்கு யேற்ற திரியானு
வென்யோ(ர்)
தர்னுங் கிருஸ்தவனாய் சந்தோஷப்பட்டது(வும்)
மானாரிவன்றலைவி மங்கை நற்றாலியர் தாம்
ஆன மொழி கேட்டு அதி பிரிய முற்றதுவும்
வானவனை நோக்கி மகிழந் திரந்து கொண்டதுவும்

அங்கதிரியார்க்கு அரசாங்க மீய்ந்த துரை
இங் கறிந்து தானே யிவரைக் கழற்றியதும்
மன்ன னுரையை மறுத்ததினாலே யுலகில்
இன்ன மிவரை யிருஞ்சிறையில் வைத்ததுவும்
செவ்வையுள்ள சேமமதில் தீ(வி)ரமாய் ஓடி வந்து

ஆதரவாய்க் காத்தவர்க்கு ஆன புத்தி சொல்லியதும்
மாது சொன்ன சொற்படிக்கு மன்ன திரி(யானு மங்கு)
பொதுஞ் சிறைகாக்கும் பொல்லாதார்க் கன்பு(செய்து
ஏதுந் தலைவியர்க்கு மின்ப முள்ள வார்த்தை சொல்லி
மீண்டதுவுங் கன்னி விளங்காமல் மெய்(யன்பு)

கூண்ட தலைவனுடன் கோவித்துக்கொண்ட(துவும்)
மானாள் தனை வினவி வந்த விதஞ் சொன்னதினால்
தேனார் பிரிய முற்று சிந்தை களி கூர்ந்ததுவும்
அக்காவல் தன்னில் அதிரியர் மீண்டதுவும்
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

.........னொண்ணு லார் வந்ததுவும்
.........ய வளா காவல் மாதவர்க்கு
.........நல்ல தூய பணி செய்ததுவும்
.........மசுமி யான் காவல் வைத்த
.........தாரைச் சங்கை படக் கட்டிவைத்து

.........ால்லிக் கொடுங்கோல் புரிந்ததுவும்
.........னுங்கிளர் மதத்தைப் பொய் யெனவே
.........ல்ல ஒளிர் மாயோன் தோற்றதுவும்
அப்பொழுது மன்னவரை அடிப்பித் ததுவும்
மீண்டுஞ் சிறை வீட்டில் மெய்யர் தமை வைத்ததுவும்

ஆண்டவருக் கேத்த கன்னி அந்தத் தவத்தோர்க்கு
ஆடவர் கோல மவளுடுத்து மன்பாக
பாடு பெறாமல் பல தொழும்பு செய்ததுவும்
இவ்வா ரறிந்து யிரக்க மற்ற ராயனென்போன்
ஒவ்வொரு வராக வுயர்ந்ததிரியானுடனே

சேந்த சிறையிருக்குஞ் சிட்டர் சிரங் கால் முறித்து
.........துவு மாதவரோடே யிவரும்
.........ப்ச் சுருதி முடி பெற்றதுவும்
.........நினைவு முதலீறாக
.........லியவின் வன்மைச் சரித்திரமும்

.........சிறி தடியேன் சொல்லுகிறேன்.
.........மெத்திசையு மெப்புவிகளுக்கு மொரு
.........பொருளை நித்தமு மனத்திருத்தும் தவத்துறு
.........யால் தொருவற்றினில் வணக்க
மோடெமக் கருள் செய மாமரி மலர் பதமதை பத்தி
பண்ணி நித்தியமுநட

பொடு பரிசுத்தவர்கள் பரலோக வாழ்வடைவார்
அண்டர் பகிரண்ட வுலகங்க ளுயிர்
எண்டிசை யனைத்தையு மருள் கிருபையால்
உண்டென நினைந்த வுடனொன்று பலனுற்றேன்
உரைக்க வடங்காதவளை ... ... ...

கண்டருள வென்று மொருக் கண்டித
மறச் செய்திடுங்
காரணனே யுருவ தாய் மண்டுமலை யண்டர்
குழல் கொண்டு
பெறுகின்றதவமாமரி பதந் தொழுதிடீர்.
காவேந்து பூதலத்தில் கற்றவர் களாயிருக்கும்
பாவேந்த ரான பரிவுடைய வாணர்களே

கேட் (டருள) வேணுங் கிருபையுடனிக் கதையை
நாட்டமாய்ச் சொல்ல நமக்குதவி யாயிருப்பீர்
முன்னாளிறைவர் தள்ளி மோசமாய் போன மதம்
தன்னைப் பலப் படுத்த தான் வருந்தும் வேந்தர்களில்
பூமடிய முன்னம் பொரும நாடுறைந்த

மா கொடிய னென்று மசுமியானெனும் ராயன்
அன்னீதி கொண்டு அவமதத்தை மெய்யெனவே
தன்னீதி கேடாய்த் தலம் (புர)க்கும் நாளையிலே
வேந்தன் குடைக்கீழ் விரும்பி வரும் நாளையிலே
போந்த பதி யொன்று புகலக் கேளம்மானை.

நீண்டோங்குஞ் செல்வ னிறைனிற்கு வீதியெங்(கும்)
ஆண்ட நகரி வலங்காரஞ் சொலலுகிறே(ன்)
கத்தன் மனுவாகக் காசினியில் வந்த(தன்)பின்
சுத்த முள்ள வேதச் சுருதிதனை உரைக்க
வேந்தனும் மெய்த் துரையு மேலவர் களானவரும்

ஆய்ந் தங்கு சாவி அறிந்த கிறிஸ்தவ (ரைப்)
பங்கப் படுத்துதலும் பாதகங்கள் பண்ணுதலும்
சங்கத்தைத் தள்ளி சதி மானம் பண்ணுதலும்
நிந்(தனைகள்) பண்ணுதலும் நிட்டூரஞ் செய்குதலும்
இந்தப் படியே யெவருங் கிறிஸ்தவரை

நிட்டூரஞ் செய்கை கண்டு நேசக் கிறிஸ்தவர்கள்
பட்டணத்தை விட்டுப் பலபேர் வனம் புகுந்து
உண்டியற்று வாடி யுறங்காதிரவு பகல்
தண்டலையிற் புள்ளுந் தனிமானும் வானரமும்
கோவப் புலியுங் கொடுவரியுங் குஞ்சரமும்

மேவப் பயந்திர்ந்து மேலுலகங்கண்டவர் போல்
வாயு வருந்தி வனத்திற் சருகருந்(தி)
மாயு மளவும் வலிய தவஞ் செய்திருந்தார்.
சேரிகள் தோறுஞ் செறிந்தே (புறமதத்தார்)
ஆரு மறியாம லாதிதனைப் பணிவார்

வீடாரந் தோறும் வெகுபேர் கிறிஸ்தவர்கள்
கூடாரைக் கூடாமல் கொள்கையுடனே(நடந்து)
வஞ்சித்தோற் கஞ்சி மனத்தை யி(ழக்காமல்)

நெஞ்சிற் தெளிவாக நீதியுடனே யிருப்பார்
வாக்கால் விளம்பி மறைக்குறுதியாய்ச் சிலபேர்
தக்கரசன் கையால் தலத்தேமடிந்திடுவார்
இந்தப் படியே யிரக்க மற்ற மானிடர்கள்
அந்தப் பதியி லனுதினம் வீற்றிருப்பார்.
வாவிதனிற் புள்ளொலியு மாமலரில் வண்டொலியும்
காவி மலர் போரொலியுங் கற்றோர்கள் நாவலியும்
வீதியுங் கோபுரமு மேடைகளுஞ் சாலைகளும்
ஓதிய வாணர் உபமிக்கக் கூடாது
இப்புவியில் மிக்கவரா யெல்லோர்க்கும் நல்லவராய்
செப்பரிய நீதி செலுத்தும் பலவானாய்
வாலப் பருவ முமாய் வாகழகு முள்ளவனா
தாலத்தே வேந்தர் தனக்கேவ லாளனுமாய்
வேந்தர் மணி வாசலுக்கு மிக்க துரையாகி
போந்த திரியானுவெனப் புவியில் மகிழ்ந்திருந்தார்.
ஆண்டு மூவேழாய் அவர்க்குதவுங் காலமதில்
கூண்ட (ந)வை மண்ணிற் கொண்டாட்டஞ் செய்து கொண்ட
நங்கை நற்றாலியவி னாமமும் பேரழகும்
சங்கையுஞ் சொல்லச் சரியுவகை காணாதே
பஞ்சூட்டும் பாதம் பகரரிய (தாய்க்கு வந்த)
பஞ்சூட்டுங் கஞ்ச மலரு மிணை யொவ்வாதே
கூ.........பு பாணடை குவிந்து மடல் விரிந்த
.........நீர் பிஞ்செனவுங் கற்றோர் தாரசு வென்பார்
கெண்டை விராலுங் கெளிற்றினமு மொக்கு மென்றால்
பண்டே யுவரியுக்குள் பரந்து வதைக் கண்டு கொள்ளும்

நீட்டு முழந்தாள் நெடுஞ்சிலுவை கைப்பிடித்து
நாட்டில் முனிவனுக்கு நன்மை பெறக் கைகொடுத்த
சங்கைக் குளிரைச் சரி சொன்னோமானாலும்
மங்கைக் கிசைந்ததவம் வைத்த முழந்தாளல்லோ
ஈனக் கதலிதனை யிங்கமுகைச் சொன்னாலும்
மானாறகித்தத்துடை மற்றொருவர் கண்டதில்லை
......... மின்னு மலர் கொடியும் வன்பருத்தி
......... நூலுஞ் சரியிடையென்னோ துகினும்
......... யல்ல மெய் யொழிந்து போந்த தவக் கன்னிகையை
......... ய முள்ளோர் சொல்லி வகுத்துரைக்கக் கூடாதே
......சிள நீரென்றும்......ருவ முகைக் கஞ்சமென்றும்
.........சுடைய கொங்கை யென்றுங் கற்றவர்கள் சொன்னாலும்
மெஞ்ஞானப் பால் சுரந்து மெய்த் தவத்தோருண்பதற்கு
.........தன்னிலிவள் நடந்த சாயலொக்கும்
வாகு புரியும வளையணியுந் தொங்கு செங்கை
ஆகுல முத்தோரை அரவணைத்து அய்யமிட்டு
தாபரித்த கை யென்றுந் தானமிட வங்கை யென்றும்
பூவிரித்த காந்தளென்றும் போந்தவர்கள் சொன்னாலும்
தித்தித்தக் கன்ன லென்றால் சேயிழையார் தாளிணையை
மொய்த் திட்ட வாகு புரி மோசமுகமை யல்ல
ஏகன் புயத் தேந்தி யெல்லோரு முன் பிழைத்த
ஆகுந் தவச் சிலுவை ஆயிழையாள தாங்கு புயம்

.........தழை யெனலாம் வாகு பொன்னி னோலை யொத்த
.........ள்ளத்தைக் கேளாமல் கர்த்தர் மறை கேட்டசெவி
.........சுகமுந்துப்புங் கிளி மொழி......தாம்
.........சுமென்று சொன்னாலு மாயிழையாள் நேச மொழி
.........கள் கேட்டுய்யப் பரனார் மனந்தெளிவாய்

.........யைக் கொன்றோரு மன்பாயுயிர் தெளிவார்.
.........யைத் தேனை வருக்கை நல்ல சீனிகளை
.........லை யஞ்சுகத்தேப் பூவையர் சொல்லென்றாலும்
இவ்வார்த்தை வானோர்க் கிதமாகக் கேளாது
செவ்வாய்த்த கன்னிமொழி தேவனிடஞ் சென்றேறும்

ஆய்பல் மலரிதழுங் கூறு மெள்ளின் மாமலரும்
ஆம்படி யென்றோதுகினு மாயிழையார் தன்னாசி
தேவ மண மல்லாது தேனுலகிலுள்ள மணம்
ஆவலுடனள்ளி யதையுணர மாட்டாது
மைக்கடலு முப்பாய் வடிவாளுங் கொல்லறுலை

புக்கினது மானார் பொரு விழியைக் கண்டது (போல்)
என்றுலகஞ் சொல்லுகினு மேந்திழையார் தன் (விழிகள்)
கன்றிப் புனல் சொரியுங் கன்மவினைக் கட்டவிழ்க்கும்
என்றைக்கு மேக னிடு மிரக்கங் கண்டிருக்கும்
நன்றிப் பராபரனை நாள் தோறுங்கண்டு தொழுங்

சோனை தடுக்கு முகிற் தூங்கு மிருள் மேல் வளைந்த
ஆன சிலை யெனலா மாயிழையார் தன் புருவம்
எவ்வுயிர்க்குந் தாயா மிராச கன்னிதான் சிறந்த
செவ்வை மதி நுதலாள் (சேவடி)யாள் கூந்தலுக்கு
கொண்டலுங் கார்முகிலுங் கோகிலஞ் சேர் தண்டலையும்
வண்டாடும் பூவின் மாபபணை யொப்பானாலும்
அன்னாள் பரிமளஞ்சே ராதிகர்த்தன் தாள்துடைத்த
மின்னாள் மதலேநாள் மென்கூந்தல் கண்டுதொழ
இச்சையுள்ள மென்முடியா(ள்) ளேந்திழை மாரானவரில்
மிச்சமுள்ள கற்புடையாள் வேதனுக்கங்கேத்த மின்னாள்
சங்கை யிளங்க முகைத் தாரணியிலே பழித்த
துங்கத் திருக்கழத்தில் சோதி மறைத்தாலிகட்டி
தேச முறைப்படியே செய்யதிரியானவனும்
வாச மணஞ்சூட்டி வையமதில் வாழ்ந்திருந்தான்.
நேசமு மன்பும் நினைவுமொரு வாக்கும்
பாசமு (பண்பும்) பரிசனையும் பக்கிசமும்
ஒன்றாக வாழ்ந்திங் குலகிலிருந்தாலும்
நன்றாய் மனப்பிரியம் நாதன் ம.........ன
நங்கை கிறிஸ்தவளும் நண்பனைக் கானியுமாய்
சங்கையா யோரிடத்தில் சருவேசுரனருளால்
அவ்வூரி லுள்ளமுறை அன்புத்திருந்தாலும்
செவ்வையுள்ள கன்னி திடமாகவே மனதில்
அன்பு வைத்துக் கொண்டு அயலாரறியாமல்
வன்(புடனே) சோதி(பரன்) (தன்) மகனை நெஞ்சில் வைத்து
சத்திய வேதந் தவறாமலெப் பொழுதும்

பத்தியி ரோமைப் பதியிற் திருச்சவையில்
சொற் கீழமைந்து துயருற்றழு தழுது
அற்புதனைப் போற்றி அனுதினமு மென் சொலுவாள்
வானுலகு மண்ணு மலை கடலு மற்று முள்ள
ஏனையுயிரும் படைத்த யேக பராபரனே
ஒப்பிலா நீதி ஒருவனே உத்தமனே
இப்புவியி லெம்மை யெல்லா மீடேற்ற நின்றோனே
சாவுலுவைச் சென்று தனி வழியிலே மறித்து
ஆவது சொல்லி அருமறையில் சேத்தவனே
சென்னேசி யென் போன் தின முனது மெய் மறையை
என்னேரமும் யழித்தங் கிருக்கின்ற வேளையிலே
உன்னருளினாலே யுனது மறைக்காக
இன்னிலத்திற் பாடுபட்டு இறக்க வருள் செய்தவனே
சொல்லற் கரிய துரை துங்கனேசாக்கி யென்போன்
வல்ல பரியேறி மான் வேட்டையாடுகையில்
வானிற் பிரபை சிந்த வன் மதத்தை மாற்றவென்று
மானின் கலைக் கோட்டில் வந்து வெளிப்பட்டவனே
கண்ணி லடங்காத கருணைப் பெருங்கடலே
எண்ண முற்று வாழு மெளியாள் தனக்கிரங்கி
இன்ப மிகுந்தே எனது யிரொன்றாயிருக்கும்
அன்புடையனான அதிரியா னென் தலைவன்
வன் மதத்தை நம்பி மறை முதலை நம்பாமல்
என் தலைவனாக இருக்க முறையாமோ?
பொய் மதத்தை விட்டுப் புகழுனது மெய் மறையில்
அய்ய மற வழைத்திங் காட் கொள்ள வேணுமென்று

தன் பாவம் நீக்கித் தலைவன் கதியடைய
அன்பே தரும்படிக்கு ஆதியைப் போற்றிசெய்து
மன்றல் பொருந்தி வந்த மாதம் பதினாறும்
ஒன்றிடவே புத்தி யுரைத்தான் தலைவனுக்கு
தாரத்தால் நன்மைத் தலத்ததிரியானுவுக்கு

தூரத்தே போகாமல் சோதி வரவிடுத்த
காரணத்தைச் சொல்வேன் கடல் சூழ்ந்த வையகத்தில்
ஆரணத்தை கற்றோ ரறிந்து கொள் வீரம்மானை.
பொருப்பிற் பிறந்து துணி பொதிந்து பொருமியழுது புவிக்கிரங்கி
திருப்பித் திருப்பிக்கரம் பாதம் திகையா துறைய திடம் போன்று

உருப் பெற்றுலகிற் பிறந்தவனை ஒப்பாதிருக்கு மொரு பொருளை
கருப் பெற்றுனது வயிற்றிருந்த கனியே கருணைதருவாயே
கனியே கருணைப் பெருங்கடலே கற்றோர்க்கினிய கடவுள் தனை
மினியே முதியோர் முனிவகத்து முத்திக் கருணை முதலோனை
தனியே யிருக்குந் தயாபரனைச் சகலற் கிரங்குந் தவப்பேறே

இனிய யிராசக்குலக் கொழுந்தை யீன்றா யெமக்காயிரங்குவையே.
மண்ணோக்கி வாழு மனுக்குலத்தி லுள்ளோரே
கண்ணோக்கிக் கண்டதொரு காரணத்தைச் சொல்லுகிறேன்
அஞ்சாத வஞ்ச னறிவுடைய வற்பு தந்தை
நெஞ்சார வெண்ணி நிறுத்தாத நெட்டூரன்

துட்டன் பெரிய துரோகியெனும் பேருடைய
பட்டந் தரித்த மன்னன் பார்த்திபர்க் கெல்லாந் தலைவன்
மண்ணுலகில் நாம மசிமியா னென்றதுரை
எண்ணுமித்த வூரி லிருக்கின்ற நாளையிலே
நீதிக் கிறிஸ்தவரை நீள் பதிவிட்டோட்டு தற்கு

சாதித்த வஞ்சகத்தைத் தாரணியோர் கேட்டருளீர்
மந்திரிமார் சோதி வலு தூதரையழைத்து
தந்திரி தானான தறு கண்மை பண்ணுதற்கு
துங்கப் பரிமீதிற்றோற்பறை யொன்றேற்றி வித்து
தங்குற்ற ஊர் தோறுஞ் சாற்றுவதைக் கேட்டருளீர்.

மன்னவர்கள் மன்னன் மசிமியாமெனு ராயன்
இன்னிலத்தில் வாழும் யாவருக்குஞ் சொல்லுமொழி
அருந் தமிழைச் சார்ந்த அஞ்செழுத்தை யோதாமல்
பெருங் கிறிஸ்தவ னென்று பேர் சொன்ன பேரை யெல்லாம்
கூட்டி விலங்கிடுவேன் கொப்பளிக்கவே குருதி

குட்டி யடித்திடுவேன் போடுவிப்பேன் வன்சிறையில்
காச்சி யெண்ணெய் தோய்ப்பேன் கடலிற் கவிழ்த்திடுவேன்
ஆக்கினை கண்டஞ்ச அடங்கலையுஞ் சுட்டிடுவேன்
கத்தி கொண்டு கீரிவிப்பேன் கண்ணைப் பிடுங்கிவிப்பேன்
குத்தியுயிர் பறிப்பேன் கொல்லுவிப்பேனென்று சொல்லி

கூறு மொழி கேட்ட குவலையத்தோ ரெல்லோரும்
மீறி யிருக்கறியார் வேந்தனுக்கு வந்து சொன்னார்

அன்னார் மொழி கேட் டனேகங் கிறிஸ்தவரை
மன்ன னழைத்து மறிப்பில் வைத்தாரம்மானை.
வாடி மறிப்பிருக்கு மாதவத்தோர் செய்குறியை
நாடியே வாழும் நற்பாலன் வாசலிலே
சேவித்திருக்குஞ் சிறந்ததிரியானுவுந்தான்
தாவிப் பணிந்து சுத்தர் தன்னுடனே வாய்திறந்து
அன்பா புண்ணியரே அம்புவி யிலிற்றுயரம்
இன்பாக நீங்களிடைஞ்சப் படு வானேன்
இற்படி பாடுபட்டங்கித் துயரோடேயிறந்தால்
தற்பரனாருங்க குத்தாற் பலனேதுரையீர்
என்றதிரி யானு மியம்பத் தவத்தோர்கள்
நன்றியத்த மன்னவன் தன் நற்றுரையே கேட்டருளீர்
மாகமு மண்ணு மனுக்குலமுஞ் செய்த கர்த்தன்
ஏகனளிக்கு நன்மை யெங்களாற் சொல்லரிது
தன் வேதம் போற்றி தனக்கிடைஞ்சல் பட்டவர்க்கு
அன்பான வானி லனந்தனந்த காலமெல்லாம்
பேர் நேசஞ் சிந்தப் பிரதான மாயிருந்த
நேர் நேசமுள்ளவர்க்கு நீதி கொடுத்தருளி
ஆனந்த மோட்ச்சத்தில் லாஞ்சுகளோடெப் பொழுதும்
வானவனைக் கண்டு மகிழ்ந்திருப் போந்தப்பாது
என்றுமே சொன்னாரிது கேட்டிருந்த துரை
அன்று மன மகிழ்ந்தார் ஆதி மறைக்காய் மடிய
மாபிரிய முத்தே மறிப்பிருக்குஞ் சுத்தருடன்
தாவு துரை யன் றுகந்து தானுங் கிறிஸ்தவனய்
சீரியதன் காதலியார் தினமிரந்து கொண்டபடி
பேரெழுதியே கொடுத்தார் பெரியோனருளாலே.

இவ்வை (பவந்) தன்னை யிருந்தவரிலோர் தூதன்
கவ்வை யற மன்னனுக்கு கட்டுரைக்க
வேணுமென்று
சென்று கரங்குவித்துச் செப்புவதைக் கேட்டருளீர்.
நன்றியுடைய நற்பாலர் நாயகமே
மாமகுடஞ் சூட்டி மடங்காசனத்தேறி
ஏமமுடி வேந்தர் தொழு மெம்முடைய ஆண்டவனே
அறிவுக்ககத்தியனே அழகுக்கு மன்மதனே
வறியார்க்கு வாழ்வீய்ந்து மானிலத்தை
ஆண்டிருக்கும்
எம்மன்னர் போற்று மிராசனேயுந் தனக்கு
நம்பிக்கை யுள்ளவனாய் நற்றுரைக்கு
மேற்றுரையாய்
இங்குனது வாசலுக்கு ஏத்த துரையாயிருந்த
துங்கன் துரை நிபுணன் துய்யதிரியானு
வெம்போன்
தானுங் கிறிஸ்தவனாய் தன் பேரெழுதி வைத்தார்
ஆனது கண்டிங்கே அடியேனுரைக்க வந்தேன்
மன்னனிது கேட்டு மாகோபமாய் வெகுண்டு
இன்னலுத்த மன்ன னியலதிரியானு தன்னை
தன் முன் வர வழைத்துச் சாத்து வானம்மானை.
மண் முன் பணி பூண்ட மாபெருமை தான்போட்டு
என்னைப் புறக்கணித்து என் வார்த்தைக் கேளாமல்
(தன்)னைக் கிறிஸ்தவனாய் விட்ட கோரனனவார்
... ... ...றதை கேடடாயற மயக்கமாகி விட்டாய்
... ... ...மககனான தொனித்த உத்த
பறைகேட்டிலையோ
காவலிலே வாடுங் கன செனத்தைக் கண்டிலையோ
ஏவலிலே யென் கீழிறந்தவரைக் கண்டிலையோ

நிந்தித்து நம் தலைவர் நேசமற்று விட்ட மனை
சிந்தித்து நீயிருக்கச் செப்பியதார் சொல்லுமென்றார்
அப்போது தானு மதிரியா மென்பவரும்
வெப்புத்துக் கேட்ட வேந்தனே கேட்டருளாய்
செப்புதற்குப் பேரிலையோ தேர் வேந்தே சூரியனை
ஒப்பினை கண்டாருலகில் மறைப்பாரோ
..............கர்த்தனெமக்கொருவருண்டெனவே
.........மத்தின் மனதறிவு தாளிலையோ
... ... த்தைக் கண்டிலையோ மற்றுயிரைப் பாற்றிலையோ
... ... ...னத்தைக் கண்டறியா வாசை யுனக்கிலையோ
ஈடேற்றுங் கர்த்த னெவர்க்கு மொருவனென்று
வீடேற்று நன்மை விரும்பினேனென்று சொன்னார்.
சொன்ன மொழி கேட்டுத் துரைகளுக் கெல்லா மரசன்
இன்ன மருகனழைத்து ஏத்ததிரியானு தன்னை
என் முன்னோர் போற்றி இறைஞ்சுகின்ற தேவதைகள்
தன் முன்னாய் நின்று தவறுரைக்கக் காரியமோ
நீட்டும் புகழ் படைத்த நின் பெருமை போக்கடித்து
தாட்டிக்கையான தமிழ் மார்க்கம் நீமறந்து
போகக் கடனோ புவிக்குளிது புத்தியல்ல
ஆகத்திற் கோப மனலா யெரியுதய்யோ
ஏது மயக்க முற்றிங் கென்னைப் புறக்கணித்தாய்
போது முனதன்பு பொறுத்து விடப்போகாது
.................................

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
.........சொல்லி மன்ன னிரங்காத வஞ்சகத்தால்
.........னுதனை அருஞ் சிறையிற் போடுவித்தான்
...............திங்கே யியேசுவுக்காயிப்புவியில்
.........யிருப்பதையுங் கனவிலங்கு பூண்டதையும்

.........தனிலிருக்கு .........கங்கொருவன்
.........லைவன் மறிப்பிருக்கப்பட்ட செய்தி
.........பொழுதே துயருற்றெழுந்திருந்து
.........முடையா னிணக்கினிய காதலனார்
சிறப்பிலகதிகதுரை சிங்கார வாண வீரன்

மறிப்பிலிருக்கும் வகையே தெனவே மன்னவனார்
சொல்லென்றுரைக்க வந்த தூதனுமென்
சொலுவான்
வ(ல்ல) கிறிஸ்தவர்கள் மாமறைக்காய் பாடுபட
கண்டிருந்த வும்முடைய கணவனா ரானவரும்
அண்டர் பரன் மறைக்காய் அவர் தானும்
பாடுபட்டு

சாகத்துணிந்ததுவைத் தான்கேட்டு
ராயனென்போன்
.........துடனே விணை மறிப்பிடா ரெனவே
.........ன மகிழ்ந்து கிட்டாய் பிரியமுத்து
.........நல்லு டுப்பைப் போது மெனக் கழற்றி
.........வாயருங் காவல் வீட்டில் வந்து

.........றியத் திடனாகக் கைப்பிடித்த
.........லன் தாளிற் கன விலங்கை முற்றி செய்து
.........லத்தில் மானாள் புருடனுக்குப்
புத்தி சொன்னாள்.
நேசப் பிறப்பே னினைவறி வொன்றானவனே
வாசப் புவியில் மனுவாழ்வை யெண்ணாதே

காட்டில் நிலவுங் கனலிலிகு பஞ்சுமென
நாட்டிற் பவுசும் நமக்கான நன்மையல்ல
வாரணத்தி லேறி மடக் கொடியைக் கோலமிட்டு
பாரணத்தை நம்பி பவு ராண்டிருந்தவர்கள்
துஞ்சி விட்டாரல்லாற் சுகமிருக்கக் கண்டோமோ
பஞ்சி பட்டு யிவ்வுடலை பத்தாவே யெண்ணாதே
(எத்தாலும்) முன்னோர் இறைவனுக்காய் பாடுபட்டு
செத்தாரதுவு மன்றித் தீயனிட்ட காவலிலே
கண் காணவிப்போ கன தவசு பண்ணுசிறார்
விண் காண வல்லோ விரி நிலத்திலென் தலைவர்
தேறுதலாய் நீரிருந்து சிட்டர் சொன்ன புத்தி நம்பும்
ஆறுதலா யேக னருகழைப்பாருண்மையிது
என்று கன்னி சொல்ல யிவள் தலைவனேச முத்து
கன்றுஞ் சிறையிருந்து கர்த்தர் மறைக்காய் மடிய
உள்ளுறுதி கொண்டு உயர்ந்த தவக்கன்னியுடன்
தெள்ளிய மென் மொழியே தேனே யென் சேயிழையே
ஆவித்துணையே அறிவுறு மென்னாதரவே
தேவியே யின்று சொன்ன செய் கருமந்தன்னாலே
ஏகனியேசு யெமக்களித்த மாமறைக்காய்
சாகத்துணிந்தேன் தையலே தார் குழலே
ஒன்றுக்கு மஞ்சே னுடையவனை நம்புகிறேன்
இன்றைக்கு நீர்போம் மெமக்குடைய மாளிகையில்
வஞ்ச ரெமைத் தானே வதைத்துவிடும் நாளறிந்து
துஞ்சு முன்னம் வாரேன் துணைவிழியில் நீர்முழிக்க
என்ற மொழி கேட்டு யிரு விழியும் நீர்சொரிய
அன்றழுது கொண்டு அறத்தோரை யும்மினவி
போனார் தவக்கனியார் போற்றரிய மாளிகையில்

ஆனால் வருங் கதையை அப்புவியோர் கேட்டருளீர்.
ஆனாள் வயிற்றிலிருந்தாளை அன்றேசுவுக்கீன தகுந்தாளை
கோனார் மலையிலிருந்தாளைக் குதலை மொழியைப் பெறுந்தாளை
ஈனா வரம்பை யெரித்தாளை யீறே யினிமைப் பெறுந்தாளை
மானாற் கரசி யெனுந்தாளை மரியைப் பணிய மறுவறுமே
மரியைப் பணிந்தார் மரியார் மெய்வானத்திருக்கும்
வளரு நன்மை பிரிசத்துடனே பணியாதார் பின்னாருதவிபெறுவார்
சொல் அரிய கரியவரும் பொருளை ஆதிக்குகந்த வருஞ்சுதனை
உரியற் குரிய வொரு பொருளை யுலகத்தளித்தாயுதவுவாயே.
ஏணாட்டம் பண்ணி நின்ற யியல் வேந்தன் காவலிலே
நேய முத்து வாட நினைவு கொண்ட சுத்தனெனும்
தூயன திரியானு துரைத்தனத்தைச் சொல்லாவென்றால்
வங்கிடத்தில் மிக்கோன் வடிவிற் சிறந்தழகன்
அங்கிடத்தில் மிக்க அரசாங்கம் பெத்த துரை
வாலப் பிராயம் வய திருவத்தொன்றாகும்
காலத்தே யுள்ள செல்வங் கட்டுரைக்கக் கூடாது
மன்றல் மணமுடித்த மாசம் பதினாறு
ஒன்றல்ல மண்ணி லொரு குறையுங் காணாது
அம்புவியை யாளும் மரசன் மகிமியான வனும்
நம்பிக்கையாக நகராண்டிருந்த துரை

ஆண்ட பதி விட்டு அரசாங்கந் தானிழந்து
பூண்ட உடுப்பிழந்து பூதலத்திற் வாழ்விழந்து
உண்ணு முணவிழந்து உற்றதுயிர் தானிழந்து
எண்ணுஞ் சினேகர் யாவரையும் போக்கடித்து
மானிலத்திற் கேட்டவனாய் மங்கா வலுமறிப்பில்
கானிலத்திற் தோயக் கனவிலங்கு பூண்டு கொண்டு
நீங்கா யிருட்டறையில் நெட்டூரர் காத்திருக்க
தாங்காத் தவசு பண்ணி தற்பரனைப் போற்றி செய்து
அங்கிருக்கும் சுத்தருடன் அனாதிக்குகந்தவனாய்
மங்களங்கள் சொல்லி மகிழ்ந்து சிலநாளிருந்து
வானாளிழப்பதற்கு வாறனாளுள்ளறிந்து
பேணாதாரான பெருங்காவலாளருக்கு
பெருகுந் தவத்தோரைப் பேணி பிணை கொடுத்து
கருதிய நேசமுள்ள காதலியைக் கண்டுவர
வேணுமென்று சொல்லி வெகு பிரியந்தன்னுடனே
தானுஞ் சிறைக் கூடந் தன்னிலெழுந்திருந்து
தன் வளவு நோக்கித் தவத்தோர் விடை வாங்கி
முன் சாயல் போட்டு முகக்குறியுடம் வேறாகி
காயம் (போ)த்திக் கனத்த மிடிமையுடன்
நேயமுடையவளை நீண் மனையிற் காண வந்தார்.
துய்யோன் வருஞ்சாயல் தோகையொருத்தி கண்டு
அய்ய மன்றி வாறா ரருந் தலைவ ரென்றுரைக்க
நத்தாலியார் கேட்டு நாதனுக்கா யெந்தலைவன்
எத்தாலுஞ் சாகாம லிங்கு வரமாட்டார் காண்
என்றுரைக்கச் செய்தே யிவளுடைய ஆளொருவன்
அன்றதிரியானு மகனாடி வாற செய்தி
மெய்யென்று சொன்னான் விழுந்தயிடி போல் மயங்கி

கையொன்று மேனி கருதி மதி மறந்து
பேச்சத்தாப் போலே பெருமூச்சுற வெரிந்து
நாச்சத்தும் பேசாமல் நங்கை யிருக்கையிலே
நேயம் பொருந்தி நெறிக்கு நின்ற நீதி சுத்தன்
தூயன் துரைத்தனத்தான் சுத்தன் திரியானுவுந்தான்
வந்தார் தலைவியார் முன் வாய்த்த தலைவாசலிலே
சந்தாபத் தோடே தலைவியொன்றும் பேசாமல்
வாசலடைத்தாள் மனதில் வெகு துக்கமுற்றாள்
நேசமொன்றும் பேசாமல் நெட்டூரம் பேசலுற்றாள்
நெக்கி மிக வழுது நிறைந்த மெய்யிலிட்டிருந்த
தக்க உடுப்பான தெல்லாந் தான் கழற்றி போடலுத்தாள்
என்னே தலைவா? இறைவனுக்காய் நீமடிய
உன்னி இருந்த உறுதி தனை விட்டிழந்து
இன்னேர மிங்கே யெழுந்தருளக் காரியமென்?
பொன்னாடர் பாக்கியத்தை போக்கடித்துப் போட்டீரோ
சாகப் பயந்தாயோ சஞ்சலங்கண்டஞ்சியையோ
ஏகக் கரும (மினி) யென்தலைவாவென்று சொன்னாள்
சொன்ன மொழி கேட்டுச் சுருதிக் குகந்த சிட்டன்
மின்னே யுனை வினவி மீண்டு நான் போக வந்தேன்
வந்தே னென வுரைத்த வார்த்தைதனை நம்பாமல்
சிந்த யிருவிழி நீர் செப்புவானம்மானை.
இப்புவியிற் பாவி யெனைப் போலக் கண்டதுண்டோ

அப்போதே சொன்னா ரவர் வார்த்தை மெய்யெனவே
சாகப் பயந்தீர் தவறினீர் வேதநிலை
அகத்தே கர்த்தாவை அற்பமெண்ணாதே போனீர்
வங்கிடமு முந்தன் வயதிளமையாம் நலனும்

சங்கைகளும் விட்டிழந்தீர் (சக)தலத்தில் (இச்சை) வைத்தீர்
தம்பிரான் தன் மறைக்காய் சாகத்துணிவு கொண்டு
நம்புவான் தேவி யென்று நான் பேறு பெற்றதல்லாம்
வீணாக்கிப் போட்டீர் வெகு துயர மாக்கி விட்டீர்
வாணா ளுக்கஞ்சி மதிமயக்க மானதென்ன

உன் கண் தனிலேயும் (ஒரு)வரினும் நான் மிழயேன்
என் கணவனென்ன யிலச்சை யில்லையோயெனக்கு
(நேச முடனே) (நிதமு)முனக் கன்பு செய்யேன்
பேசத் தெளியேன் பெருவிதனமாகி விட்டேன்
என்று தான் மானா ரிரங்கி யழுங் குரலை

அன்றதிரி யானு மறிவால் மிகத்தெளிந்து
கன்னிதிடமுங் கருத்திலுள்ள அன்புகளும்
தன்னை முனிந்து சொன்ன சர்குணமுங் கண்டுருகி
நின்று சிலவார்த்தை நேசமாய்ச் சொல்லுவராம்
என்று மிருக்கு மிறைவன் திருவருளால்

ஒன்றுக்கு மஞ்சாதே யுண்மையுள்ள தேவியரே
(அன்றை)க்கு நீர் தா மறிக்கை யிட்ட சொற்படியே
சாகும் போதென்னருகிற் தார்குழலே நீரிருக்க
ஆகும் படி சிலுவையில் அங்கிருக்குஞ் சுத்தர்களை
உத்த பிணை கொடுத்து உன்னை நான் காணவந்தேன்.

சத்தின்னஞ் சென்றால் தவறு வருஞ்சுத்தருக்கு
அன்பே யென துயிரே ஆவிக் குடையவளே
இன்பான தேவியரே யென்தனக்கு வாசல்விடும்
தேனே யெனன்பே (தெ)கிட்டாத தெள்ளமுதே
மானே முதுரிதமே வஞ்சியே வாசல் விடும்

என் கண்ணொளியே என(க்கரிய)வாதரவே
உன் கண்ணில் நான் மிழிக்க ஒண்ணுதலே வாசல் விடும்
நான் போக வேணும் நவங்களைநீர் காணாமல்
தான் சாக வஞ்சர் சடுதி யெனைக் கொன்று விட்டால்
என்னை நினைந்து யிரங்கி யழுதழுது

பின்னைச் சலித்துப் பெருவிதனமாவை யென்று
சொல்லி மினவித் துணைவிழியிலே மிழிக்க
மெல்லியரே வந்தேன் விரும்பிக்கதவுதிற
என்ற மொழி கேட்டு யிரு விழியும் நீர் சொரிய
நின்றடைத்த வாசல்தன்னை நேரிழையுந்தான் திறந்து

கையாற்றழுவிக் கணவனிரு கால்(களி)லே
மெய்யாகப் பூண்டு விளம்புவாள் மெல்லியரும்
கோமான் துரைமார் குலவிளக்காய் வந்துதித்த
பூமானே யென்னுடைய புண்ணியத்தினாதரவே
துஞ்சப்பயந்து துடக்கு விட்டு நீரொளித்து

வஞ்சித்து வந்த தென்று வார்த்தை பல பேசிவிட்டேன்
ஆண்டவனே யிங்கடியா னறியாமற் செய்ததெல்லாம்
மீண்டும் பொறுத்திடென்று மெல்லியருங்கை தொழுது

நீரே யென் கர்த்தா (என்) நினைவுக் காதரவு
ஊரே தெமக்குரிமை உத்தவர்கள் தானேது

பென்னேது மண்ணேது பொங்காழி சூழ் புவியில்
மின்னேது வெல்லாம் விழலான வாணிபங்காண்
ஆதிக் கடவுளுக்காய் அம்புவியிலே மடந்தால்
ஓதித் தொலையா வுயர்முடிகள் பெற்றிடலாம்
என்று மணமகளா ரின்பமுள்ள வார்த்தை சொல்லி

ஒன்றிய தன் காதலனை உள்ளுறுதிக் குள்ளாக்கி
தேனார் நத்தாலி யாவும் செய்யதி ரியானுவுமாய்
வானாதியைப் புகழ்ந்து வந்து சிறைவீடு புக்கு
அங்கிருக்குஞ் சுத்த ரடிபட்ட புண்கள் கண்டு
மங்கை சலித்தழுது வானவனோடே யிரந்து

தூய துகில் கொண்டு துடைத்தவர்கள் தன்
முறிவை
நேயமாய்ப் பார்த்து (நெ)கிழா தரு(கிருந்)து
உத்தேவல் செய்து உறுதித்தவத்தருக்கு
நற்றவளு மன்பாக நாளேழு மங்கிருந்தாள்.
மண்மேல் மனுவாய் பிறந்தவரே மனதேதுமக்கு
மாறு சமையம்

எண்ணாதொழியு மொரு பொருளை
யெமக்காயிரங்கி யிருநிலத்தில்
பாண்ணோதிடவே பலவானோர் பணிய விடையாம்
பகர் மலையில்
கண்ணே குளிர யெமக்களித்த கனியைப் பணியக்
கசடறுமே
......................................கற்பிழவாமல்
.........பலரும் பணிந்து தொழப் பண்டே யுருவாய்ப்
பிறந்தவரை

.........கரத்திலினிதேந்தித் தன்மையுறாமல்
முலையூட்டி
தங்காக் கருணை சிறந்தோங்குந் தேவகனியை
வணங்குவீரே
.........நித்தியமு மன்பு
நெறி நடத்த வேணுமென்று............
.........பலவாண ரானோரே............

.........யுள்ள சுத்த னுயர்ந்த திரியானு தன்னை
வன்மையுள்ள ராயன் வாவென்றரு கழைத்து
தற்கித்துக் கொண்டதுவுந்தான்
தோத்தவாறு கண்டு
விற்புத்தியாக விரோதம் விளைத்ததுவும்
கட்டி யடித்ததையுங் காலை முறித்ததையும்

முட்ட வதைத்ததையும் மோசமறச் சொல்லுகிறேன்
நீட்டிய தாள் பூட்டி நெடுங்காவல் வைத்திருந்த
நாட்டிற் தவத்தோனும் நற் பாலன் முன்பழைத்து
............... ரிருக்க மதிகததிரியானுதன்னை
............... முனிந்து உரைக்கலுற்ற
முனிராயவனே

...........சொல்லு மதிரியானென்பவனை
பிஞ்சா யுனை வளத்துப் பேர நேளகங்
கொண்டிருந்தேன்
மன்னர் பணியு மணி வாசலான துக்கு
உன்னை முகனை செய்து உண்டான சங்கை
பண்ணி
(மெய்த்து)ரை யாகவைத்து வெகுமானஞ்
செய்திருந்தேன்

இத்தனையோ யென்னை (இகழ்ந்து மதி)
கெட்(டாய்)

என் வாசல் தன்னி லிருந்தேவல் செய்பவரில்
அன்பான பேர்நீர முகிங்குனக்கிணையார்
வாலப் பிராயமிது மன்றல் செய்த நாளுமிது
காலத்தை வென்று கன வாழ்வை நம்பாமல்
ஆகாதார் சொற்கேட் டறிவு மெளியவனாய்
சாகத்துணிந்து சரவைப் படுவானேன்
கையிரண்டுஞ் சேத்துக் கழலிரண்டுந் தானிறுக்கி
பொய் திரண்டாப் போலே பொருத்துஞ்
சபைநடுவே
நிற்கின்ற சாயல் கண்டு நெஞ் செனது புண்படுது
கற்குசமாயெந்தன் கருத்தைக் குழப்பாதே
(முன்னி நர)ங்கையினு மூவிரட்டி யாக்கி யுன்னை
பின் தந்து யின்னம் பிரதானமாக்கி விப்பேன்
மேடை தருவேன் விளையும் புனந்தருவேன்
மாடை தருவேன் மணி மாலைதான் தருவேன்
வன்னப் பரி தருவேன் வாம் பரியிலேவல் செய்ய
நன்னோன் றொழுங்கும் நலமுமிகத்தருவேன்
வேண்டிய பாக்கியத்தை மேன்மேலும் நீபொருந்து
ஆண்டவன் சொற் கேட் டறிவத்த புத்திவிட்டு
என் தெய்வ மானதையும் யிணங்கித்து தியுமென்று
அன்போடு மன்னனரு கழைத்துச்
சொன்னதெல்லாம்
துய்யதிரியான துரை (துச்சமெனக்கேட்டு)
அய்ய முரைத்தீ ரரசர் மகாகோனே
பிஞ்சிருக்கக் காய்த்த பெருமாங்கனியெனிலும்
நஞ்சிருக்கக் கண்டு நலமென்றருந்துவரோ
ஏச்சுரைத்து எத்தனை நீ ரிங்கினிமை சொன்னாலும்
பேச்சுரைக்கா யென்றறிந்தார் பேணிவைத்துக்
கொள்வாரோ

கருப்பை யறுக் கறியுங் கண்டெடுத்துத் தூக்கறியார்
நெருப்பை மடியில் வைக்க நேசமுள்ள பேருமுண்டோ
கொக்கின மண்ணிற் குறு விலங்கு போல முன்னம்
கக்கினதை மீண்டுங் கனமா(யருந்)துவரோ
வெப்பு மிகவானால் மெய்யாய் நண்ணீரிருக்க
உப்பு நீர் தன்னை யுணர்வாயருந்துவரோ
ஏதெண்ணஞ் சொன்னீ ரிம் மதத்தை நான் வணங்கி
நாதனடைந்த நரகத்திற் போவேனோ

வன் பேயைத் தேவனென்றும் வானாதி நாதனென்றும்
என் பேச்சை நீர் தானியம்பாதே மன்னவனே
உன்னுடைய வேதத் தொழுங்கும் நடையும்
இன்னிலத்தோர் கேட்க யியம்புகிறேன் கேட்டருளீர்.
பாணனுக் கன்றடிமைப் பட்டு விற கெடுத்து

நாண மற்றுத் தூது நடந்ததுவும் போதாமல்
கூண்டு சுடலையிலே கூளியுடன் கூத்தாடி
பாண்டியன் தன் கையால் பருக்க வடி பட்டு வந்த
சங்கரனோ வுங்கள் தெய்வம்? தன் தலையிற் பெண்ணை வைத்து
அங்கையிலே ஓடெடுத்து மய்ய மிரந்துண்டவனே

பாம்பணிந்து வெம்பிறையும் பார்ச்சடையில் (வைத்து)
தூம்புடைய மொய் வனத்திற் தோகையர் (மேலாசை வைத்து)
நஞ்சை மிடத்தருந்தி நாரியரைப் பாக(ம் வைத்து)
அஞ்சு முகமெடுத்து ஆனை(யிதழுடுத்து)
ஈமத்திலாடி யெலும்பை யணிந்த(வனாய்)

சாமத்தொருவனுக்காய் தைதலுடன்.........
வாரணத்தைப் போற்றி மடவார் தனைப் புணர
காரணத்தில் வேடுவனாய் கண் மூன்றுடைய (துதிக்)
கையனொரு மகனாய்க் காமன் மறுமகனாய்
செய்ய அறுமுகனாய் சேர்ந்த கணபதியும்

பெற்றெடுத்த பேராய் பிதாவுக்கிவர் குருவாய்
உற்ற வுமை தாயா யொருபோது தேவியுமாய்
மாலுக்கு மைத்துனனாய் மற்றும் பிரும்மாவை
கோல மறு மகனாய் கொண்டவனோ வுங்கள் தெய்வம்?
பித்தனெனப் பேர்படைத்து பிட்டுக்கு மண் சுமந்து

நித்தம் நெருப்பேந்தி நீண்ட புலித்தோலுடுத்து
பாறு பதி தாளமொத்த பாரில.........ம்பு
ஆறு பெண்ணும் வைத்த அவன் சிவனோ
காமன் தனையெரித்துக்கன்னியரை
நாமஞ் சிவனெனவும் நாராயணனென......

பாணியில் வில்லேந்திப் பண்டு வி......
வாணிபஞ் செய்து வளகில் விக்கவ......
கானேந்தி நின்ற கன முனிவன் சாபமதா
மானேந்தி யன்று மழுவேந்தி நின்றவனோ
தாக்குடை யாளான சரசுபதி மூக்கரிந்து

வாக்கு முயலகன்றன் வன முதுகிற் கூத்தாடி
தீயிட்டு முப்புறத்தை சென்றெரித்துக் கூற்றுவனை
பேய்கிட்ட நின்றாடும் பித்தனோ வுங்கள் தெய்வம்?
சாம்பலணிந்தவனோ தார மிழந்தவனோ
வாம்பரியென்றே நரியை மாறு செய்து நின்றவனோ

பிள்ளை யறுத் துண்டவனோ பேராசை கொண்டவனோ

உள்ளபடி சொல்ல வுனக்கு லச்சை......
அசுவத்தமாவும்...... அகத்தியனு மன்று
வசையைச சவை நடுவே வா......
கந்த சுவாமி கலங்கி வள்ளிக்......

வந்தவள் காலில் வணங்கினதுங்......
மூதேவியான வந்த மூதறையி......
மாதாவுக காசை கொண்டு வழியிலிருந்த
விஷ்ணுச் செபத்தோரு வீணாட்டங் கேட்டிலையோ
துஷ்டன் பதனாறுபிறர் தோகையோரைக்
கற்பழித்து

அங்கவனுக் கந்த அரிவையர்களெல்லோரும்
பங்கமுற வன்றுபதி னாறாயிரம் பாலர்
பெத்தார்களென்றுகந்து பேசுகிறீரிங்கிவர்கள்
உத்தபரன் தானா யுகந்திருப்பதெப்படியேர?
அய்யா...... அடியேனுரைத்த தெல்லாம்

மெய் யான தன்றி வளம்பினதிற் பொய்யுமுண்டோ
இன்னமொரு பொல்லா விசைகேடு......
அன்னதுவை யிங்கே அடியேனுஞ் சொ......
சிவலிங்க பூசையென்று செப்புவனு......
அவலட்சணமான ஆவுடையார்

சொல்லிப் புகழ்ந்து தொழுந்து
வல்ல தவத்தோர் வகுத்துரைக்கச்
எப்படிச் சொல்வீ ரிலட்சை யன்றி
இப்படியே கோடி யிழுக்கும் வசையுமுள்ள
தப்பறைய தாள தமிழ் வேதந்தன்னை (எண்ணி)

மெய்ப் பொருளாமாதி தன்னை
விட்டொழிந்து வீணாக
போய்க்கடிமைப் பட்டு பெரு நரகிற்போய்விழுந்து

ஆக்கினைக் கீடா யகப்படுத்தப் பேசுகிறீர்
மோக்ஷப் பேரான முதலோன் தனை மறவேன்
சத்து மழுக்கில்லாச் சகல தயாபரனார்
குத்தமத்த மின்னார் குலராச கன்னிமகன்
எல்லார்க்குங் கர்த்த னெனமப் படைத்த (தேவ)பிரான்
பொல்லாதெனத தவிர்ந்த பொய் மதத்தை நம்பாமல்
இம்புவி வானாளும் யேசு பராபரனை
நம்பினேன் மன்னா நடுக்கமுற எத்தனை நீ
ஆக்கினை யிட்டாலும் அடித்துடலை கீறுகினும்
பாக்கியப் பேரான பரனை நிதமறவேன்
என்றதிரியானு மியம்பவே கேட்ட மன்னன்
கன்றி மன மழன்று பல சேவகரை
கூவியழைத்துக் கொடுங்கோபங் கொண்டெழுந்து
ஆவி போமட்டு மதிரியாமவனை
கட்டியடிய மென்று காவலவன் சொன்னவுடன்
விட்டு விடுவ துண்டோ வீணா சேவகர்கள்
பாச மெடுத்தார் பருமரத்திலே சேத்தார்
வீச வுரைத்தார் விடாமல் வளைந்து கொண்டார்
தாக்கினார் வாரெடுத்துச் சத்துருக்கள் மாறிநின்று
வீக்கினாரங்கு மிங்கு மெய்பிளந்து சொரிந்த
துண்டித்து வன்தசைகள் சொரியு நிணமாறோட
தெண்டித் தடிக்க லுற்றார் சிட்டர் மெய்யிலம்மானை.
என்பு புறந்தோன்றி எச்சதையும் போய்த்தெறிக்க
வன்பு நரம்புகளும் வாணாலுஞ் சோர்ந்தாயா
சாடு மடிகண்டு சலியார் மனந் தெளிவார்

நாடியிறையவனை நன்மை தாவென்று சொல்வார்
ஒக்க நின்றகன்னி உருகியழுதிறங்கி
பட்க மனுகிப் பரிவுரைத்தாள் காதலர்க்கு

என் கண்ணே பூமானே ஏகாந்தப் பாக்கியமே
வன் கண்ணர் செய்வதெல்லாம் வானாட்டில் வாழ்வெமக்கு
எத்தனைக்கு யிப்புவியி லேகனுக்காய் பாடுபட்டீர்
அத்தனைக்கு மாதியருள் பெறுவீர் தப்பாது
வாதையுத் தென்னரசே வருந்தியடி பட்டாலும்

நீதி பராபரனை நித்தியமுங் கண்டிருப்பீர்
ஆகையா லென்னுடைய அன்புமிகு பர்த்தாவே
சாகிலுமோ வாதி தனை மறக்க வெண்ணாதே
துக்கப் படாதச் சுருதியிழ வாதிருப்பீர்
திக்கெல்லாங் கர்த்தன் திருவிரக்க முண்டாகும்

என்று கன்னி சொல்லி இவரை மனந்தேத்தி
அன்றதிரி யானும் அடிபடுவதெண்ணாமல்
வானத்தை நோக்கி வளராதி கர்த்தனுடன்
தானிரந்து சொல்லுந் தண்மை கேளம்மானை.
ஆதிபராபரனே அம்பர வானாயகனே

நீதிப் பரஞ் சுடரே நித்திய கன்னிபுத்திரனே
முன்னா தாஞ் செய்த முதிய பிழைக்காக
இன்னிலத்தில் வந்து யீடேத்திக் கொண்டவரே
என் பாவத்துக் கீடாக யிந்தவடி போதாது
அன்புடனே யிங்கடியேன் அதிகவடி பட்டாலும்

நின் கருணை நம்பி நிலை நிற்பேனென்று சொல்லி
இன்பமுறுந் தவத்தோ னேத்ததியானுரைக்க
ஓது மொழி கேட்டு உடையவனுமன்பு வைத்து

(வா)தை அதிகம் வரவிடுத்தாரம்மானை.
பட்டவடி கண்டு பரிவுறா மன்னவனும்

விட்டான் சிறை வீட்டில் மீண்டு மின்னமம்மானை
வருந்தி மண்ணிலுடற்கினிய வுறுதி தேட
வாணாலை
வீணாளில் மயக்குவோரே ...........நெறி தரும்
வழியை நினைவில் தேடும் .........வா(ழ்க்கை)புவி
வாழ்வு போகுங்கால மிருந்த
பொன்னுமுடனமகளுமுற

உத்தாரு மேமக்குதவப் போறதில்லையிறக்கு
நேரம்
தருந்தவத்திற் திருந்து கன்னிமரியைப்
போற்றுந்தான்
வழியுறுதி யங்கே தருவிப்பாளே...........
என்னுந் தவத்தை நாடாத...... மானிடர்கள்
சகல பேர்க்கு மான கர்த்த னொருவனென்று மவனு

ககனனை அம்பரத்திற் தானுமில்லை யகிலமீதே
ஞான தந்தை தானுமில்லை யெனவே யோதும்
நாயகனானவனை
இந்த அவனி மீதே மேன்மை பெற வீன்றெடுத்த
மரியாள் பாதமேன்மேலு மெண்ணிலமனு
மிடிமைபோமே
விண்ணம் பரம்னாடி மெய்த்தவத்தை செய்திருக்கும்

மண்ணம் பரத்தில் மனுவோரே கேட்டருளீர்
பூவிலுள்ள வாழ்வை புறக்கணித்த புண்ணியவான்
நாவிலுள்ள நன்மை நடத்திய நற்றாலீ(யா)வை
கோலமிட்டுக் கொண்டிருந்த கொஞ்ச நாளல்லாமல்
தால முட்ட நீண்ட தனி வயது தான் பார்க்கில்

எண்ணிய வாண்டு மிருவத்தோன்றாயிருக்கும்
புண்ணிய வான் மெய்யழகு பூதலத்திற் சொல்லரிது
மெத்தவும் செய்யவுடல் மேன்மை சிறந்தவுடல்
கத்தனுக்காய் பாடுபட்டு கட்டியடி பட்டவுடல்
ஈண்டிய காவலிலே யெத்தனைக்கும் துக்கமுத்து
மாண்டவரைப் போலே மயங்கிக் கிடக்கை கண்டு
ஆதரவும் னோவு மதிக சலிப்புமுள்ள
மாதரழகு கன்னி வண்மை நத்தாலியர் தான்
வந்தே சிறை வீட்டில் மகிமையுள்ள தன் தலைவன்
சிந்த வடிபட்டுத் தியங்கிக் கிடக்கை கண்டு
ஆறோடக் கண்ணீ ரழுது கொண்டு தாங்கி மெள்ள
மாறோடச் சென்னி மடியில் வைத்துக் கொண்டிருந்து
கிள்ளை யென வாய் திறந்து கீதமொழிக் கன்னியரும்
உள்ள முருகி யுகந் தன் போடறஞ் சொலுவாள்
என்(ன)ன்பே கண்ணே எனதுயிரே பாக்கியமே
அன் பெனக்குத் தந்திருந்த அரசே என்னாண்டவரே
உள்ள தெளிவே யுலகு மென்னும் பூமானே
தெள்ளத் தெளிவுதந்த தேனே திரவியமே
ஆவிக் குடைய வந்த அறிவுடைய பத்தாவே
பாவிக்குகந்த பரகதியிற் பாக்கியமே
சோகந் தெளிந்து துயர்தீத்து நீரெழும்பி
ஆகந் தெளிந்து அடியாளைப் பாருமய்யா
மோட்சத்தில் வாழ்வோர் முடிவேந்தர் கூட்டமதில்
பாக்கியத்தைப் பெத்தீர் பயனுடைய பத்தாவே
பண்டெமக்காய் பாடுபட்ட பரனார் தமக்காக
மண்டலத்தில் நீரு மகா பாடு பட்டீரே

நேரஞ் செல்லாது நெடுவானிற் காட்சிதனை
பாரஞ் சிறக்கப் பலனடையப் போறீரே
அஞ்சுகள் போற்று மளவில்லாப் பாக்கியத்தை
வாஞ்சையுடன் போற்றி மகிழ்ந்திருக்கப் போறீரே

என்று தெளிவுரைத்தங் கின்பமுள்ள காதலியார்
ஒன்றிய காதலனாருத்தகையைக் கண்ணில் வைத்து
துட்டன் கொடிய துரோகி யென்னு மாராயன்
கட்டியடிப்பித்த கனமான காய மெல்லாம்
மெள்ளத் துடைத்து விழியருவி நீரோட

உள்ளச் சலிப்புடனே ஒற்று தலுமங்கிருக்க
மாதவரைக் கண்டிறங்கி மாதர் சில மங்கையர்கள்
பாதம் பணிந்து பணி புரிய வேணுமென்று
மெய்க்காவல் வீட்டில் விதமுடனே வந்திருக்க
தியங்காம லேவல் செய்து தேவனுக்காயங்கிருந்தார்

மின்னார் சிறை வீட்டில் மிகுந்த பணிசெய்வதுவை
ஒன்னாரறிந்தோத வூருடைய ராயனவன்
காவல் புரை தனிலே கன்னியர்கள் செல்லாமல்
ஏவலறுக் கோதி யிடறு செய்தாரம்மானை.
வன் துடங்கு தன்னில் வனிதையர்கள் வராமல்

பின் துடந்த மன்னன் பெருங்காவல் செய்ததினால்
கத்தர் அருள் நிறைந்த கன்னியெனுங் கற்புடையாள்
நத்தாலியாளும் நவ கோலங் கொண்டதுகேள்
கார் மேக மொத்த கருங்குழலைக் கத்தரித்து
சீர் மேவுந்தாடி சிறு ரோமந்தான் பேணி

வாய்த்த சிரந்தனிலே வணங்கா முடிசூடி
ஏத்த குழையி லிசைந்த பணிதான் பூட்டி
வார் பூண்ட கொங்கை மறைக்குக் கவச மிட்டு

சீர் பூண்டகந்தரத்திற் சிறந்த மணி கழத்தி
செங்கை வளை கழற்றி சீர் விரலிலாழி யிட்டு
துங்க விடையில் துலங்கு மரை(க் கச்சை கட்டி)
பாடகமுத் துய்ய பணிச்சிலம்புந்தான் கழற்றி
ஆடவர் பொற்றாளில் அமைந்த செருப்பணிந்து
தாங்கு மிடையிற் (தக்க தொரு) வாள்பூட்டி
ஓங்குங் கரத்தி லுயர்ந்திலங்குங் கோலேந்தி
நீங்காத துக்கம் நெடுந்துயரை யுள்ளடக்கி
ஆங்கார முள்ள தொரு ஆடவர் போலாயிழையும்
கண்டோரறியாமல் காவல் புரை புகுந்து
தெண்டனிட்டுப் போத்திச் சிறையிருக்கு மாதவரை
அண்டியே காதலனை அடி தொழுதங்கென் சொலுவாள்
திண்டிறல் சேர் மன்னர் திருமரபில் வந்துதித்த
நல்லுறவே யென் தலைவர் (நண்பே)யென் நாயகமே
சொல்லுவமை யில்லாத துரைகள் சிகாமணியே
அன்பே யென துயிரே ஆரவரில் மிக்கவரே
இன்பான நேசத் திணை பிரியாயென் (துணையே)
உன துயிரைக் கண்டு உனக்கேவல் செய்யாமல்
வன்பு பண்ணி வேந்தன் வர வொண்ணா தென்றதினால்
மெய்க் கோலங் போட்டு வெகு மானமாய்ச் சிறந்த
பொய்க் கோலங் கொண்டேன் புவி மீதடியாளும்
துஞ்சு மட்டுமுந்தன் துணைப்பதத்தைக் காத்திருந்து
மிஞ்சிய கற்புடனே மேலுமிருப்பதற்கு
என்னாவிதானு மிருநிலத்திலே நெடுநாள்
உன்னா திருப்பதற்கு உன்னுதவியாக வென்னை

ஆதி யிடஞ் சேத்து அருகழைத்துக் கொள்ளுமென்று
நீதியுடன் போற்றி நெடுந் தாளில் விழுந்து
சொல்லத் துரை கேட்டுத் துயர் மிகுந்தங் கென் சொலுவான்
அல்லைப் பெருங் கூந்தல் அன்பே யென்னாதரவே
ஆவிக்கு மெய்த் துணையே ஆண்டவருக்கேத்தவனே
காவிற் குயில் மொழியே கன்னியே யுன்னாலே
ஈடேறும் பேறும் யான் பெற்ற பாக்கியமும்
வீடேறத் தானே வெகு பாக்கியம் (தந்த)
எல்லா முன் தன்ம(ம்) இறைவனிரக்கமொடு
நல்லரங்கு மாதி நடத்துவாரென்று சொன்னார்
காதலர் சொல்லுங் கனிமொழியார் தன்னுரையும்
ஓதலற்றுத் தூயோ ருறு துயருஞ் சஞ்சலமும்
தேவனுக்கு யேத்த திரு நாமப் பேறாகும்
(காப்பி)லிருப் போரைக் கண்டிரங்கி மின்(னுடனே)
(வாய்ப்) புடைய மாதர்சில ராண் கோல மாயு டுத்து
(பாச)முடன் மறுப்பி(ன்) (பா)லிருக்குந் தவத்தருக்கு
(ஆசையு)டனே அதிகப் பணி விடைகள்
ஏவல் புரிந்திங்கே யிருக்கின்றாரென்ற செய்தி
கொற்றவனுங் கேட்டு கொடுங்கோபங் கொண்டெழுந்து
கற்றவரைக் கொல்லக் கருதினா ரம்மானை.
கொல்(வார்) தமை யழைத்து கூறரிய கோபமொடு
வவ்ல இரும் பெடுத்து வலிவாகவே (பிடி)த்து
கவ்வை (நகர் நடுங்க) கனத்ததுடைய(ல்லாமல்)
செவ்வைத் தவத்தான் திருக்காலை முறிப்பதற்கு

செய்வித்தானின்னஞ் சிறந்தகுலைச் சேவுகரை
வையகத்தி லேவி விட்டான் மாதவர் மேலம்மானை.
கைவாளும் வேலுங் கனத்த கருவிகளும்

(போதவே) கொண்டு புரைனாடி வாற செய்தி
(நாதன்) தனக் கேத்த (நத்)தாலியாளறிந்து
(எய்க்காத) சேவுகர்முன் னெதிரேகி என சொலுவாள்
(இன்புடனே) வாழு மிராயனுட சேவுகரே
அன்புவைத்தே யிங்கடியா ளறையு மொழி கேட்டருளீர்

போர் வேந்தரானவர்க்கும் பொல்லாத பேரானோம்
பாரேந்து வண்மை பவுசெல்லாம் விட்டிழந்தோம்
என்றாலுமே(லுலகே) (இன்ப மென) நம்பி விட்டோம்
ஒன்றாலு மஞ்சோ முடையவனுக்காக மண்ணில்
பாடு படப் போறோம் பழு தேது வந்தாலும்

தேடுவது வானாடு சிந்தையில்லையிவ்வுலகில்
உங்களை மன்றாடி ஒரு விசயஞ் சொல்லுகிறேன்
எங்கள் மொழி கேட்டா லிறைவரும்மைக் காத்திடுவார்
காவலிலே வாடுங் கன தவத்தோர் தன்னுடனே
.........னிய வளத்தா.................பத்தாவும்

.........றிப்பாயுறுஞ் சிறையிலேயிருந்து
.........பரன்றனக்காய்ச் சாகமனந்துணிந்தார்
.........னபரோ நீங்க ளரசனுரைப்படியே
.........தலைவன் தன்னை யெல்லார்க்கு முன்னாக
.........யடையல் கொண்டு கடுக முறியு மென்று

(கோ)ல மடமானார் குலைகாரருக்குரைத்து
(நீத) முத்த கன்னி நெடுங்காவலுட் புகுந்து
காதலனைக் கண்டு கனங் குழையுமென் சொலுவாள்
என்னுயிரே அன்பே யெனக்குடைய பாக்கியமே
பொன்னுலகங் கண்டிருக்கப் போங்காலமாச்சுதுகாண்
ஆனந்தங் கொண்டாடு மாதிதனைப் போற்றி செய்ய
வானந்தனிற் போக வந்ததுவே நற்காலம்
நீர் பட்டபாடும் நிலைக்கு நின்ற நீதிகளும்
பேறிட்டவேகன் பிரதானமாகு தற்கு
மன்னன் வரவிடுத்தான் மாபெரிய சேவகரை
முன்னமுமது முழந்தாள் முறிப்பதற்கு
உத்தம மனமா யுகந்தோதிக் கொள்ளுமென்று
கத்தவளுஞ் சொல்லக் கருணையுள்ள காதலனார்
ஆயித்தப் பட்டார் அகத்தே தெளிவானார்
தாவிப் பெரிதான தற்பரனைக் கை தொழுதார்
உள்ளத்தால் வாக்கா லுகப்பான பூதியத்தால்
மெள்ளத் தானெண்ணியன்று விண்ணவனைப் போற்றி செய்து
அன்று (தன்னன) யேகனிடம் அன்புடனேகையளித்து
ஏத்த மனந்தெளிந்தங் கிருக்கின்ற வேளையிலே
வல் வேந்தனேவி விட்ட வலிய குலை சேவகர்கள்
அல்லேந்துய் காவ லறை வீட்டிலுட் புகுந்து
தாங்கரிய நீதி தவ அதிரியானுதன்னை
தீங்காய்ப் பிடித்துச் சிறந்த யிருகால்களையும்
பட்டடையில் வைத்துப் பதறாமல் பிடித்து

முட்டிய லாற்றட்டி முறித்தனர் காணம்மானை.

ஓங்கிய கால் முறிக்க ஒக்க நின்ற கன்னியுள்ளம்
(தாங்கு)மோ தாங்காதோ தரை புனலோட
காந்தனரு கேகிக் கணைக்கால் முறித்ததுண்டம்
ஏந்தி யிருகையா லெடுத்து முத்தி செய்து கொண்டு
மிக்க மன மிடுக்கு மெய்த் தெளிவு மாயிருந்து
துக்கத்தை யுள்ளடக்கிச் சொல்லுகிறாள் காதலர்க்கு
ஆதிக்குகந் த(வரே) அன்பே யென் புண்ணியமே
நீதிப் பராபரனை நெஞ்சிருத்திக் கொண்டவரே
இன்னமிது போதாது யெங்கோனுக்காக முன்னாள்
மின்னுந் தவத்தர் பட்ட (மேம்)பாட்டுக் கொத்திருக்க
செங்கரத்தி லொன்றைத் திடன் முறிக்க நீர் கொடுத்தால்
மங்கலத்தின் மேலான வான் புகழ்ச்சி யுண்டுமக்கு
என்று கன்னி சொல்லி யிறைஞ்சிப் பணியலுமே
அன்றதிரியானு மரிவையுடன் சொல்லுவராம்
வையகத்தும் வானகத்தும் மங்கலப்பேர் கொண்டிருக்கும்
துய்ய கற்பே அன்பே துணையே சுரி குழலே
ஆவிக் கொரு தெளிவே ஆத்துமத்தினாதரவே
நாவிற் பெரிதான நற்றுணையே நல்வாக்கே
ஆங்கார முற்றவுடல் (ஆசை) யெல்லாந் தொடுமுடல்
(பா)ங்காய்ப் பரனை பணியாத வஞ்சவுடல்
(புண்)ணரா நீசவுடல் (பு)ன்மை புரிந்தவுடல்
(எண்ணரா மெய்ப்) பொருளை எண்ணி வருந்தாத வுடல்

(எத்தனை)க்குப் பாடு யிடர் வருத்த வேண்டுகினும்
(அத்த)னைக்கு முன்பே அடியேன் துணிந்து கொண்டேன்
(துண்)டித்து வெட்டுகினுந் துக்கப்படுத்து கினும்
கண்டத்தை நீக்குகினுங் காயப்படுத்துகினும்
பிச்செடுத்துப் போடுகினு பேணியிந்தப் பொய்யுடலை
அச்சப்படுவதில்லை அன்பேயென்னாயிழையே
நீர் மேலெழுத்து நினைவறியான் கண்டகனா
பார் மீதிலுள்ள புவுசாகும் பைந்தொடியே
பொய் வாழ்வு போச்சுப் புவியைப் புறக்கணித்தேன்
மெய்வாழ்வை வானில் விரும்பினேன் மெல்லியரே
உன்னுதவியாலே உடையவனைக் காண்பதற்கு
(நண்ணு)தவியாச்சு நமக்கிறுதியாகுதற்கு
(வேண்)டியதைச் செய்ய வினையாளர் தம்முடனே
(தூண்)டியுரையு மென்று தூயவனுஞ் சொல்லலுத்தார்
(இன்னலு)ங் கன்னி யிடர் வருத்தும் பேருடனே
(சொன்)னதும் தன்னுடைய சுத்தமுள்ள காதலனார்
செங்கை முறியுமென்னத் தீயார் முறித்திடவே
அங்கை தனை யெடுத்து அவளொளித்துக் கொண்டனளே
அன்றதிரியானுடைய ஆவியுடலை விட்டு
சென்று பரனருகில் சேர மனமாகி
மற்றுமுள்ள சுத்தருடன் வானத்திசைனோக்கி
உற்ற வழி போக ஒருப்பட்டாரம்மானை.
வெற்றி கொண்டு மண்ணில் வினை முடித்து வானாட்டில்

உத்து வரும் (போதில்) ஒருவன் மனமகிழ்ந்து
ஆஞ்சுகளை விட்டா ரவரையழைத்துவர
(பொன்) என வானினின்று கனகோடி வானவர்கள்
மண்ணுலகில் வந்து மனுவேத சாட்சிகட்கு
எண்ணரிய பொன்னா லிலங்க முடிசூட்டி
கீதங்கள் பாடி கிருபையுள்ள ஆதிமுன்னே
நீதி களுள் ளோரை நேசமாய்க் கொண்டு சென்று
வைத்துப் பணிய மகிழ்ந்தே யிறைவனும்
மொய்த்துப் பலசிறப்பு மோட்சத்தில் வைக்கலுற்றார்
ஆன்றறிந்த சுத்தர்களும் அதிரியா மானவரும்
(சேண்டலத்தில் அப்பொழுதே) சேந்தனந்த பாக்கியத்தை
கண்ணாறக் கண்டு களிகூர்ந்தக மகிழ்ந்து
எண்ணாத சோபனங் கொண்டேகனருகிருந்தார்
மறக்கரிய வானபரன் வகுத்த பணியாளதனை மறக்கலாமோ
அறக்கொடிய யெரி நகரில் லலகையினுக் கடிமையென்று
அகப்படாமல் சிறப்புடைய தெய்வீக வானெமக்காய் முன்திறக்க
சித்தமான உறுதநுடைய கன்னிமரி யுகந்த பதந்தொழு
மடியார்க்குதவுவானே உதவு பரனருளை மறத்தோயாத
தீநகரிலுழல் வதெல்லால் இதமறியாவலகையினுக்
கடிமையுமாயிருந்த (எமக்)கிரங்கியாதி
மதலையென வந்து சிலுவை மீதிருந்து மீள்வேன்

மகிழ்ந்தே யீன்ற விதமுறு மெய்க்கன்னி மரி மின்னிரண்டு
பதந்தொழுதால் மிடிகை போமே தாரணியோர் (போற்றும்)
(தவ)அதிரியானுடைய சீருடைய ஆவி
திருவானிற் போனபின்பு பாடுற்றிறந்த
பழுதில்லா மெய்யுடலை தேடி யடக்கிய துஞ்
செய்யதிரியானுடைய மானார் நத்தாலியவின்
வண்மை நடக்கைகளும் தேனாரிறந்ததுவுஞ்
செய்ய நல்ல வாற்றுமத்தை ஆதியருளாலே
வானந்தஞ் சேர்த்ததுவும் நீதியுடலை
நிலத்தோரடக்கியதும் கொண்டாட்டமாகக்
குவலையத்தோர் கேட்பதற்கு
உண்டான தெல்லா முரைக்கிறேனம்மானை.
மாபாவி யென்னை மசுமியாமெனும் ராயன்
ஆபாவ மென்னா தனியாயஞ் செய்து கொன்ற
அன்பர்கள் தன்னுடலும் மதிரியான் தன்னுடலும்
(துன்னு மிடு காட்)டில் சுடவேணு மென்று சொல்லி
(வல்ல பார்வே)ந்தன் வகுத்தபடி ஊழியர்போய்
(நல்ல பரி) சுத்தர் நவையில்லா மெய்யுடலை
அங்கே யெடுத்து அனேகம் விறகடுக்கி
தங்களிலே தானே (தகனமிட்)டாரம்மானை.
அங்கி யிட்டுமூடி அனேகம்பேர் சூழ்ந்து கொண்டு
தங்கு (பரி)சுத்தவுடல் தன்னைச் சுடுகையிலே
நேசமுள்ள சுத்தருடன் நீணிலத்தில் வேகாமல்
வீசு பராபரனார் விண்ணவர்க்கு நாயகனார்
எம்பொருட்குங் கர்த்தாவா மேசுக் கிறித்திறைவன்

இப்புவியிற் காத்து மிடியு முழக்கமுமாய்
கார் கொண்டு மின்னிக் கடல்மேல் முகில் பறந்து
சூற் கொண்டு மேகமெங்குஞ் சோனை சொரிந் தோங்க
மேல் நாலுதிக்கும் வெளுப் பில்லா(தேயிருண்டு)
கால்னாலு மொன்றாய் கதித்தே புடைசூழ
வானேறு தூவ மழை(ச் சாரலும்) மோத
நானேது சொல்வே நடுவன் திருவுளத்தை
வஞ்ச னெனும் ராயன் மாதவரை யெண்ணாமல்
துஞ்சி வித்த பின்பு சுடவந்த தூத ரெல்லாம்
(வாட்டு மழைக்கஞ்சி) வனத்தே சிலர் புகுந்தார்
(மீட்டு மந்த) மன்னனிடம் மேவாதே போய் மறைந்தார்
உத்த சுத்தமான வுடலொன்றும் வேகா(மல்)
மற்று நிகரில்லான் மழையை வரவிட்டதினால்
அக்கினியும் நூந்து அருகினின்ற (சேவகரும்)
திக்கறவே போய் மறைந்த சேதிதனை யெல்லோரும்
கண்ணாறக் கண்டு களிகூர்ந்து கொண்டாடி
விண்ணோனே ஆதி விமலனே போத்தி யென்று
நீதிக் கிறித்தவர்கள் நேசம் வெகுவாக
(ஆதிதனை)ப் போத்தி அருந்தவத்தோர் தம்முடலை
........பண்ணிச் சிங்காரக்கப்பலிலே
........பத்தியந்த நாலை தனைக்கடந்து
........யுள்ள கோசித்தா ந்தூனோபலென்று
........கு யெடுத்தேக வேணுமென்று
........திக் கன பொறியாமல்
........மானகர்க்கு ஓடினாரம்மானை.

..................ஒருவனறிக்கையினால்
.................. நம்பிய சுத்தா
நவை.........மாறொன்று மன்றி
..................கூறும்படி சேர்ந்து
..................வேண்டிய சங்கை

.................. ஆண்ட நகரி லடக்கி.........
மிடிகை யன்றி.........மிகுப.........
மிகுந்த பாவக் கொட.........
நத்தினாற் சிலுவை..................
.........வடிவுடைய கன்னிமரி மாதாவின்

.........தமற் கொணாதே னாதி பரனருளைத் தள்ளி
.........செய்த தவறினாலே போனாரிச்சனங்க ளெல்லாம்
.........மையாமெனவே பூவானனாள் வாளாதிமனு
.........ந்து மரித்தெமைமீள மகிழ்ந்தே யீன்ற மானா
.........மாதாவின் மலர்ப்பதத்தை மறக்கொனாதே

.........மிக்க அதிரியாமென்ற சுத்தன்
தலைவியெனும் நங்கை நத்தாலியர் தான்
கன்னி கணவனுட.........
உன்னியே பேணி.........
தான் படுத்துக்.........

தேனினிய சொல்.........
அன்பான பத்தா.........
என் பாவத்தாலே.........
என்னை நினைத்து.........
கன்னிமரி பாலனுட.........

.................விங்கெனையுமும்முடனே
.................வழைத்துக் கொள்ளுமென்று
என்று தினம் போத்தி யிவளரிய கற்புடனே
நன்றியுற மாளிகையில் நாள் தோறும் வீத்திருந்தாள்.
நந்தாலியாளுடைய நன்மரபும் வங்கிசமும்

ஒத்தாரு மொவ்வா வுயர்ந்தகுல வன்னிபமும்
வேண்டுந் தனமும் வெகுமானமும் மழகும்
பூண்ட(புவி)யில் புகழ் சிறந்த பே(ராசை)
மிக்க துரையொருவன் (மேதினியிற் கேள்வியுற்று)
தக்க மணக்கோலந் (தான் புரிய வேண்டு மென்று)

ஆசை மிகுந்து அறவே.........
நேச மிகுந்து நினை.........
எண்ணிய காதலினா..............
அண்ணலெனு மறிய..............
சென்று துரை பணிந்து............

வென்றி யரசர் விகட.........
பூலே...........வந்தே புவிக்கெல்லா.........
தாலமிசையாது..............
அன்ன தருவே அரசர் சிகாமணியே
சொன்ன முகிலே சுகமதன் கெம்பீரர்

மன்னவர்கள் மன்னா மசிமியாமெனு மரசே
என்னரசே வேந்தே எனதுடைய ஆண்டவனே
விண்ணப்ப மய்யா விரி நிலத்திற் பாடுபட்டு
எண்ணப் படாம லிங்கே யிறந்து விட்ட
பேரதிரியானும் (பெண்ணாகக் கொண்டிருந்த)

வாரடந்த கொங்கை (வஞ்சி நத்தாலியாவாம்)
மங்கையழகு கண்டு............

சங்கையுடைய............
கைப்பிடித்துக் கெ............
ஒப்புடைய வேந்தே............

போதமுற் மன்பாற்............
மாதர் சிலரை............
......நத்தாலியாலால் நாட்டுத்தவக்கன்னியரை
......த்தாலும் நீர்போ னாப்பியகப்படுத்தி
(எ)ன்னுடைய வாசலுக்கு னிருக்குந்துரைகளிலும்

(மு)ன்னிய மூப்பு முதன்மைகளுமுண்டான
(அன்னவ)ரிலன்ப னதிகச் சிறப்புடையோன்
(முறையே) பல போரில் முன்னோடி
வென்ற துரை
(உறவுக்) குயிரானோனோ வியநத்தாலிய வால்
(துன்பமுறல்) முறையோ தூதர்கள் நீங்கள்
சென்று

எப்படியும் பேசி யெனது துரையுட
கைப்பிடிக்கப்பண்ணி கடுகவர வேணுமென
மன்னனுரைத்தபடி மாதர் சிலரே(கி)
கன்னி நத்தாலியை கண்டே (மகிழ்வாக)
நல் வார்த்தை சொல்லி நளின மிகவுடைய

சொல் வாய்த்த கன்னியுடன் சொல்லலுற்
(றாரம்மானை).
மங்கையரில் மிக்க மதுர மொழியே கிளி(யே)
திங்கள் நுதலனைய தேனே திரவியமே
(ஓசை)க்குயிலே உகந்த நல்ல பெண்ணரசே
(ஆசைக்) கரும்பே அமுதகுண மானே

(வானாரும்) மின்னே மதுரமொழி வாசகமே
(மானார்)கிளியே (மயங்கி)யிருப்பானேன்

(வா)ல வயதலவோ வடிவுடைய மங்கையரே
கோல முகத்திற் குறாவுதலை வைப்பானேன்
இந்த(வயதி) லிங்கினிமையான தெல்லாம்
சிந்தை கனித்து தினமிருந்து வாழ்வதற்கு
துண்டி கையிலேறிச் சகலவரையுட
கண்டவர்கள் போற்ற கனமாக வாழ(ாமல்)
அழகு முகங் கோடி அதிக சலிப்புட(னே)
வளவிற்றனி யிருந்து வாடுவதிங் கென்ன(நீ)
கண்ணே யென்னாசைக் கருப்பே நற்கா(ரிகையே)
பெண்ணே ஒரு வார்த்தை பேசுவதைக் கே(ளாயோ?)
உன்னை விரும்பி உரோமானு வேந்தா(னோர்)
என்னை வரவிடுத்தா ரிப்போ மனம் (பொருந்தி)
என் வார்த்தை நம்பி இறைவன் துறையுடனே
அன்போடிணங்கி அரிய மணமுடித்தால்
ஏது குறை மின்னே இறைவன் பெருமையினால்
ஓதரிய செல்வத் துலக புவுசாண்டிருப்பாய்
என்றுரைத்தார் தூத (இயம்)ப வந்த யேந்மையார்
அன்றதனைக் கேட்டு யறிவுறு நத்தாலியர் தான்
ஆதியை நெஞ்சிருத்தி அறையு மொழி கேட்டருளீர்
ஓதிய மாதருடன் உண்மை பெறச் சொல்லுவராம்
தாதியாய் வந்திருந்து தக்கதே (நீர் மொழிந்தீர்)
மேதினியி லென்னை வெகு மானம்(மிகத்துரை)
கைப்பிடிப்பாரானா(ல்) கரும மி(கு வாழ்வும்)
மெய்ப்புடைய பாக்கியமும் (மேலுமெனக் குண்டாகும்)
நற்றுரையார் சொன்ன மொழி (நன்றெனவே கொண்டு விட்டேன்)

அற்ற நாள் மூன்றிங் கவதி தர (வேணுமென்று)
புண்ணியத்தான் கேட்டபடி போர் வே (ந்தன் சம்மதித்து)
எண்ணியே தூதுவந்த யேந்திழையுந் தா (னுமுடன்)
போனாள் துரைக்கும் புரவலர்க்குஞ் சொல்லவென்று
மானார்நத் தாலியவும் வந்தவினை வெல்வதற்கு
மூன்று நாள் தானவதி மோசமறக் கேட்டதல்லால்
என்ற துரையோ டிணங்கு தற்குக் கேட்டதல்ல
ஆனால் நத்தாலியவை யங்கு மணம் பேசிவந்த
மானார்கள் போனபின்பு மாதவத்தின் கற்புடையாள்
துக்கமிக வடக்கிச் சூட்சிவந்த காரியத்தை
தக்க மனதிலெண்ணிச் சாகிலுமோ கற்பிழவேன்
ஆகிலுமென் கர்த்தா வருள் படியாக.........
மாகமு மண்ணு மனுவும் படைத் (தவனே)
கற்பு வழுவாமல் காத்தருள வேணு (மென)
அற்புதனைப் போற்றி யழுதழுது (மன்றாடி)
ஒன்றா யொரு மூன்றா யுன்னு (ம் முதற் பொருளாய்)
நின்றாய் பரஞ்சோதி நின் (கிருபையல்லாமல்)
என்னா லொரு துணையு மில்லையி(ந்தப் பூதலத்தில்
அன்றே மனுவா யரிய மரியான (வள் பால்)
நீயிருந்து கொண்டு நிறைந்த சேவெல் வீட்டில்
போயிருந்தீரந்தப் புத்திரனார் சென்மவினை
போக்கினது மன்றி பொருப்பிற் பிறந்தவன்று
தேக்கு புகழ் வானோரை தேனுலகிலே யழைத்து

ஏழையிடையருக்கு மிப் பிறவி யோதுவித்து
வேளையிது வென்ன விடைகொடுத்தமேலோனே
வாணிபஞ் செய்தவரை மாதவத் தேவாலயத்தே
பேணிய கஞ்சலிக்கப் பேச்சுரைத்து ஓட்டிவிட்டீர்
ஆண்டாறிரண்டி லருந்தவரை (விட்டுடனே)

மீண் டாய் மரியவுடன் வே (ந்தே நீ இப்புவியில்)
இப்படியே கோடி நவ(ம்) மெங்களுக்காய்(ச் செய்தவரே)
மெய்புடைய கற்பிழந்து மேதினியில் (வாழாமல்)
காத்தருள வேணுங் கருணையுள்ள கர்த்தா(வே)
பாத்திபர் தன் வாசலுக்கு பா(வியான் போய்ப்புகுந்து)

காயும் நரகில் கன பேயின் சூழ்ச்சியினால்
தீய துரை நினைத்த தீங்கணுக வொட்டாமல்
காப்பதுவு மன்றிக் கடி புரிய வேணுமென்று
கூப்பியவன் விடுத்த கொள்கையினை நாடாமல்
உன்னை வணங்கி உறுதியுள்ள கற்புடனே

என்னுடைய காதலனு மேத்தரிய சுந்தர்களும்
வாழுகின்ற மோட்ச்சத்தில் மாது நான் கண்டிருக்க
ஆழி யுலகில் அடியாள்க்குதவு மென்று
நீதி யுடனழுது நெஞ்சில் சலிப்புடனே
பேதியா நன்மைப் பெரியோனே காக்க வென்று

தானிருக்கச் செய்தே சலிப்பினாற் (றூங்கையிலே)
வானிருக்க வேணுமென்று மானிலத்திற்(பாடுபட்ட)
சுத்தர் தனிலொருவன் தோன்றியவளுடை(ய)
நித்திரையிற் தானே நெறியுரைத்த(ரம்மானை)
ஓது நெறிகண்டு உகந்தவளுஞ் சுத்தனு(டன்)

ஆதி தனக்கா யருந்து யாப் பட்டி (றந்து)
சோதியுறு வானிற் சுகமிருக்கு (மென்றுணர்ந்து
நீதியுடனும்முடனே நேசமிக (வுற்றிருந்த)
அன்பான பத்தா அதிரியானான அன்பர்
இன்பாக வெங்கே யிருக்கிறார் சொல்லுமென்றாள்

மங்கை கனவில் மகிழ்ந்துரைத்த வார்த்தைகண்டு
அங்கு வந்த சுத்தர் அறிவிப்பாரம் மானை.
நன்மைப்படி யிருக்கும் நத்தாலியானான
தன்ம முடையவளே தாரணியிலுன்னுடைய
அன்பார்ந்த தலைவர் அதிரியானானவர் தான்

பொன் பரவு மோட்ச்சத்தில் போயெமக்கு முன்புகுந்தார்
எங்களுட (சுத்தர்) (இவருடைய) தன்னுடலும்
துங்கப்பதியெனவே தோன்றுங் கோன்தாந்தீ னென்னும்
மானகரி லோரிடத்தில் மகிமை படவே யடக்கித்
தானே யிருக்குது காண் சந்தோசந் தன்னுடனே

நீர் தாமு மிவ்விடத்தில் நில்லா தெழுந்திருந்து
பேர் மேவு மவ்வூர்க்கு பிரிய முடனேரு மென்று
சுத்தன் மறைத்தான் சுருதிக்குகந்த கன்னி
நித்திரை (யில்) நீங்கி நினைத்த க(னவின்)படியே
தன் )தலைவன். செங்கரத்தை (தளிர்கரத்தில்) கொண்டு மெள்ள

இன்பவளவி லெவர்க்கு மினிமை சொல்லி
உள்ள உடைமை யெல்லா முகந்து பிச்சைதான் கொடுத்து
மெள்ள ஒருவர் விசேச மறியாமல்
அங்கேயிருந்த அனேகங் கிறித்தவருடனே
மங்கையர் நத்தாலியாவு (மகிழ்ந்த தவத்தோரும்

கப்பலி லேறிக் கணவனுடல் காணவென்று
ஒப்பிலாக் கோன்தா ந்தி னோப்பிலுவுக் கோடுகையில்
மங்கையரைக் கைப்பிடிக்க வாஞ்சையுற்று நின்றதுரை
தங்கு நாள் மூன்றுதள்ளி சாத்தரிய வாசையினால்
கூட்டி மணமுடிக்க கொள்கையுடன் தேடுகையில்
நாட்டமுறுங் கற்புடைய நத்தாலியா (என்னும்)
மானாருடனே வளருங் கிறித்தவர்கள்
தானொளித்துக் கப்பல் தனிலேறிப் போனார்கள்
என்றுரைக்கக் கேட்டு யிருந்ததுரை தானேங்கி
நன்று தானெப்படியும் நத்தாலியாளை யிங்கே
தேடிப் (பிடிக்கா)து திரும்பே னெனத் துணிந்து
ஓடத்திலேறி உத்தோர்கள் தம்முடனே
(பின்தொடர்ந்து) வோடிப் பிடிக்க வென்று போகையிலே
இன்ப முள்ள கர்த்த ரியேசு நாதரறிந்து
ஈனனி(ழை)த்த யிடரகத்திக் காக்கவென்று
வானமு மங்கி மழையும் வெகுகாத்தும்
பேர்ந்து அலைமோதிப் பிரசண்ட வாயுவினால்
சேர்ந்து துரைபோன கப்பல் திரும்பியே வந்ததுவாம்
வந்த கப்பல் தன்னில் மனுசர் சிலரிறந்து
சிந்தை கலங்கிச் சிலர் திரும்பி வந்தனரே
நாதனுக் கேத்த கன்னி நத்தாலியாளு(ம்)
நீதிக் கிறித்தவரும் நேர்ந் தோடுங் க(ால்)
பொல்லாத பாவிப் புகலரிய நெட்டூர(ன்)
எல்லார்க்கும் வஞ்சகஞ்செய் திரங் (காணும்அம்மானை)

பாதியிரவில் பசாசு மொரு மாலுமியாய்
சாதி மிதவை கொண்டு தானுமொரு வோட்டியென்ன
ஒப்பில்லா நீதி யொருவனருளாலே
கற்புடையாளாக கருதிய நத்தாலியவும்
தன்மக் கிறித்தவருந் தான் போற கப்பல் கண்டு
கன்ம (முடன்) சொல்லுகின்ற கட்டுரையைக் கேட்டருளீர்.

நீங்கா விருட்டில் நெடு நீரு வரியின் மேல்
தாங்காத நீரளந்து தங்கு கடலோடிகளே
எவ்வூர்க்குப் போறீ ரிருக்கு மூரெவ்வூரோ
அவ்வூருரையு மென்று செப்பினாரம்மானை
அண்ட சரமாகி அங்குரு (வாய்வ)ந்து சொன்ன

மிண்டான பேய்க்கு விளம்பியது சொல்லுவான்
துய்ய திக்கு மேதியவாந் துலங்கு பதியா (கும்)
செய்ய கோன் தாத்தீனு வெனுஞ் சிறந்த பதி (யாகும்)
என்று தவத்துடையா ளியம்பியுரைத்திட
அன்.........முடிப்போ (அ)ங்கவர்க்கு நல்ல.........

ஏழைகாள் கப்ப லிரவறுத்து ஓடுதற்கு
கோழைகாள்......... குவலயத்திலானாலும்
.................. கோன் தாந்தி னோப்ப லென்ற
.................. வூர்க்கு மதிப்புடனே போறீராய்
பாய் மாறிக் கொண்டு பரவைதனை யூடறுத்து

தூய் தான கக்கான் சுழலாமலே திருப்பி
ஏத்திய கப்ப லிடது புறத்தான் மாறி
காத்துடனே ஓடுமென்று கட்டுரைத்தாரம்மானை

பேய் சொன்ன வார்த்தைகளை பேதலிமை எண்ணாமல்
ஆய தவத்தூயோ ராமென்று பாய்மாறி
(தாம் போக எ)ண்ணுகையில் தவச்சுத்தர் தானினைந்து
போம் ஆறு தீதெனவே புண்ணிய வானில் நின்று
மிக்கதிரியானு(டலை) (மேவி நீர் காணாமல்)
தக்க (பரவையிலே) தா(னுமக்கு முன் தோன்றி)
ஆகாத மாலுமியா யங்கு நரகிருந்(து)
வேகாமல் வேகும் விழலனுயிர் கேடன்
பாய் மாறி யோடப் பழுதுவரப் (பார்த்தீர்கள்)
மாயாமலோடி மரக்கலஞ் சிந்தா(தபடி)
கோத்த மானகராங் கோன்தாந்தி னோப்பலெனும்
நீதப்பதிக்கு நினைத்தபடி போவதற்கு
முன்னோடும் வண்ண முழுதும் வலந்திரும்பி
பின்னோடும் நீங்கள் பெரியோனருளாலே
நான் போறேன் முன்னே நமது பின்னே வாருமென்று
தான் கடலை யூடறுத்து தன்மவான் போகலுத்தார்
உப்பு நீர் மீதே யுயர் தவத்தோன் தானடக்க
(செப்பரிய கப்)பல் திகையாம லோடியதே
நத்தாலி (யாவான) (நற்றவ) முடைய கன்னி
கத்தா வருளாலே கணவனைக் கண்டே மகிழ்ந்து
வானவனை நோக்கி மனமகிழ்ந் தங்கென் சொலுவா(ள்)
ஆன பராபரனே அம்பரவானாயகனே
கன்னி மரி மகனே காசினியோர் செய்பிழை (க்காய்)

இன்னிலே மீதெம்மை யிரட்சித்துக் (காத்தவனே)
எப்பொருட்குங் கர்த்நாவே [இயேசு கிறிந்தரசே]
முப்பொழுது மொன்றாய் முழுது மிருப்போ(னே)
என் தலைவனா(ன) அதிரியானு தன்(னுடைய)
வ(ன்) மதத்தை மாத்தி (வாண)ளிந்(துக்காத்த) வனே
ஆகா மதமிகழ்ந்து அன்பாக வுன் மறைக்காய்
சாக மனங் கொடுத்(த) சருவ தயாபரனே
பாடுற்றிறந்த வெந்தன் பற்றாவிங்குன்னருளால்
ஓடு (ங்கல) மீதே உத்த நடுக்கடலில்
சனப் பசாசு செய்த யிடரகத்திக் காருமென்ன
வானதுனை யிங்கு மகிழ்ந்து வர விட்டீரோ
வந்தெமையிங் குன்னருளால் வலிய பசாசு செய்த
சிந்தை தனை மாத்திச் சிறந்த வழி காட்ட
கண்டேனடியாள் க(ரு) தரிய காட்சி யென்று
அண்டர் பிரானை அடிதொழுதா ளம்மாமை.
சொல்லத் துலையாத சோபனத் தோடே பணிந்து
அல்லத் துயர் தீந் தலை கதிரே(ான்) தோன்று (முன்னம்)
போக வென்று புண்ணியத்தாள் பொருந்து திருப்பதியில்
ஏகிக் கரை சேர்ந் திறங்கினாரெல்லோரும்
எல்லோருடனே யிறங்கிய நத்தாலியர் தான்
வல்ல சுத்தர் தன்னுடலை வைத்திருக்கும் வீடுதன்னில்
வந்து புகுந்து வணங்கிக் கரங்குவித்து
சிந்தை குளரத் தெரிசித்திருக்கையிலே
வாருதியில் வந்த வழங்கா அலுப்பாலே

தாரை குவித்துத் தரையிற் படுக்க லு(ற்றாள்)
கண்ணுறங்கும் வேளையந்தக் காரிகையாள் தன் தலைவன்
வண்ணதிரியானும் மகிழ்ச்சியுடன் தோன்றநின்று
ஆவித்துணையே அன்புடைய காதலியே
தேவியே என் தனக்கு செய் கருமஞ் சொன்னவளே

பாவத்தை விட்டுப் பரகதிக்கு ஆளாகி
ஆவது சொல்லி யென்(னை) (அம்ப)ரத்தி(ல் சேர்)த்தவளே
முப்பொருளு மொன்றான முன்றோனி யேசு (தன்னை)
எப்போதுங் கண்டிருக்க ஏத்த புத்தி சொன்னவளே
பொய் மதத்தை யெல்லாம் புறக்கணிக்க புத்தி சொல்லி

மெய் வேதந்தன்னை விரித்துரைத்த மெல்லியரே
ஆகா வழக்க மதா லருநரகிற் போகாமல்
வாகன யிப் புவியில் வாழ்வித்த மாதவமே
அன்பான தேவியரே ஆதிக்குகந்தவளே
இன்பான வென் தனக்கு யேத்த புத்தி சொன்னவளே

மண்ணிலிருந்து மகா சலிப்பை யுள்ளடக்கி
(எண்ணாத எண்)ணி இடஞ்ச(லுற்றுச் சாகாமல்)
வாகான விண்ணுலகில்) வரிசையுள்ள மோட்சத்தில்
ஏகாதி கர்த்த ரியேசு தனைக்கண்டிருப்போம்
பொய்ப் பாரிலுள்ள புகழும் பெருமைகளும்

தப்பா தழிந்து விடுஞ் சத்து மிதை யெண்ணாதே
பாரிற் பலனும் பல பொருளுந் தேடாமல்

சீரியவே கன் திருப் பாதங் கண்டு தொழ
அன்பே யென் கண்ணே அறிவுடைய வாயிறையே
இவ்பான தேவியரே யிப்புரியில் வாருமென்று
ஆனந்த வார்த்தை அதிரியாம் வந்து சொல்லி
வானந் தனிற் போனார் மங்கை மருண்டெழுந்து
நித்திரையிற் தன் தலைவ நேசமாய் வந்து சொன்ன
அத்தனையுந் தன்னோ டருகிருந்த பேர்க்குரைத்து
அங்கே யிருந்த அனைவரையு மன்புடனே
செங்கை கொண்டு கட்டிச் சிறந்து வினவிய பின்
காலை மடித்துக் கரங்குவித்து விண்ணோக்கி
கோல முகங்குளிரக் கூறுவதைக் கேட்டருளீர்
தானாயிருந்து தரணிதனில் மானிடனாய்
(பேனாள் எமை)க் காக்க (பேதினியில்) வந்தவனே
போஞ்சுப் பிலாத்து வென்னும் பொல்லாதான் கீழாகி
மாஞ்சு முயிர்த்து (வந்த) மாமரியாள் புத்திரனே
முன்னந் த(னி மறையின்) மோசமறச் சொன்னபடி
இன்னம் நடுத்தீர்க்க யிப்புவியில் வாரவனே
ஆதியே சோதி அனாதியே அம்பரனே
வேதனே ஆதி பிதா மெய்யான புத்திரனே
(கன்னி மரிதன்) மகனே காணரிய கர்த்தாவே
(உன்னையே தஞ்சம்) (எனவேயு)கந் தடியாள்
அன்புற்றேனய்யா வடியாளையுன்னருளால்
இன்புத் தழையாமல் லிங்கிருத்தி வைப்பானேன்
வேத பராபரனே விண்ணவர்க்கு நாயகமே
ஆதிக் கடவுளென்று மாண்டவனே கர்த்தாவே
என்னாத்து மத்தை யிரங்கியழையுமென்று

மின்னாளழுதிரந்து விரும்பியுரைத்தபடி
மங்கையுடலை விட்டு வளராத்துமம் பிரிந்து
சங்கையுள்ள வானந் தனைனோக்கிச் செல்லலுமே
ஆஞ்சுகளும் வானவரு மங்கேயணியணியாய்
தன்ம முள்ள பேர்கள் இம்மை தனிலிக் கதையி
லேதுகுத் தங்கண்டாலும் தீங்கையகத்திச்
சிறப்பாக (வேகரு)தி பாங்குடனே போத்தப்
பணிந்து கொண்டேனம்மானை.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| iii | 3 | பொருத்த | பெருத்த |
| vii | 3 | பண்டைட மக்கள் | பண்டைய மக்கள் |
| viii | 4 | பனுவல்கனின் | பனுவல்களின் |
| xviii | 20 | அமைகின்றன் | அமைகின்றன |
| xx | 9 | அவாகள் | அவர்கள் |
| xxiii | 4 | ,... | தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, 1963. |
| xxv | 23 | சீச்டர் | சீஷ்டர் |

# ERRATA

| Page | Line | Error | Correction |
|---|---|---|---|
| (1) | 10 | indentical | identical |
| (2) | 20 | historieal | historical |
| (8) | 17 | decoraion | decoration |
| (8) | 24 | in | is |
| (8) | 24 | is | in |
| (10) | 1 | almoat | almost |
| (10) | 3 | mainpulation | manipulation |
| (11) | 28 | fautly | faulty |
| (12) | 13 | inballadries | in balladries |
| (12) | 14 | ehivalrous | chivalrous |
| (12) | 24 | hat | that |
| (13) | 7 | constantinople | Constantinople |
| (13) | 8 | masumian | Masumian |
| (13) | 28 | composd | composed |
| (14) | 10 | caesar masumian | Caesaar Masumian |
| (14) | 15 | christ | Christ |
| (15) | 12 | investiqate | idvestigate |
| (15) | 33 | Her | He |
| (16) | 6 | thir | their |
| (16) | 15 | christ | Christ |
| (16) | 17 | Jesus christ | Jesus Christ |
| (16) | 16 | bclieved him | believed Him |
| (16) | 24 | srorow | sorrow |
| (17) | 20 | rches | riches |
| (20) | 5 | inher | in her |